# காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை



திரும்புதுறை



குடாக்கரை

DR.சே.சிவசண்முகராஜா M.D(S)

RECEIVED
0 8 JAN 2014
NOOLAHAM FOUNDATION

# காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை


**சே.சிவசண்முகராஜா M.D.(S)**

தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர்,

சித்தமருத்துவப் பிரிவு,

யாழ்.பல்கலைக்கழகம்



**199/1, கில்னர் லேன்,**

**யாழ்ப்பாணம், இலங்கை.**

Kaalaththai Ventru Nitkum Kantharodai

By Dr. S. Sivashanmugarajah M.D.(S)

First Edition : August, 2013

Copy right : Author

ISBN 978-955-44239-3-0

199/1, Kilner Lane,
Jaffna.
T.P.: 021 222 8320

Sivaranjanam Offset Printers,
Palaly Road, Kondavil.

Pages : xvi + 139

Price : 450/=

**குறிப்பு:** கந்தரோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் இந்நூலை முழுமையாகவோ, பகுதியாகவோ பிரசுரம் செய்வதற்கு ஆசிரியரின் அனுமதி பெறுதல் அவசியமில்லை. ஆயினும், அங்ஙனம் பயன்படுத்துபவர்கள் தமது பிரசுரத்தில் நூலாசிரியரின் பெயரைக் குறிப்பிடுவதுடன், நூலாசிரியருக்கும் ஒரு பிரதியை அனுப்பி வைத்தல் விரும்பத்தக்கது.

# என்னுரை

நான் ஒரு வரலாற்றாசிரியன் அல்ல என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், வரலாற்றுப் புகழ் மிக்க ஊரில் பிறந்தவன் என்பதையிட்டுப் பெருமிதங் கொள்பவன். அந்தவகையில் கந்தரோடையைப் பற்றி எழுத முற்பட்டுள்ளேன். கந்தரோடையைப் பற்றி எழுத முற்பட்டால் வரலாற்றைப் பற்றியும் எழுதியே தீர வேண்டும் என்பது தவிர்க்க முடியாத நியதியாகும். கந்தரோடையின் வரலாறு என்பது தனித்துக் கந்தரோடை என்ற ஊரின் வரலாறல்ல. கந்தரோடையின் வரலாறு பண்டைய ஈழம் அல்லது ஈழமண்டலம் அதாவது வட இலங்கையின் வரலாற்றுடன் மட்டுமன்றி முழு இலங்கையின் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்த ஒன்றாகும்.

நான் சிறுவனாக இருந்தபோதிருந்த கந்தரோடையை நினைத்துப் பார்க்கிறேன்! பெரும்பாலும் ஓலை வேய்ந்த மண் வீடுகள்! மிகக்குறைந்தளவில் பாவனையிலிருந்த துவிச்சக்கர வண்டிகள்! விரல் விட்டு எண்ணக் கூடிய சில வீடுகளில் தான் மின்சார விளக்குகள்! வானொலிப் பெட்டிகளின் பாவனையும் அருமையாகவே இருந்தது.

ஆனாலும், அந்தக் காலத்தில் சொந்த பந்தங்கள் அதிகமாக இருந்தன. வயதானவர்களுக்கும் குறைச்சலில்லை. சிறுவர்களாகிய எங்களைப் 'பிராக்காட்டுவதற்கும்', தூங்க வைப்பதற்கும் அவர்கள் நிறையக் கதைகள் சொன்னார்கள். அவை வெறும் ராஜா, ராணிக்கதைகள் மட்டுமல்ல. பரம்பரை பரம்பரையாக, செவி வழியாக அவர்கள் கேட்டு வந்த ஊரைப் பற்றிய கதைகள்! ஊர்க்கோவில்களைப் பற்றிய கதைகள்! அங்கு நடந்த அற்புதங்களைப் பற்றிய கதைகள்! ஊர்ப் பெரியவர்களைப் பற்றிய கதைகள்! அக்கால மக்களின் நம்பிக்கைகள்! இப்படிப் பல கதைகள்!

சிறுவர்களாகிய நாங்களும் சிலவற்றைத் திருப்பித் திருப்பிச் சொல்லும்படி கேட்டோம். அவர்களும் சிலவற்றைத் தாமாகவே திரும்பத் திரும்பச் சொன்னார்கள். அவை மனதிற் பதிந்து, ஆழ்மனதிற் புதைந்து போயின.

காலம் மெதுவாக மாறியது. நாங்களும் வளர்ந்து வந்தோம். கல்வி பயின்றோம். கருத்தை அதிற் செலுத்தி னோம்.

உள்நாட்டுப் போர் வந்தது. ஷெல்களும், குண்டுகளும் ஊரில் விழுந்தன. குருவிக்கூடு கலைந்தது போல ஊர் சிதறி ஓடியது. தமது இறுதிச் சடங்கு சங்கம் புலவு மயானத்தில் என்றிருந்தவர்களின் கனவு கனவாகவே போய்விடக் கனத்தை யிலும், கனடாவிலும், கண்காணாத நாடுகளிலும் அடக்க மானார்கள்: அடங்கிப் போனார்கள்.

ஊரை விட்டு விலகியிருக்கும்போது ஊர்ப்பற்று மிகுந் தெழுவது வழக்கம். இடம்பெயர்ந்து சென்ற பலர் தமது ஊர்களை மறக்க முடியாமல், தங்கள் ஊரைப்பற்றி, அங்கு தாம் வாழ்ந்த காலத்து இனிய நினைவுகளைப் பற்றி எழுத விரும்பினார்கள். சிலர் எழுதிப் புத்தகமாகவும் வெளியிட் டார்கள்.

ஏனோ தெரியவில்லை, கந்தரோடையைப் பற்றி இது வரை யாரும் எழுத முன்வரவில்லை. பழம்பெருமையும் வர லாற்றுச் சிறப்பும் மிக்க ஊரைப் பற்றி எழுதுவதென்றால் தயக்கம் ஏற்படத்தானே செய்யும்! எனக்கும் அந்தத் தயக்கம் ஏற்பட்டது.

கந்தரோடையைப் பற்றி சிறுபிள்ளைத்தனமாக எழுதி அதன் பெருமைக்குப் பங்கம் விளைவித்து விடுவேனோ என்ற அச்சமும் எழுந்தது.

ஆனாலும், கந்தரோடையைப் பற்றிக் கொஞ்சமாவது எழுதிவிட வேண்டும் என்ற ஆர்வம் அச்சத்தை வென்றது!

இன்று கந்தரோடை வெகுவாக மாறிப் போய்விட்டது. போர்க்காலத்துக்கு முன்பிருந்த கட்டமைப்பு வெகுவாகச் சிதைந்து போயுள்ளது. கந்தரோடையில் பரம்பரை பரம்பரையாக வசித்த பலரும் வெளியூர்களிலும், வெளிநாடுகளிலும் தம்மை ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளனர்.

“வந்தாரை வாழ வைக்கும்” கந்தரோடை மக்களிற் பலர் வந்தவர்களை வாழ வைத்து விட்டுத் தாம் வேறிடங் களுக்குச் சென்று விட்டனர்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் கந்தரோடையைப் பற்றி, அதன் குறிச்சிகள், ஆலயங்கள், பாடசாலைகள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் பற்றி ஒரு சிறு பதிவை ஏற்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்குடன் "காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை" என்ற இச்சிறு நூலை எழுதி யுள்ளேன். கந்தரோடை பற்றி நான் கேட்டவை, கண்டவை, படித்தவை என்பன இந்நூலாக்கத்துக்கு எனக்கு உறுதுணை யாக இருந்தன.

பொதுவாக, ஒருவர் தமது ஊரைப் பற்றி எழுதும் போது அதன் மீது கொண்ட பற்றுக் காரணமாக அதன் பெருமையைச் சற்று மிகைப்படுத்தி எழுதிவிடுவதைக் காண லாம். ஆனால், கந்தரோடையைப் பற்றி எவ்வளவு தூரம் எடுத்து எழுதினாலும் அதன் பெருமையை முழுமையாக எடுத்துரைக்க முடியாது என்பதே உண்மையாகும்.

இந்நூலை எழுத ஆரம்பித்ததும் மீண்டும் ஒரு தடவை நான் பிறந்த ஊரைச் சுற்றிப்பார்த்தேன். ஒவ்வொரு இடமும் பல கதைகளை வரலாறுகளை என்னுடன் மௌனமொழியில் பேசின. அவற்றையெல்லாம் மனதில் பதித்துக் கொண்டேன்.

சிறுவயதில் கந்தரோடை பற்றிய வரலாற்றுச் சம்பவங் களை எனக்கு எடுத்துக் கூறிய எனது ஆசிரியர்களான

சி.பொன்னம்பலம் (ஆதவன்) (யாழ்.தொல்லியற் கழகத்தின் முதல் தலைவராக இருந்தவர்), த.வல்லிபுரம் ஆகியோரை ஒருகணம் நன்றியுடன் நினைவிற் கொள்கிறேன்.

வாசகர்கள் இந்நூலில் உள்ள வரலாற்றை வரலாறாக எடுத்துக் கொண்டாலும் சரி அல்லது கதையாக எடுத்துக் கொண்டாலும் சரி எனக்கு ஆட்சேபனையில்லை. ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளது போல கந்தரோடை பற்றி நான் கேள்விப் பட்டவை, கண்டவை, படித்தவை என்பவற்றைத் தொகுத் தளித்துள்ளேன்.

இந் நூலை எழுதிய போது கந்தரோடையின் சகல பகுதிகளையும் நான் சுற்றிப் பார்த்த போது என்னுடன் கூட வந்து உதவியதுடன், தேவையான புகைப்படங்களை எடுப்ப திலும் உதவிய எனது புதல்விகள் சி. அபிராமி, சி. அநுபமா ஆகியோருக்கும், எனது சகோதரன் சே.சிவசுப்பிரமணியசர்மா வுக்கும் எனது நன்றிகள்.

கந்தரோடை பற்றிய தகவல்கள் தந்துதவியவர்களுக் கும், வாழ்த்துரை நல்கிய யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை அதிபர் திரு. கா. சசிதரன் அவர்களுக்கும், யா/கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் திரு.இரா. ஈஸ்வரதாசன் அவர்களுக்கும், வலிதெற்கு, பிரதேச செயலர், திரு. மு.நந்தகோபாலன் அவர்களுக்கும், வலிதெற்கு பிரதேச சபைத் தவிசாளர் திரு.தி.பிரகாஸ் அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி, வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ச.சத்தியசீலன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

கந்தரோடையைப் பற்றிய ஒரு முழுமையான நூலாக இது அமைந்துள்ளது என்று கூறமுடியாது. கந்தரோடையைப் பற்றிப் பரந்த அளவில் சரித்திர, சமூக, பூகோளவியல் ரீதியிலான அடிப்படையில் விரிவான முறையில் எழுதப்படல் வேண்டும். அதற்கு இச்சிறு நூல் முதல்நூலாக, ஒரு உந்து சக்தியாக அமையும் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

*சே. சிவசண்முகராஜா*
10.08.2013

## யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி

# வழங்கிய அணிந்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் Dr. சே. சிவசண்முகராஜா அவர்களால் எழுதப்பட்ட "காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை" எனும் நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். நல்லதொரு தலைப்பை நூலுக்கு வழங்கியுள்ளமை பாராட்டுதற்குரியது.

சமீபகாலமாக இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்கள் சார்ந்த ஊர்கள் பற்றிப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. நீர்வேலி, கோப்பாய், வேலணை, புங்குடுதீவு என இவற்றை விரித்துக்கொண்டே போகலாம். வடமாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் இப்போக்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. நாட்டின் அரசியல் சூழலும், இடப்பெயர்வும் தாம் வாழ்ந்த ஊரின் அடையாளங்களை, அனுபவங்களை, நினைவுகளை, ஈடுபாட்டை, பற்றுதலை எடுத்துக்காட்டும் வகையில் பல நூல்கள் வெளிவரக் காரணமாய் அமைந்துள்ளன. அந்த வகையில் கந்தரோடைக் கிராமத்தில் பிறந்த Dr. சே. சிவசண்முகராஜா ஊர் மீது கொண்ட காதலின் காரணமாக காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை எனும் நூலைப் படைத்துள்ளார்.

அறிமுகம், கந்தரோடையின் வரலாறு, நீர்வளம், வழுக்கையாறு, புவியியல், குறிச்சிகள், ஆலயங்கள், கல்வி நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள், புதைபொருள் ஆய்வுகள், பௌத்த மத சின்னங்கள், புகழ்பூத்த பிரமுகர்கள் என்ற முக்கிய தலைப்புக்களில் தான் அறிந்தவற்றை மிகப் பற்றுதலுடன் நூலில் வெளிப்படுத்தியுள்ளார். பின்னிணைப்பாக கந்தரோடையின் பிரதான கோயில்கள் பற்றிய ஊஞ்சல் பாக்களையும், முக்கியமான இரண்டு பாடசாலைகளின் பாடசாலைக் கீதங்களையும், மற்றும் உசாத்துணை நூற்பட்டியலையும் இணைத்துள்ளார்.

தான் ஒரு வரலாற்று ஆசிரியன் இல்லை என்பதனை ஆரம்பத்திலே குறிப்பிட்ட நூலாசிரியர் தான் அறிந்த, நம்பிய கருத்துக்களை நூலில் குறிப்பிட்டிருப்பது அவரை விமர்சனங் களில் இருந்து பாதுகாத்துள்ளது. கந்தரோடை பற்றி ஒரு வாசகன் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படையான, முக் கியமான விடயங்களை இலகு தமிழில் அவர் எழுதியுள்ளார். அண்ணல் மகாத்மாகாந்தி அவர்கள் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு கால் பதித்ததையும், அவர் ஆரம்பித்த கதர்ப் போராட்டத்திற்கு நிதி சேகரித்ததையும் அவர் அங்காற்றிய உரையையும் நூலில் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

இலங்கைத் தமிழர் வரலாற்றில் இதுவரை அறியப் படாத பல்வேறு முக்கிய தகவல்களை கந்தரோடைப் பிரதேசம் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதில் மாற்றுக் கருத்துக்கள் எவையும் இருக்க முடியாது. தமிழர் வரலாற்றில் இதுவரை அறியப்படாத பல பிரதான விடயங்களை எதிர் காலத்தில் கந்தரோடைப் பகுதியில் மேற்கொள்ளப்படும் பக்கச் சார்பற்ற அகழ்வாய்வுகள் மூலம் பெறமுடியும். இப் பிரதேசத்தின் ஆதிக்குடியிருப்புக்கள், நாகரிகம், அரச உரு வாக்கம், தலைநகரமாற்றம், சேர, சோழ, பாண்டிய உறவுகள், பௌத்த தொடர்புகள், கடல் கடந்த வாணிபத் தொடர்புகள், இயற்கை அனர்த்தங்கள் இப்படிப் பலவற்றை நாம் கந்த ரோடை அகழ்வாய்வுகள் மூலம் பெறமுடியும். இவ்வாறான வரலாற்று முக்கியத்துவத்தை உடைய பிரதேசத்தைப் பற்றிய நூல் ஒன்றை Dr.சே.சிவசண்முகராஜா எழுதி யுள்ளமை பாராட்டுதற்குரியது.

அவர் எழுத்துப்பணி தொடரவும், நல்லன எல்லாம் பெறவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

***பேராசிரியர் ச.சத்தியசீலன்*** *M.A.Ph.D*
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
மற்றும் பீடாதிபதி.

உயர்பட்டப் படிப்புக்கள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

# கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
# அதிபரின் வாழ்த்துரை

காலத்துக்குக் காலம் பல்வேறு அறிஞர்கள் ஈழத்து வரலாற்றையும் அவ் வரலாற்றில் தொன்மை வாய்ந்த முதற் தலைநகரான கந்தரோடையையும் பற்றிப் பல நூல்களில் எழுதியுள்ளார்கள். அந்த நூல்களிலெல்லாம் கந்தரோடை பற்றிய வரலாறு ஒரு பகுதியாகவோ அல்லது ஒரு சிறிய அத்தியாயமாகவோதான் காணப்படுகிறது.

ஆனால் யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளரான சித்த மருத்துவ கலாநிதி சே. சிவசண்முகராஜா அவர்கள் "காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை" என்ற தலைப்பில் தனியொரு நூலாகக் கந்தரோடையை மையமாக வைத்து வரலாற்று அடிப்படையில் எழுதியிருப்பது தனித்துவமான விடயமாகும்.

தான் பிறந்து, வளர்ந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க கந்தரோடை பற்றி நூலாசிரியர் அவர்கள் மிகுந்த பற்றுடன் அலசி ஆராய்ந்து எழுதியிருப்பதானது அவர் கந்தரோடை மண் மீது கொண்டுள்ள ஊர்ப் பற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஒரு வரலாற்று நூலை எழுதும் ஆய்வாளனின் வெற்றி எங்கே இருக்கிறதென்றால் எல்லோரும் அறிந்தும் தெரிந்தும் வைத்திருக்கின்ற ஒரு வரலாற்றை அதன் அடிப்படைகள் மேலும் வலுவடையும் விதத்தில் நிறுவிக் காட்டும் பன்முக நோக்கில்தான் தங்கியிருக்கிறது. அந்த வகையில் கந்தரோடை பற்றி நாம் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் அறிந்துதான் இருக்கிறோம். ஆனால் நூலாசிரியரோ கந்தரோடை வரலாற்றை அதன் அடிப்படைகள் மேலும் வலுவடையும் விதத்தில் பன்முக நோக்குப் பார்வையில் நிறுவிக் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்

வரலாறு என்பது மனித இனத்தின் அடையாளச் சுவடாகும். நிலையற்ற உலக வாழ்க்கையில் காலத்தை வென்று நிற்கும் மனித முயற்சிகள் வரலாற்றுச் சுவடாகின்றன. அந்த வகையில் நூலாசிரியரின் இந்த முயற்சியும் வரலாற்றுச் சுவடாகின்றது.

நூலாசிரியர் இதுவரை தான் சார்ந்த மருத்துவத் துறை தொடர்பான முப்பத்தொரு நூல்களை எழுதியுள்ளதுடன், பல விருதுகளையும் பெற்றுள்ளார். அந்த வகையில் அவரால் முதலாவதாக எழுதப்பட்ட "சித்த மருத்துவ நூல்கள் ஓர் அறிமுகம்" என்ற நூல் அரச சாகித்திய மண்டலப் பரிசு, கொழும்பு தமிழ்ச் சங்கப் பரிசு என்பவற்றையும் "சுதேச மருத்துவக் கையகராதி" என்ற நூல் அரச கரும மொழித் திணைக்களப் பரிசையும், "சித்த மருத்துவ மூலதத்துவம்" என்ற நூல் வடக்கு கிழக்கு மாகாண சபையின் உயர் கல்விக் கான விருதையும், "இந்து ஆலயங்களில் மருத்துவ சுகா தாரம்" என்ற நூல் இலங்கை இலக்கியப் பேரவையின் விருதையும் பெற்றுள்ளன. மருத்துவத் துறையில் உயரிய பல விருதுகளைப் பெற்ற ஓர் எழுத்தாளர் வரலாற்றுத்துறை சார்ந்த நூலொன்றை அதுவும் குடா நாட்டின் முக்கிய தொல்லியல் மையமாகத் திகழும் கந்தரோடை பற்றி எழுதி யிருப்பது பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

அந்த வகையில "காலத்தை வென்று நிற்கும் கந்த ரோடை" என்ற நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைவதுடன், நூலாசிரியர் மேலும் பல நூல் களைத் தொடர்ந்து எழுதி வெளியிட வேண்டும் என்றும் வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிபர்,

***திரு. கா.சசிதரன்***

யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.

# கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபரின் வாழ்த்துரை

"காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை" என்னும் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கக் கிடைத்த வாய்ப்பைப் பெரும் பாக்கியமாகக் கருதிக்கொண்டு எழுதத் தொடங்கு கின்றேன்.

எனது கல்வியைப் பெற்றுக்கொண்டதும், இன்று அதிப ராகப் பணியாற்றுவதுமான ஸ்கந்தவரோதயக் கல்லூரி அமைந்திருக்கும் ஊரின் பெருமையையும் கல்லூரியின் பெருமையையும் கூறும் நூலுக்கு வாழ்த்துரை எழுதுவது பெருமகிழ்ச்சியைத் தருகிறது.

கந்தரோடைக் கிராமம் பற்றியும் அங்கு கிடைக்கின்ற தொல்பொருட்கள் ஈழத்து வரலாற்று நூல்களிலும், ஈழத்து இலக்கிய வரலாற்று நூல்களிலும் முதன்மைப்படுத்தப்பட்ட பல செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவற்றை வாசிப்பவர் களுக்குக் கந்தரோடை பற்றி முழுமையாக அறிய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுவது இயல்பானதே. எனினும் அந்த ஆர்வத்தைத் தீர்க்கக்கூடியதாக கந்தரோடை பற்றிய முழுமை யான ஆய்வைக் கொண்ட நூல் எதுவும் இதுவரை வெளிவர வில்லை.

இந்தக் குறையைத் தீர்க்கக் கூடியதாகக் "காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை" என்னும் இந்நூல் வெளிவரு கின்றமை தமிழ்கூறும் நல்லுலகிற்குக் கிடைத்த வரப்பிரசாத மாகும்.

இந்நூல் கந்தரோடையில் அயற்கிராமங்கள், பெயர்க் காரணங்கள், கந்தரோடையின் குறிச்சிகள் முதலிய பல தலைப்புக்களில் அமைந்துள்ளது.

சுன்னாகம் என்ற ஊர்ப் பெயர்க் காரணத்தை சுல் (வெள்ளி) + நாகம் (மலை) எனப் பிரித்து வெள்ளிமலை என்ற பொருளிலேயே சுன்னாகம் வழங்கப்படுகிறது என்பது வழமையான விளக்கம் ஆகும். ஆனால் நூலாசிரியரோ கதிர மலை என்ற சிறிதாக உயர்ந்த பகுதியைத் தவிரச் சுன்னா கத்தில் வேறுமலைகள் இல்லாததால் வெள்ளிமலை என்ற கருத்தை ஏற்கமுடியாது என்றும் சுன்னாகம் என்ற ஊர்ப் பெய ருக்கு புதிய காரணம் கண்டுபிடிக்கப்படவேண்டும் என்றும் வாதிடும் போது அவரது ஆய்வுத்திறமையை அவதானிக்க முடிகிறது.

மேலும் கந்தரோடை இராசதானிக்குத் தேவையான பொருள்கள் கப்பல்கள் மூலம் கடற்கரைக்குக் கொண்டுவரப் பட்டுப் பின்னர் சிறிய மரக்கலங்கள் மூலம் வழுக்கையாற்றி னூடாகக் கந்தரோடைக்கு வந்திருக்கலாம் என்ற செய்தி எமது சிந்தனையைத்தூண்டுவதாக உள்ளது. 1927 இல் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு மகாத்மாகாந்தி வந்த செய்தி யைத் தனிக்கட்டுரையில் கூறுவதுடன், அவரது பேச்சின் மொழி பெயர்ப்பை முழுமையாகத் தந்துள்ளமையும் சிறப்பம் சமாக உள்ளது.

எனவே தொகுத்து நோக்கும் போது கந்தரோடை பற்றிய ஓரளவிற்கேனும் முழுமையான தகவல்களைத் தரும் இந்நூல் காலத்தின் தேவையாகும். கடந்த கால வரலாற்றுத் தொகுப்புக்களின் ஆவணப்படுத்தலுமாகும். இந்நூலை எளி மையான மொழிநடையில் தந்த திரு.சே.சிவசண்முகராஜா பாராட்டுக்குரியவர். அவர் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

அதிபர், **திரு. இரா. ஈஸ்வரதாசன்**

யா/கந்தரோடை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## வலிகாமம் தெற்குப்

# பிரதேச செயலரின் வாழ்த்துரை

ஒவ்வொரு மனிதனுக்கும் தான் பிறந்த ஊர் என்பது நேசத்திற்கும் மதிப்பிற்கும் உரிய ஒன்றாகவே இருந்து வருகின்றது. என்னதான் தேவைகளாலும், அழுத்தங்களாலும் இடம்விட்டு இடம்மாறிப் போனாலும் சொந்த மண்ணின் மீதான வேர்கள் என்னவோ மண்ணைப்பிடித்தபடிதான் இருக்கும். "சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப் போலவருமா? என்ற பாடல் வரிகள் நம் எல்லோருக்குமே பொருத்தமானது தான்.

அந்த வகையில்தான் "காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை" நூலாசிரியர் சே. சிவசண்முகராஜாவும் தான் பிறந்த மண்ணை காலத்தின் பதிவு ஒன்றினுள் கொண்டு வந்திருக்கின்றார். கதைகளாகவும், பார்த்தவைகளாகவும் நினைவில் பதிந்த சம்பவங்களை மையமாகக் கொண்டு கந்தரோடைக் கிராமத்தைப் பற்றி பதிவு செய்திருக்கின்றார்.

இப்படியான பதிவுகள் இன்றைய காலத்தின் தேவையாகவும், நியதியாகவும் இருக்கின்றன எனக் கூறுவதில் தவறொன்றுமில்லை. நம் மூதாதையர்களின் பெருமைகளை, வரலாற்றை, நாளைய நம் சந்ததியினருக்கு பாதுகாத்துக் கையளிக்க வேண்டியது காலத்தின் தேவையன்றோ! காலத்தின் தேவை கருதி ஆற்றப்பட்டுள்ள இப்பணி ஞாலத்தின் மாணப் பெரிது.

*திரு. மு.நந்தகோபாலன்*

பிரதேச செயலர்,
வலிதெற்கு பிரதேச செயலகம்,
உடுவில்.

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை

# தவிசாளரின் வாழ்த்துரை

"காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை" எனும் தொன்மை பகரும் நூல் எமது வலிகாமம் தெற்கு மண்ணிலிருந்து வெளிவருவது போற்றத்தக்கதும், பாராட்டத்தக்கதும் ஆகும். பல்வேறு சிரமங்களின் மத்தியில் காலத்தின் தேவை கருதி சே.சிவசண்முகராஜா அவர்கள் இந்நூலினை எமக்களிப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். யாழ். மண்ணில் உயிர்ப் பரிணாமம் நடந்தமைக்கான ஆதாரபூர்வமாக பெருங்கற்காலப் பண்பாட்டைப் பறைசாற்றும் இடமாக இருக்கும் கந்தரோடையின் தொன்மையையும், எம் தமிழ் இனத்தின் மகிமையையும் மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தி எம் இளஞ்சந்ததியினருக்குக் கையளிப்பது மிகப்பாரியதோர் பொறுப்பாகும். இதனை நூலாசிரியர் செவ்வனே நிறைவேற்றியுள்ளார்.

எம் இனத்தின் வரலாறு திரிவுபடுத்தப்பட்டும், மறைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் அவற்றின் உண்மை நிலைகளை எம் மக்கள் அறியத் தூண்டுகோலாகும் இந்நூல் என்பதில் ஐயமில்லை. சிலர் முன்னுக்குப்பின் நிகழ்ந்தவற்றையும் கண்டறியப்பட்டவையையும் ஒன்றிணைத்தும், திரிவுபடுத்தியும் குறித்ததொரு மதத்தின் பிரதிபலிப்பாகக் காட்டமுனைவது வேதனைக்குரியது. இங்குள்ள மூலாதாரம் அனைத்தும் தமிழ்பிராமி வடிவுடைய எழுத்துக்களுடனும் தமிழ்நாட்டில் கண்டறியப்பட்ட தொல்பொருள் சான்றுகளுடனும் ஒத்ததாகவே இருக்கின்றது. இதனை நூலாசிரியர் மிகத் தெளிவாக முயற்சித்து வெளிப்படுத்தி பல்வேறுபட்ட ஆதாரங்களையும் இந்நூலில் காண்பித்துள்ளார்.

பல்வேறுபட்ட தரப்பினர் இவை சம்பந்தமான ஆய்வினை மேற்கொண்டபொழுதும் அவை மக்களுக்கு தெளிவாக விளங்கிக்கொள்ளத்தக்க வகையில் அவர்தம் கைகளுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் இந்நூல் அனைத்தையும் தாண்டி வெற்றிபெற்று காலத்தின் பதிவாகும் என்பது தெளிவு. கந்தரோடையை அண்மித்துள்ள ஆலயங்கள், அவற்றின் பொன் ஊஞ்சல் திருப்பாடல்கள் அருகிலுள்ள பாடசாலைகளின் கீதங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளமை அவற்றுக்குரிய பெருமையை மேலோங்கச் செய்கிறது. ஆசிரியரின் பணி சிறக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க எம் இனிய தமிழ் நெஞ்சங்கள் சார்பில் வாழ்த்துகின்றேன்.

***திரு. தி. பிரகாஷ்,***

தவிசாளர்,

வலிதெற்கு பிரதேசசபை,

சுன்னாகம்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | நுழைவாயில் | 01 |
| 02. | அறிமுகம் | 04 |
| 03. | கந்தரோடையின் அயற்கிராமங்கள் | 06 |
| 04. | கந்தரோடை - பெயர்க்காரணம் | 10 |
| 05. | நீர்வளம் | 18 |
| 06. | வழுக்கையாறு | 23 |
| 07. | கந்தரோடையிலுள்ள குறிச்சிகள் | 28 |
| 08. | கந்தரோடை மக்கள் | 52 |
| 09. | கல்விச் செல்வம் | 55 |
| 10. | கந்தரோடையில் மகாத்மா காந்தி | 64 |
| 11. | ஆலயங்கள் | 68 |
| 12. | கந்தரோடையில் புதைபொருள் ஆய்வுகள் | 80 |
| 13. | கந்தரோடை மன்னர் | 85 |
| 14. | கந்தரோடையும் பௌத்தமதச் சின்னங்களும் | 90 |
| 15. | பொதுவான விடயங்கள் சில | 94 |
| 16. | கந்தரோடை மண்ணின் புகழ் பூத்த மாந்தர்கள் | 100 |
| 17. | முடிவுரை | 107 |
| * | சுருக்கக் குறியீட்டு விளக்கம் | 112 |
| * | உசாத்துணை நூல்கள் | 113 |


## பின்னிணைப்பு


| | | |
|---|---|---|
| 01. | அங்கணம்மைக்கடவை ஸ்ரீ மீனாட்சியம்மை பொன்னூஞ்சல் | 118 |
| 02. | அருளானந்தப் பிள்ளையார் திருவூஞ்சல் | 123 |
| 03. | வத்தாக்கை விசாலாட்சியம்மை திருப்பொன்னூஞ்சல் | 126 |
| 04. | வற்றாக்கைப்பதி ஸ்ரீ விசாலாக்ஷிஅம்பாள் ஸமேத விஸ்வநாதஸ்வாமி திருவூஞ்சல் | 129 |
| 05. | கொற்றன் கட்டுப்பதி மேவும் ஸ்ரீ அம்பலவாண சுவாமி வைரவ சுவாமி திருப்பொன்னூஞ்சல் | 132 |
| 06. | தமிழ்க் கந்தையா வித்தியாசாலை - பாடசாலைக்கீதம் | 135 |
| 07. | ஸ்கந்தவரோதயக் கல்லூரி - கல்லூரிக்கீதம் | 136 |
| 08. | ஆசிரியரின் நூல்கள் | |

# ०१. நுழைவாயில்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானிலும் நனி சிறந்தனவே" என்ற ஆன்றோர் வாக்குக்கமைய கந்த ரோடை மண்ணில் பிறந்த ஒவ்வொருவருக்கும் அவர்கள் பிறந்த மண் நனி சிறந்ததாகவே அமைந்துள்ளது. இம் மண்ணில் பிறந்த ஒவ்வொருவருமே தாம் பிறந்த ஊரைப் பற்றிப் பெருமையும் , பெருமிதமும் கொள்ளத்தக்கவர்களே!

கந்தரோடையானது இலங்கைத் திருநாட்டின் மிகப் புராதன ஊர்களில் ஒன்றாகும். அனுராதபுரம் போன்று வட பகுதியின் முக்கிய தலைநகராக இது கருதப்படுகிறது. (சிற்றம்பலம் 1993: 3)

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே கந்த ரோடை பெருமைக்குரிய இடமாக விளங்கியுள்ளது.

"கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணப் பகுதியில் மக்கள் குடியேற்றம் இருந்தது என்பதைத் தொல் பொருட் சான்றுகள் திட்டவட்டமாக நிறுவுகின்றன. கந்த ரோடைப் பிரதேசத்தில் குடியேறியிருந்த மக்கள் பண்பாட்டில் முன்னேற்றம் அடைந்தவர்களாக கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலிருந்து பிற நாடுகளுடன் தொடர்பு கொண்டு உலோகத்தின் உபயோகத்தையும் அறிந்து வாழ்ந்தனர் என இதே சான்றுகளைக் கொண்டு அறியலாம்." என்று எடுத்துக் கூறியுள்ளார் கா.இந்திரபாலா அவர்கள் ( 2006: 105).

“கந்தரோடையிற் புராதனமான குடியிருப்பு நகரம் இருந்துள்ளமை ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. கந்த ரோடையில் ஏற்பட்ட பூர்வீகமான குடியேற்றம் கி.மு.500 ஆண்டு களுக்கு முற்பட்டது. அது தென்னிந்தியாவில் நிலை பெற்ற பெருங்கற் பண்பாட்டு மக்கள் பரவியமையால் ஏற்பட்டது. குடி யிருப்புகள் செறிந்திருந்த இடம் கந்தரோடை” என்று வரலாற் றுத்துறைப் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் சமீபத்திய ஆய்வுகளின் பெறுபேறுகளை எடுத்துக் கூறியுள்ளார்.(2011: 25)

வட இலங்கை அல்லது யாழ்ப்பாண இராச்சியத்தின் முதலாவது தலைநகராக விளங்கிய சிறப்புக்குரியது எமது ஊர்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கந்தரோடையைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாண அரசர்கள் ஆட்சி செலுத்தியுள்ளனர். சோழ, பாண்டிய, சிங்கள மன்னர்கள் இந் நகருக்கு வருகை தந்துள்ளனர். அவர்களும், அவர்களின் அரச அதிகாரிகளும், படைவீரர்களும் எமது மண்ணிலே பவனி வந்துள்ளனர். மேலும், எத்தனையோ இளவரசர்களும், இளவரசிகளும் இந்த மண்ணிலே உலாவியிருப்பார்கள்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலைக் கட்டுவித்த பெருமைக்குரிய சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியின் புகுந்த வீடும் கந்தரோடையே!

கந்தரோடை பற்றிய சு.வித்தியானந்தன் (முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்) அவர்கள் 1965 ஆம் ஆண்டு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் தாபகர் நினைவுப் பேருரையில் கூறிய பின்வரும் கருத்துக்களும் கவனத்திற் கொள்ளத்தக்கன.

"ஒரு காலத்திலே ஈழத்தின் தலைசிறந்த அரசியல் தலைநகரமாக விளங்கியது கந்தரோடை. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே இந்தியாவுடனும், உரோமாபுரியுட னும் வணிகம் நடத்திய நகர் கந்தரோடை. இங்கு கண்டெடுக் கப்பட்ட உரோம நாணயங்களும், வியாபாரப் பொருட்களும் கந்தரோடையின் சிறப்பினை, வளத்தினைச் சான்றுகளுடன் எமக்குக் காட்டுகின்றன. இந்து பௌத்த ஒற்றுமையின் அறி குறி கந்தரோடை. சிங்கள தமிழ் ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டு கந்தரோடை. கிறிஸ்துவுக்கு 5 நூற்றாண்டுகளுக்கு முன்பே இரு பண்பாடுகளும் இங்கு இணைந்து கிடந்தன. பௌத்தர்கள் இந்நகரைக் கத்தரகொட என்றனர்: தமிழ் இந் துக்கள் கயற்கண்ணி என அழைத்தனர். இந்துக்களும் பௌத் தர்களும் போற்றும் பத்தினித் தெய்வம் இங்கு வணக்கத்துக் குரிய தெய்வமாக இருந்தது. பௌத்த விகாரையும் இந்து ஆலயமும் பிணக்கமின்றி ஓங்கி நின்றன." (ஸ்கந்தா: 1969:31)

கந்தரோடையில் பௌத்தமதம் வளர்ச்சி பெற்றிருந்த தாகவும், பௌத்த விகாரை ஒன்று இங்கு இருந்ததாகவும் சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்ற அதேவேளை வேறு சில வர லாற்றாசிரியர்கள் அவ்விதமில்லை என்றுங் கூறுகின்றனர். சில வரலாற்றாசிரியர்கள் இங்கு பௌத்தமதம் இருந்ததை ஏற்றுக் கொள்கின்ற அதே நேரத்தில் அங்ஙனம் இவ்விடத்தில் இருந்த பௌத்தர்கள் தமிழ்ப் பௌத்தர்களாயிருத்தல் வேண் டும் என்றுங் கூறுகின்றனர்.

கந்தரோடையில் முற்காலத்தில் சிவலிங்கவழிபாடு, முருகவழிபாடு, ஆஞ்சநேயர்வழிபாடு என்பனவும் சிறப்பாக நடைபெற்றுள்ளன என்பதை அறியக் கூடியவாறுள்ளது.

எனவே, பண்டுதொட்டு இன்றுவரை வரலாற்றுப் பொக் கிஷங்கள் பலவற்றைத் தன்னகத்தே சுமந்து கொண்டு ஈழத் தில் திராவிடராம் தமிழரின் தொன்மைக்குச் சான்றாக நிலைத்து - காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை என்னும் எமது ஊரைப்பற்றிய சில தகவல்களை - வரலாற்றுண்மைகளை - கதைகளை இந்த நூல் வாயிலாகப் பகிர்ந்து கொள்வோம்.

# 02. அறிமுகம்

| | | |
|---|---|---|
| பெயர் | - | கந்தரோடை |
| நாடு | - | இலங்கை |
| தாய் | - | குமரிக்கண்டம் |
| தோற்றம் | - | தெரியாது |
| அமைவு | - | 9' 45' 0" வட அகலக்கோடு<br>8.0' 0' 20" கிழக்கு நெடுங்கோடு<br>கடல் மட்டத்திலிருந்து 28' - 30' உயரம் |
| மாகாணம் | - | வடமாகாணம் |
| மாவட்டம் | - | யாழ்ப்பாணம் |
| பிரதேச செயலர் பிரிவு | - | வலிகாமம் தெற்கு |
| கிராமசேவகர் பிரிவு | - | J / 200 |
| பிரதேச சபை | - | வலிகாமம் தெற்குப் பிரதேச சபை |
| வட்டாரம் | - | வட்டாரம் - 05 |
| நிலப்பரப்பு | - | 3.2 சதுர கிலோமீற்றர். |
| மக்கள் தொகை | - | 1647 (2012 ஆம் ஆண்டு)<br>ஆண்கள் - 782<br>பெண்கள் - 865 |

இங்குள்ள மக்களின் தாய் மொழி - தமிழ்

பிரதானமான சமயம் - சைவசமயம்

சைவமதத்தவர் - 1607

கிறிஸ்தவ மதத்தவர் - 40

பிரதான தொழில் - விவசாயம்

சிறப்புத்தகைமைகள் - புராதன தலைநகர், வழுக்கை யாறு

கந்தரோடையானது இலங்கையின் வடமாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில், யாழ்ப்பாணத்துக்கு வடமேற்குத் திசையில், யாழ்ப்பாண நகரிலிருந்து ஏறத்தாள 12 கிலோ மீற்றர் தூரத்தில், வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள ஓர் ஊர் ஆகும்.

இது முன்னர் உடுவில் கோவிற்பற்றுப் பிரதேசத்தில் ஓர் ஊராக இருந்தது.

கந்தரோடையானது ஒரு காலத்தில் பெருநகராக, பேரூராக விளங்கிய போதிலும் தற்காலத்தில் இதன் எல்லைகள் மிகவும் சுருங்கி வடக்கே மல்லாகம், கிழக்கே சுன்னாகம், தெற்கே உடுவில், தென்மேற்கே சங்குவேலி, மேற்கே மாசியப்பிட்டி என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் ஆறில்லாக்குறையைப் போக்க வென்றமைந்த வழுக்கையாறு / வழுக்கியாறு இவ்வூரினுடாகவே பாய்கின்றது.

# ௦௩. கந்தரோடையின் அயற்கிராமங்கள்

கந்தரோடையின் அயற்கிராமங்களாகவும் அதன் எல்லைகளாகவும் கிழக்கே சுன்னாகம், வடக்கே மல்லாகம், அளவெட்டி, மேற்கே மாசியப்பிட்டி, தெற்கே சங்குவேலி, உடுவில் என்பன அமைந்துள்ளன.

கந்தரோடை இராசதானியாக இருந்த காலத்தில் இதன் எல்லைகள் இவ்வயற்கிராமங்களின் நிலப்பரப்புகளின் கணிச மான அளவையும் தன்னகத்தே கொண்டிருத்தல் வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

கந்தரோடை நகருக்கு அரணாகவும் இக்கிராமங்கள் விளங்கியுள்ளன. எனவே, அவை பற்றிய சிறு குறிப்பை இங்கு பார்க்கலாம்.

சுன்னாகம் - சுல் + நாகம் = சுன்னாகம். சுல் என்றால் வெள்ளி, நாகம் என்றால் மலை. அதாவது சுன்னாகம் என் றால் வெள்ளிமலை, வெள்ளியங்கிரி என்று பொருள். (கண பதிப்பிள்ளை 1971:61) ஆயினும் இப்பிரதேசத்தில் கதிரமலை என்னும் மேட்டுப்பிரதேசம் தவிர மலை என்று குறிப்பிடத்தக்க இடம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, சுன்னாகம் என்பதற்கு வேறு அர்த்தமும் இருத்தல் வேண்டும்.

வலிகாமம் வடக்கில் அளவெட்டியில் வெள்ளியம்பதி என்னும் ஓரிடம் உள்ளது. வெள்ளியம்பத்தை என்பதே வெள் ளியம் பதியாகத் திரிபடைந்துள்ளதாக ஆய்வாளர் கூறுகின் றனர்.(திலகநாயகம் 227) வெள்ளியம் என்பது விளாமரத்தைக்

குறிக்கும். (வை.ம.அ. 1903: 55) விளாமரங்கள் மிகுதியாக (பற்றையாக அல்லது காடாக) இருந்த காரணத்தாலேயே வெள்ளியம்பத்தை என்ற பெயர் ஏற்பட்டுப் பின்னர் அது வெள்ளியம்பதியாகியிருத்தல் வேண்டும்.

அவ்விதமே சுன்னாகம் பிரதேசத்திலும் முற்காலத்தில் விளாமரங்கள் மிகுதியாக இருந்திருக்கலாம். இவ்விடமும் வெள்ளியம்பதி என்று அழைக்கப்பட்டிருக்கலாம். ஆயினும், இவ்விடத்துக்கு அண்மையிலுள்ள அளவெட்டியிலும் வெள்ளி யம்பதி என்னும் பெயர் வழக்கிலிருந்தது கண்டு, இங்குள்ள அறிஞர் இதற்கு வெள்ளியம்பதி (வெள்ளிமலை) என்னும் பொருள்பட சுன்னாகம் என்று பெயர் சூட்டியிருக்கலாம்.

சுன்னாகத்துக்கு அருகிலுள்ள மயிலணி என்னும் கிராமம் மயிலடிக்குருந்தமரங்கள் அணிசெய்த காரணத்தால் ஏற்பட்ட பெயராக இருக்கலாம். இதற்கருகில் சூரைச் செடிகள் மிக்கதால் சூராவத்தை என்னும் பெயர் பெற்ற ஊரும் உள் ளது. எனவே, முள்மரங்களாக விளா, மயிலடிக்குருந்து, சூரைச்செடிகள் மற்றும் செடி, கொடிகள் மிகுந்த காடாக இவ்விடங்கள் கந்தரோடையின் கிழக்குப்புற அரணாக விளங்கி யுள்ளன என்று கருதலாம்.

சுண்ணாகம் = சுண் - சுண்ணாம்பு ; நாகம் - மலை. சுண்ணாம்புக் கற்பாறை மிகுந்திருத்தல் பற்றியும் சுன்னாகம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் உண்டு.

மல்லாகம் என்பதற்கு மல்லர் + அகம் அதாவது மல்லர் குடியிருந்த இடம் என்றும் பொருள் கொள்ளலாம் (பாலசுந்தரம் 1988 : .35) எனவே கந்தரோடையின் பாதுகாப் பிற்காக இங்கு மல்லர் குடியிருப்புகள் முற்காலத்தில் ஏற் படுத்தப்பட்டிருக்கலாம்.

கந்தரோடைக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் கொத் தியவத்தை என்னும் குறிச்சி உள்ளது. கொற்றி என்பது துர்க்கை அல்லது கொற்றவையைக் குறிக்கும். (க.த.அ. 1980 ; 399) பண்டைத் தமிழரசர்கள் தமது வீரத்துக்கும் காவலுக் கும் கொற்றவையை வழிபட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்

தக்கது. எனவே கந்தரோடைத் தமிழ் மன்னர்கள் இவ்விடத்தில் கொற்றவையாம் துர்க்கைக்குக் கோவில் அமைத்து வழிபட்டிருத்தல் கூடும். இது பற்றி மேலாய்வுகள் தேவைப்படுகின்றன.

அளவெட்டி என்பது அளறு + வெடி அல்லது அளறு + வெளி என்பதன் திரிபாக ஏற்பட்டிருக்கலாம். (பாலசுந்தரம் 1988: ..32) அளறு என்பதற்குச் சேறு என்றும் பொருளுண்டு. எனவே. முற்காலத்தில் ஈரலிப்பான சேற்றுநில வெளியாக, வழுக்கையாற்றங் கரையோரமாக இவ்விடம் இருந்திருக்கலாம். இவ்விடம் எதிரிகள் நுழையமுடியாதபடி சேற்றுநில அரணாக விளங்கியிருக்கலாம்.

அவ்விதமே மேற்குப்புறமாக அமைந்த அங்கணம் மைக்கடவை என்பதில் அங்கணம் என்பதற்கு சலதாரை, படித்துறை, சேறு என்னும் பொருள்களுமுள. (க.த.அ. 1980 : 8 குமாரசுவாமி 1918 ; 88) சலதாரை, படித்துறை என்பன கந்தரோடைக்குளத்துடன் தொடர்பாக அமைய எஞ்சிய பகுதி சேற்று நிலமாக அளவெட்டியுடன் தொடர்பாக அமைந்திருத்தல் வேண்டும். அது மட்டுமன்றி, இவ்விடத்தில் பாதுகாப்புக்காக மண்வரம்பு ஒன்றும் புதிதாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்விடம் பிட்டியாக அமைந்ததால் மாசியப்பிட்டி என்று அழைக்கப்படுகிறது. (மாசி என்பதற்குப் புதுவரம்பு என்றும் பொருள் (க.த.அ. 1980 : 750)

தென்புறமாகச் சங்குவேலியும் உடுவிலும் உள்ளன. சங்கு என்பது இசங்கு. அதாவது இயங்கஞ்செடியைக் குறிக்கும். (முருகேசமுதலியார் 1988 : 334) இது ஒரு முள்ளுள்ள செடி. வேலி என்பது காவலரண், கிராமம். சங்குவேலிக்கருகில் உள்ள கந்தரோடையின் குறிச்சிகளான சங்கம்புலம், இயங்கம்புலம் என்பனவும் இயங்கஞ்செடி காரணமாக ஏற்பட்ட இடங்களாயிருத்தல் வேண்டும். எனவே, இவ்விடங்கள் இயங்கம்பற்றை அல்லது இயங்கங் காடாக தென்பகுதிக்கு அரணாக விளங்கியிருக்க வேண்டும்.

உடுவில் என்பது உடு + வில் என இணைந்து உருவான ஒரு பெயராகும். உடு என்பதற்குரிய பல அர்த்தங் களில் ஓடக்கோல் என்பதும் ஒன்றாகும். (க.த.அ. 1980 : 150) ஓடக்கோல் என்பது படகு தள்ளுங்கழியாகும் (க.த.அ. 1980 : 242)

இலங்கைத் தமிழரின் பேச்சு வழக்கில் 'வில்' என்பது பெரிய குளத்தையும், நீர்த்தேக்கத்தையும் குறித்து வழங்கக் காணலாம். (பாலசுந்தரம் 1988:13) தற்போது உடுவிற்குளம் என்று அழைக்கப்படும் கந்தரோடையின் தென்கிழக்குப் புற மாக உள்ள குளமானது முற்காலத்தில் குடாக்கரை (குடாரை) வரை பரந்திருந்தது. குடாக்கரைக்கும் குளத்தின் கிழக்குப் பகுதிக்கும் இடையில் திடல் போன்ற சிறு நிலப் பகுதி காணப்படுகிறது. இது வில் போன்று வளைந்த குளத்தின் நடுவில் சிறு அம்பு பொருத்தப்பட்டது போன்ற தோற்றத்தைக் கொடுக்கிறது. (உடு என்பதற்கு அம்பின் அடிப்பாகம் என்றும் பொருளுண்டு (க.த.அ. 1980 : 150)

இக்குளத்தில் குடாக்கரையிலிருந்து செல்லும் வத் தைகள் திரும்புதுறையூடாக வளைந்து சென்று கால்வாய் வழியை அடையவேண்டியுள்ளது. எனவே, வில்போன்று வளைந்திருந்த இந்தக்குளம் வில் என்ற பெயரைப் பெற்ற துடன் ஓடக்கோல் போட்டு வத்தைகள் அல்லது ஓடங்கள் செலுத்துமிடமாக இருந்ததால் உடுவில் என்று அழைக்கப் பட்டிருத்தல் வேண்டும். காலப்போக்கில் இதன் அயற்பாக மாகவுள்ள நிலப்பரப்பு (கிராமம்) உடுவில் என்னும் பெயரால் சுட்டப்பட இக்குளம் உடுவிற்குளம் என்னும் பெயரைப் பெற்றிருக்கலாம்.

**குறிப்பு:** சுன்னாகத்தின் புராதன பெயர் மயிலணி என்பதால் சுன்னாகம் முற்காலத்தில் மயிலணியின் ஒரு பகுதியாக இருந்திருத்தல் வேண்டும். அவ்விதமே சண்டிலிப்பாயின் புராதன பெயர் கல்வளை என்றுங் கூறப்படுகின்றது, (முத்து தம்பிப்பிள்ளை : 1915 ; 152)

## 04. கந்தரோடை - பெயர்க் காரணம்

கந்தரோடை என்ற பெயர் இக்கிராமத்துக்கு ஏற்பட்ட தற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவைபற்றிச் சுருக்கமாக இங்கு பார்ப்போம்.

1. **கந்தர் ஓடை** - கந்தர் என்பவருக்குச் சொந்தமாக, ஓடை (ஒடுக்கமான) போன்ற நிலப்பரப்பாக இருந்தமை யால் - கந்தர் + ஓடை = கந்தரோடை என்று அழைக் கப்படுகிறது என்பது சிலரின் கருத்தாக உள்ளது. (குமாரசுவாமி 1918 : 49)

2. **கதிர ஓடை** - கதிரவோடை அல்லது கதிராவோடை என்பது காலப்போக்கில் கந்திரோடை அல்லது கந்த ரோடையாகத் திரிபடைந்திருக்கலாம் என்பது சிலரின் கருத்தாக உள்ளது. கதிரா என்பது கருங்காலியைக் குறிக்கும். "கதிரங் கருங்காலி" என்கிறது சேந்தன்றி வாகர நிகண்டு (சே.தி 59) கருங்காலியிற் பல வகை யுண்டு. அதில் Diospyrous ebunum (family - Ebanaceae) என்னுந் தாவரவியற் பெயரையுடைய இனம் உலர் வலயங்களில் நன்கு வளரக்கூடியது. (மணி 1989 : 41) எனவே, கதிரா (கருங்காலி) மரங்கள் கந்தரோடைக் குளம் அல்லது வழுக்கையாற்றங்கரைகளில் மிகுதி யாக இருந்திருக்கலாம். அது பற்றி கதிராவோடை அல்லது கதிரோடை என்று அழைக்கப்பட்டுக் காலப் போக்கில் கந்தரோடையாக மாறியிருக்கலாம்.

3. **கதிரமலை** - கந்தரோடையின் நில அமைப்பு சமபூமி யாக அமைந்தில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கந்த ரோடையின் மத்திய, தென், தென்மேற்குப்பகுதிகள் உயர்ந்து மணப்பிட்டி அல்லது திடலாகவும், கிழக்கு, வடக்குப் பாகங்கள் தாழ் நிலங்களாகவும் காணப்படு கின்றன. தாழ் நிலப்பகுதிகளுக்கூடாகவே ஓடை போன்ற வாய்க்கால் உடுவிற் குளத்திற்கும், கந்த ரோடைக் குளத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. மணமேடுகள் முற்காலத்தில் இன்னும் உயர்ந்து சிறு குன்று போல(மலைபோல) இருந்திருக்கலாம். எனவே கதிரா என்ற கருங்காலி மரங்களையும் மணகுன்றை யும் தொடர்புபடுத்திக் கதிரமலை என்ற பெயர் ஏற்பட டிருக்கலாம்.

**குறிப்பு :** கருங்காலி என்னும் இடம் காரைநகரிலும் உள்ளது. காரைநகரைச் சேர்ந்த மக்களிற் பலர் நீண்டகாலமாகவே கந்தரோடையில் வாழ்ந்து வருகின் றார்கள். அத்துடன் கந்தரோடை மக்களுக்கும் காரை நகர் மக்களுக்கும் நீண்டகாலமாகவே கொள்வினை, கொடுப்பினை இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

4. **கந்தகொடை** - கந்தனுக்குக் கொடையாக வழங்கப் பட்ட நிலம் என்பதால் கந்தகொடை எனப்பட்டது. கந்தன் என்பது மாவிட்டபுரம் கந்தசுவாமியாகவும் இருக்கலாம்: கதிர்காமக் கந்தனாகவும் இருக்கலாம் அல்லது இவ்வூரிலேயே கந்தசுவாமி கோவில் இருந் திருக்கலாம். “அவள் (மாருதப்புரவீகவல்லி) அமைப் பித்த சுப்பிரமணியாலய பூசைக்கும், அருச்சகர்களுக் கும் கந்தரோடையென வழங்கும் இடத்தைச் சமர்ப்பித் துத் திருத்தி நெல்விளை நிலமாக்கி அவர்களுக்குப் பிரமதாயமாகக் (இறையிலி) கொடுத்தாள்” என்கிறார் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை.( 1915 : .5)

கந்தகொடை என்பதே நாளடைவில் கந்தவொடை கந்தரோடை என்று திரிபடைந்திருக்க வேண்டும்.

"ஈழத்தமிழருக்குக் கந்தன் பிரியமான தெய்வம்: கந்த புராணம் பிரியமான தமிழ்மறை: அத்தகைய தெய்வத் தின் பெயரால் வழங்குவது கந்தரோடை" என்கிறார் சு. வித்தியானந்தன் ( ஸ்கந்தா 1969 : 30 )

கந்தரோடை மக்கள் கந்தவழிபாட்டில் ஈடுபாடுடையவர் களாக விளங்கினார்கள் என்பதில் ஐயமில்லை. அத னால் அவர்களிற் பலர் தமது குழந்தைகளுக்குக் கந்த னுடன் தொடர்புடையதான பெயர்களையே பரம்பரை பரம்பரையாக வைத்து வந்துள்ளனர். கந்தையா, கந்தன், கந்தசாமி, கந்தப்பு, கதிர்காமர், கார்த்திகேசு, கதிரேசு, குமார், சரவணை, சரவணபவன், சண்முகம், சுப்பிரமணியம், ஆறுமுகம், பாலன், முருகையா, முரு கேசு, மயில்வாகனம் போன்ற பெயர்களில் பலர் இன்றும் இங்கு இருக்கிறார்கள்.

ஆயினும், கந்தரோடையில் கந்தனுக்கென்று தனிக் கோவில் ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை. கந்த ரோடையின் மேற்குப்புறமாக, ஸ்கந்தவரோதயக் கல் லூரிக்குத் தென்மேற்குத்திசையில், ஓரிடத்தில் கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் வேல் ஒன்றை வைத்து மக்கள் வழிபட்டதாக எனது தகப்பனார் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

மேலும், கந்தரோடையின் தெற்குப்புறமாகக் கற்பொக் குணை என்னும் இடத்தில் ஒரு கந்தசுவாமி கோவில் பல காலமாகக் கைவிடப்பட்ட நிலையில் காணப் படுவதும் குறிப்பிடத்தக்கது. (இக் கோவில் தற்போது புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது.)

“கந்தரோடையின் தொல்பொருட்களும் அவ்விடத்தின் பழமையும் ஆங்கிருந்த முருகவழிபாட்டுத் தொன்மை யினையும் உணர்ந்துகொள்ளத் துணைசெய்கின்றன” என்கிறார் இ.பால சுந்தரம் (2002 : 67)

கந்தரோடை அகழ்வாய்வின் போது வேல் போன்ற ஆயுதம் கண்டெடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

5. **கதிறு கொட** - சிங்களத்தில் கதிறு என்றால் எட்டி: கொட என்றால் பிட்டி, இடம், கிராமம். எனவே, எட்டி மரம் நின்ற காரணத்தால் கதிறுகொட என்று சிங்களத் தில் அழைக்கப்பட்டது. பிறகு கதிறு கதிரவாகிப், பிட்டி யென்பதை உணர்த்துஞ்சொல் மலையாகிக் கதிரை மலையானது என்கிறார் செ.இராசநாயகம் (2003 : .234)

**குறிப்பு:** கந்தரோடை, கதிரமலை என்பன ஓரிடத்தைக் குறிக்கின்றனவா அல்லது வெவ்வேறிடங்களைக் குறிக் கின்றனவா என்பதில் வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேறுபாடுகளுள்ளன. “கிடைத்திருக்கும் ஆதா ரங்களை வைத்துப்பார்க்கும்போது கதிரமலையும் கந்தரோடையும் ஒன்றெனக் கூறுவது பொருந்து மாறில்லை” என்று புஷ்பரட்ணம் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார். (பக்.52) ஆனால் தற்போது கந்தரோடை என்றழைக்கப்படுகின்ற இடத்திலேயே பழைய இராச தானி அமைந்திருந்தது என்பதில் கருத்து வேறு பாடில்லை.

6. **கந்தர்குடை** - பறங்கியர் காலத்துப்பெயர். (இராச நாயகம் 2003 : 234) (இது கந்தர் குட்டையின் திரிபாகவும் இருக்கலாம்)

7. **கந்தரோடை** - ஒல்லாந்தர் காலத்தில் அழைக்கப்பட்ட பெயர் ( இராசநாயகம் 2003 : 234)

8. **ஓடைக்குறிச்சி** - ஒல்லாந்தர் காலத்தில் இவ்விடம் ஓடைக்குறிச்சி என்றும் அழைக்கப்பட்டது (இராசநாயகம் 2003 : 234)

9. **மலைவழி** - கந்தரோடைக்குக் கிழக்கே சுன்னாகத்தில் கதிரமலை என்னும் மேட்டு நிலப்பகுதி காணப்படுகிறது. இவ்விடம் மிகப்பழையகாலத்தில் ஒரு குன்றாக அல்லது மலையாக இருந்திருக்கலாம். " முன்னொரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் வடகரை முழுவதும் மலைத் தொடராயிருந்து பின் கடலால் தாக்குண்டு அழிந்து போக எஞ்சியுள்ள அதன் அடிவாரமே தற்போது கீரிமலை என அழைக்கப்படுகிறது" என்கிறார் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை (1915 : .2) அவ்விதமே கதிரமலை என்பதும் முற்காலத்தில் ஒரு மலையாக அல்லது குன்றாக இருந்திருக்கலாம். இவ்விடம் அமைந்துள்ள சுன்னாகம் என்பது சுல் - வெள்ளி, நாகம் - மலை அதாவது வெள்ளிமலை எனப் பொருள்பட நிற்கிறது.

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் வெள்ளியங்கிரி என்பதே வெள்ளிமலை. இவ்வெள்ளிமலைக்கு அருகில் கந்தவேள் பிறந்த கார்த்திகேயமலை அல்லது கதிரமலை உள்ளதாகக் கூறப்படுகிறது. சுன்னாகத்தில் அமைந்துள்ள கதிரமலையில் தற்போது அழகிய சிவன் கோவில் ஒன்றுள்ளது. முற்காலத்தில் இவ்விடத்தில் முருகன்கோவில் இருந்திருத்தல் கூடும்.

ஓடை என்பதற்கு மலைவழி என்று பிங்கல நிகண்டு அர்த்தங்கூறுகிறது. எனவே, கடல்வழியாக வாணிபம் அல்லது யாத்திரையின் பொருட்டு வட இலங்கைக்கு வருவோர் வழுக்கையாற்றின் வழியாக இவ்விடத்துக்கு (கந்தரோடைக்கு) வந்து, தரித்து நின்று, இங்கிருந்து

கந்தன் குடிகொண்டிருந்த கதிரமலைக்குச் சென்றி ருத்தல் கூடும். கந்தன் இருக்கும் மலைக்குச் செல்லும் வழி அதாவது, மலைவழி(ஓடை) என்ற பெயரில் இவ் விடம் கந்தரோடை என்று அழைக்கப்பட்டிருத்தலும் சாத்தியமே (சிவசண்முகராஜா; 2005)

பொதுவாக, ஆறுகள் மலையிலிருந்தே உற்பத்தியா கின்றன. எனவே, கந்தரோடையூடாகப்பாயும் வழுக்கை யாறு கதிரமலையிலிருந்தும் உற்பத்தியாகியிருத்தல் கூடும். எனவே, கதிரமலையும் அதன் அண்மையில் கந்தரோடையில் அமைந்துள்ள வழுக்கையாறும் மேலும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

10. **கயக்கேணி -** கந்தரோடையின் நில அமைப்பு, கந்த ரோடையிலும் அதைச் சூழவும் உள்ள குறிச்சிப் பெயர்கள் என்பவற்றை ஆழ்ந்து ஆராயும்போது பின் வரும் விளக்கம் பொருத்தமாகத் தோன்றுகிறது. கந்த ரோடையின் மைய ஸ்தானமாக முக்கிய கேந்திர ஸ்தா னமாக வரலாற்றில் இடம்பிடித்து, தற்போதும் முக்கி யத்துவம் பெற்று விளங்குமிடம் கயக்கேணியாகும். "கயம் என்பது ஓர் ஆழமான நீர் நிலையாகும். அத் தகைய நீர் நிலைக்கு ஆதாரமாய் ஓர் ஊற்றிலிருந்து புறப்படுகின்ற ஆற்றைக் கயத்தாறு என அழைப்பர். பெரும்பாலும் நதிகள் மலைகளிலே பிறக்கும். அவ் வாறு பிறவாமல் சமவெளியாம் முல்லை நிலத்தில் தன்னூற்றாகப் பொங்கியெழுந்து, கயமாகப் பெருகிச் சிறு ஆறாக ஓடும் ஆற்றுக்கே கயத்தாறு என்று முன்னையோர் பெயரிட்டனர். (சேதுப்பிள்ளை 1987 : 18)

புலம் என்பது முல்லை நிலத்தையும் குறிக்கும் (பால சுந்தரம் 1988 : .50) கயக்கேணிக்கு அருகில் சங்கம் புலம், இயங்கம்புலம் ஆகிய முல்லைக்குரிய இடங்களுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே, கயக்கேணி (கயம் + கேணி) என்று தற் போதும் அழைக்கப்படும் இடத்தில் கயம் அதாவது

ஆழமான, இயற்கை நீரூற்று முற்காலத்தில் இருந்திருக்க வேண்டும். அந்நீர்த்தாரையிலிருந்து பெருகிய நீர் தேங்கிய இடமே கயக்கேணி என அழைக்கப் பட்டிருத்தல் வேண்டும். (கயக்கேணிக்குக் கிழக்காகவும் மிக அருகாமையிலும் குடாரையும், உடுவிற்குளமும் அமைந்துள்ளன. உடுவிற் குளத்திலிருந்து வடதிசையாகச் செல்லும் கால்வாயும் வழுக்கையாற்றின் பாகம் என்பர்) இந்நீரூற்று தற்போது கயக்கேணி என்றழைக்கப்படும் இடத்தின் கிழக்குப் புறமாக குடாரைக்கு அருகில் இருந்திருக்கக்கூடும். எனவே குடாரையில் நீர் நிரம்பி உடுவிற்குளத்தினூடாகப் பாய்ந்திருக்க முடியும்.

அங்ஙனம் தேங்கிய நீரானது சிற்றாறாக ஓடியிருக்க வேண்டும். “ இயற்கை யான நீரோட்டத்துக்கு ஓடை என்று பெயர்” என்று ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களே இன்னோரிடத்தில் குறிப்பிட்டுள்ளார் (1987 : .21) எனவே, கயத்திலிருந்து உருவான இயற்கை நீரானது ஆறாக ஓடியதால் இவ்விடம் கயத்தாரோடை (கயம் + ஆறு + ஓடை ) என்று அழைக்கப்பட்டிருத்தல் கூடும். கயத்தாரோடையானது காலப்போக்கில் கயத்த ரோடை கந்தரோடையாக மாறியிருக்கலாம். மேலும், அவ்வாறானது வழுக்கிச் செல்லும் தன்மை யுடைய தாக இருந்திருக்கலாம். அதனால் வழுக்கையாறு அல்லது வழுக்கியாறு என அழைக்கப்பட்டிருக்கலாம்.

யாழ்ப்பாணத்தில் மலை ஏதும் இல்லாதிருந்தும் (முற் கூறிய கதிரமலை பற்றிய விளக்கத்தை ஏற்றுக்கொள்ளா தவர்களுக்கு) வழுக்கையாறு என்று ஓர் ஆறு எவ்விதம் ஒரு சமவெளித்தரையிலிருந்து உருவாகியிருக்கலாம் என்ற கேள்விக்கு இவ்விளக்கம் பொருத்தமான பதிலாக அமைகிறது அல்லவா!

எனவே, கயத்திலிருந்து உருவான ஆறானது உடுவிற் குளத்திலிருந்து வடதிசை நோக்கிச் சென்று (தற்போது காணப்படும் வாய்க்கால்) பிறகு மேற்கே திரும்பிச்

சென்று கந்தரோடையின் மேற்குப்புறமாக உள்ள பெரிய குளமான கந்தரோடைக் குளத்துடன் இணைகிறது. அதற்கும் காரணம் உள்ளது.

கந்தரோடையின் மேற்குத்திசையிலுள்ள குறிச்சியொன்றுக்கு அங்கணம் என்று பெயர். (இவ்விடத்தில் அம்மன் ஆலயம் அமைக்கப்பட்டதால், இவ்விடத்தைக் கடந்து செல்வோர் இதற்கு அங்கணம்மைக்கடவை என்று பெயரிட்டு அழைத்தனர்) அங்கணம் என்பதற்குச் சலதாரை (அதாவது நீரூற்று) என்றும் பொருளுள்ளது, (க.த.அ. 1980 : 8) எனவே, கந்தரோடை கிழக்கில் கயம் என்ற நீரூற்று இருந்ததுபோல மேற்கில் அங்கணம் என்ற நீரூற்று இருந்திருக்க வேண்டும். கயம் என்ற நீரூற்றுக்கு அருகாமையில் உடுவிற்குளம் (உண்மையில் இதுவும் கந்தரோடையின் பகுதியே) அமைந்திருந்தது போல அங்கணம் என்ற நீரூற்றுக்கு அருகில் கந்தரோடைக் குளம் அமைந்துள்ளது. ஒருவேளை இந் நீரூற்று குளத்தினுள்ளும் அமைந்திருந்திருக்கலாம். (இது போன்ற இயற்கை நீரூற்று தற்போதும் கீரிமலையில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது) எனவே, இயற்கையின் அற்புதமாகக் காணப்பட்ட இவ்விரு நீரூற்றுக்களும் கால்வாய் வழியாக இணைக்கப்பட்டதுடன் கந்தரோடைக் குளத்திலிருந்து தென்திசையாக வழுக்கையாறாக அது கடலை நோக்கிச் சென்றிருக்க வேண்டும். எனவே, வழுக்கையாறு உற்பத்தியான இடம் கந்தரோடையாகவே இருத்தல் வேண்டும். அக்காலத்தில் இது நன்னீர் ஆறாக இருந்திருக்க வேண்டும். இவ்வாற்றினூடாக முற்காலத்தில் கடலிலிருந்து தோணிப் போக்குவரத்து நடைபெற்றிருக்க வேண்டும்.

இவ்விதம் இயற்கை எழிலுடன் விளங்கிய இடத்தைத் தலைநகராக எமது முன்னோர் தெரிவு செய்தது வியப்பிற்குரியதன்றே!

(இந்நீரூற்றுகள் மண்மூடிக்கிடக்கின்றனவா? வற்றிப்போய் விட்டனவா? அவ்விதம் எப்போது நிகழ்ந்தது? ஏன் நிகழ்ந்தது? என்ற கேள்விகளுக்கு விடை? )

# 05. நீர்வளம்

கந்தரோடை வட இலங்கையின் முதல் தலைநகராக விளங்கிய இடமாகும். ஓரிடம் தலைநகராகத் தெரிவுசெய்யப் படும்போது அதன் பாதுகாப்புச் சூழல், நீர்வளம், நிலவளம், போக்குவரத்து, வாணிபத் தொடர்புகளுக்குரிய வசதிகள் போன்ற பல விடயங்கள் கருத்திற் கொள்ளப்படும். முற் காலத்தில் சிறந்து விளங்கிய நகரங்களும், துறைமுகங்களும் ஆற்றையடுத்தே உண்டாயின என்கிறார் ரா.பி.சேதுப்பிள்ளை (1987 : 15) அந்தவகையில் அக்காலத்தில் கந்தரோடை பல விதத்திலும் தகுதியுள்ள இடமாக விளங்கியிருத்தல் வேண்டும்.

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பது பழமொழி. மலைகள், குன்றுகளற்ற யாழ்ப்பாணத்தில் 'பெயர் சொல்ல ஒரு பிள்ளை' என்பதுபோல பெயர் சொல்ல ஓர் ஆறாக விளங்குவது வழுக்கையாறாகும். இது வசாவிளானிலிருந்து உற்பத்தியாகி வருவதாகச் சிலர் குறிப்பிட்டாலும் இவ்வாறா னது கந்தரோடையை மையமாகக் கொண்டே அமைந்துள் ளது. முற்காலத்தில் ஆழமும், அகலமும் மிக்கதாக விளங் கிய இவ்வாற்றினூடாகவே கந்தரோடைக்கும், இந்தியா, சீனா, உரோமாபுரி போன்ற சர்வதேச நாடுகளுக்குமிடையில் கடல் வாணிபம் நடைபெற்றுள்ளதென்று வரலாற்றாய் வாளர்கள் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளனர்.

"யாழ்ப்பாணத்தின் நடுப்பகுதியில் அமைந்த கந்த ரோடை பண்டமாற்று நிலையம் என்ற வகையிலே தனிச்

சிறப்புடன் விளங்கியது. ஒரு வாணிபத்தலம் என்ற வகையில் அது சர்வதேசப் பரிணாமத்தைப் பெற்றது. தென்னிந்திய உற்பத்தியுடைய பெருமளவிலான நாணயங்கள், உரோமரின் காசுகள், சாடிகள், அவர்களின் றூலெற்று மட்கலன்கள் (rouleted ware) அங்கு புழக்கத்திலிருந்தன. வட இந்தியாவில் உற்பத்தியான பளபளப்பான மணிகளும், சில மட்கலங்களின் துண்டங்களும் அங்கு கிடைத்தன" என்று சி.பத்மநாதன் எடுத்துக் கூறியுள்ளார். ( 2011 : 40)

ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று கந்தரோடையின் தென்கிழக்குப் புறத்திலுள்ள உடுவிற்குளத்திலிருந்து பெரு வாய்க்காலாக வடக்குத்திசை நோக்கிச் செல்லும் வழுக்கை யாற்றின் முக்கிய கிளையானது மேற்குத்திசையாகத் திரும் பிச் சென்று கந்தரோடைக்குளத்துடன் இணைகிறது. இக் கால்வாயானது கந்தரோடையின் கிழக்கு, வடக்கு எல்லை களாகவும், அரணாகவும் அக்காலத்தில் அமைந்திருத்தல் கூடும். மேற்குப்பக்கமாக வழுக்கையாற்றின் ஓர் அங்கமாகக் கந்தரோடைக்குளம் அமைந்துள்ளது. இக்குளமானது யாழ்ப் பாணத்திலுள்ள பெரிய குளங்களில் இரண்டாவது பெரிய குளமாகும். (முதலாவது பெரிய குளம் மிருசுவிலிலுள்ளது) ( சிற்றம்பலம் 1993 : 13) இதன் விஸ்தீரணம் 39.6 ஏக்கர் பரப் பளவைக் கொண்டதாகவும் 72.24 கனஅடி நீரைக் கொள்ளத் தக்கதாகவும் அமைந்துள்ளது.

முற்காலத்தில் இதிலிருந்து தெற்கு நோக்கிச் சென்ற வழுக்கையாறு நாவாந்துறை வரை சென்றிருத்தல் வேண்டும். அது பற்றி செ.இராசநாயகம் பின்வருமாறு கூறுகின்றார், "நாவாந்துறையிலிருந்து சங்கடம் என்னும் தோணிகளிலே **முற்காலத்தில் ஆழ்ந்தும் அகன்றுமிருந்த** வழுக்கையாறு வழியே கதிரமலைக்கு வியாபாரப் பண்டங்கள் ஏற்றிச் செல்வ துண்டு. யாழ்ப்பாணத்திலுள்ள நாவாந்துறைக்கு இப்பொழு தும் சங்கட நாவாந்துறை என்னும் பெயர் வழங்குவது ஈண்டு

நோக்கத்தக்கதாகும். கதிரமலையே பலதேச வியாபாரங் களுக்கும் மத்திய ஸ்தானமாக இருந்தது" ( 2003 :. 19 , 20) இராசநாயகம் அவர்கள் கதிரமலையும் கந்தரோடையும் ஒன்றே என்ற கருத்துடையவர். சங்கடம் என்பதற்கு மிதவை, இரட்டைத்தோணி என்னும் அர்த்தங்களுண்டு(க.த.அ.1980: 414)

கந்தரோடையுடனான கடல் வழிப்போக்குவரத்து நாவாந் துறையிலிருந்து கந்தரோடைக்குளத்துடன் நின்றுவிடாது முற் கூறிய வாய்க்கால் வழியாக உடுவில் குளம் வரை நடை பெற்றுள்ளதை அறியக்கூடியவாறுள்ளது. உடுவிற்குளத்துக்கு மேற்குப்பக்கமாகத் தற்போது கந்தரோடை, உடுவில் வீதி (கந்தையா உபாத்தியாயர் வீதி) அமைந்துள்ள இடம் வடக் கிலிருந்து தெற்காக குளத்தின் அரைவாசித்தூரம் வரையில் ஒடுக்கமான பிட்டியாக அமைந்திருந்திருக்க வேண்டும். அந்த இடம் தற்காலத்திலும் மேட்டுத்திடல் என்றே அழைக்கப் படுகிறது. இத்திடலின் மேற்குப்புறமாக (அருளானந்தப் பிள்ளையார் கோவிலுக்குத் தென்கிழக்காக) உள்ள இடம் குடாரை என்று தற்காலத்தில் அழைக்கப்படுகிறது. இவ்விடம் தற்காலத்தில் வயல்களாக உள்ளது. எனினும் முற்காலத் தில் இவ்விடம் உடுவிற்குளத்துடன் தொடர்புடையதாக, நீர் நிறைந்த குடாவாகக் காணப்பட்டிருக்க வேண்டும். அக் காலத்தில் இது குடாக்கரை என அழைக்கப்பட்டது. குடாக் கரையே காலப்போக்கில் குடாரையானது. குடாரைக்கு மேற் குப்புறமாக உள்ளதே கயக்கேணி. வழுக்கையாற்றின் வழி யாக உடுவிற்குளத்துக்கு வரும் தோணிகள் இக்குடாக்கரை யிலேயே நிறுத்தப்படுவது வழக்கம். சங்கடம் என்னும் தோணிகள் அல்லது வத்தைகள் நிறுத்தப்பட்ட இடம் சங்க டவத்தை என்றும் அழைக்கப்பட்டது. தற்காலத்தில் சங்கா வத்தை என்று இவ்விடம் அழைக்கப்படுகிறது. (தோணிகள் நிறுத்தப்படும் இடம் தங்குதுறை எனவும் அழைக்கப்பட்டது.) மேட்டுத்திடலின் தென்பாகத்தினூடாக உடுவிற்குளத்திற்குள் தோணிகள் குடாரைக்குள் வந்து திரும்புமிடம் திரும்புதுறை

என அழைக்கப்பட்டது. தற்காலத்தில் இப்பெயர் திரிபடைந்து திம்புத்துறை என்றும் துரும்புத்துறை என்றும் வழங்கி வருகிறது.

எனவே குடாக்கரைக்கும், உடுவிற்குளத்திற்கும் இடையில் தற்போது ஆசிரியர் கந்தசாமி வீதி என்றழைக்கப்படும் இடத்தினருகில் திரும்புதுறையிலிருந்து உடுவில் வீதியை ஊடறுத்து உடுவிற்குளம் தொடர்ச்சியாக இருந்திருக்க வேண்டும். தற்போதும் ஆசிரியர் கந்தசாமி வீதியின் தென்புறம் சங்காவத்தை என்று அழைக்கப்படுகிறது.

இங்ஙனம் ஒருகாலத்தில் வழுக்கையாற்றினூடாகக் கடல்வழி வாணிபத்திலும் சிறந்து விளங்கியது கந்தரோடை. ஆயினும் ஏதோ ஒரு காலகட்டத்தில் (ஆழிப்பேரலை போன்ற காரணங்களால்) வழுக்கையாற்றினூடாக நன்னீர் கடலுக்குட் சென்ற நிலை மாறி, கடல்நீர் இவ்வாற்றின்வழியே உட்புகுந்திருக்க வேண்டும். அவ்வாறு உட்புகுந்த உப்புநீரினால் மிகப் பெரிய நீர்த்தேக்கமாக விளங்கிய கந்தரோடைக்குளமும், உடுவிற்குளமும் பாதிக்கப்பட்டு, கந்தரோடையின் நீர்வளம் குன்றி, நிலத்தடிநீரும் உவர்நீராக மாறியிருக்கவேண்டும். தற்போதும் கந்தரோடையிலுள்ள பெரும்பாலான கிணறுகள் உவர்நீருள்ளனவாக இருத்தல் குறிப்பிடத்தக்கது. கந்தரோடை இராசதானி கைவிடப்பட்டமைக்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

கந்தரோடைக்குளம், உடுவிற்குளம், வழுக்கையாறு என்பன இன்று உருவழிந்து, பொலிவிழந்து, சிறுத்துப் போயிருந்தாலும் தமது நீண்ட சரித்திரத்தின் மௌன சாட்சியங்களாகவும் அவை விளங்குகின்றன. சுமார் நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புகூடக் கந்தரோடைக்குளத்தில் கோடை காலத்தில் சித்திரை,வைகாசி மாதம் வரையும் தண்ணீர் நிறைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் நீர்வற்றி, நிலம் தெரியும். அப்போது கூட

இக்குளத்தினுள் அமைந்துள்ள சிறு சிறு குளங்குட்டைகளில் நீர் நிறைந்திருக்கும். புரட்டாதி, ஐப்பசியில் மழை பெய்யத் தொடங்கியவுடன் குளம் மீண்டும் நிரம்பிவிடும்.

ஆனால், தற்காலத்தில் இக்குளம் பெரிதும் தூர்ந்து போயுள்ளமையாலும், அருகாமையிலுள்ள வயல்களிலும், தோட்டங்களிலும் விவசாயம் செய்வோர் கிணற்று நீரை நீரி றைக்கும் இயந்திரங்களினால் விரைவாக இறைப்பதன் காரண மாக நிலத்தடிநீர் கீழிறங்கிவிடுவதாலும் மாசி, பங்குனி மாதங் களுக்குள்ளாகவே இக்குளத்தில் நீர்வற்றி நிலம் தெரிய ஆரம்பித்துவிடுகிறது.

இவ்விதம் கந்தரோடையின் நீர் நிலவளங்களில் காலத் திற்குக் காலம் மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் இங்கு வாழ்ந்த மக்களும் அவர்தம் சந்ததியினரும் அதற்காகக் கவலைப்பட்டுச் சோர்ந்து போய்விடவில்லை. கேணிகள், கிணறுகளை அமைத்தும், நிலங்களுக்குத் தகுந்த பசளை களையிட்டும் அவற்றை வளம் பெறச் செய்து தாமும் வளம் பெற்றனர்.

1980 களிலிருந்து கந்தரோடைக்குச் சுன்னாகத்தி லிருந்து குழாய் மூலம் நன்னீர் வழங்க தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை நடவடிக்கை எடுத்துள்ளதும் குறிப்பிடத் தக்கது. இதற்கு அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி.தர்மலிங்கம் அவர்களின் முயற்சியும் ஒரு காரண மாகும்.

# ०६. வழுக்கையாறு

வழுக்கையாறானது வசாவிளானில் ஆரம்பித்துத் தெல்லிப்பளை, அளவெட்டி, கந்தரோடை, சண்டிலிப்பாய், சங்கானை, நவாலி, வட்டுக்கோட்டை என்பவற்றினூடாகச் சென்று அராலியில் யாழ்.குடாக்கடலில் கலக்கின்றது. (Norad (1977) Valukkai Aru Agriculture Development Project 1) இதன் நீளம் ஏறத்தாள 8 மைல்களாகும்.

வழூக்கையாற்றின உற்பத்தி பற்றி த.சண்முகசுந்தரம் பின்வருமாறு கூறியுள்ளார். "மேட்டுப்பூமியாகிய கட்டுவன் என்னும் ஊரிலே தோன்றுவது வழுக்கையாறு. அதன் மருங்கே அணை ஒன்றைக் கட்டினர். அதனால் இவ்விடம் அணைக்கட்டுவன் என்ற பெயர் பெற்றது" (1984 : 4)

வசாவிளானும் கட்டுவனும் கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாள 38 அடி உயரத்திலிருப்பது குறிப்பிடத்தக்கது. கந்தரோடை கடல் மட்டத்திலிருந்து 28 - 30 அடிஉயரமானது.

வழூக்கையாறு அராலியில் குடாக்கடலுடன் கலக்கும் இடத்திற்குச் சிறிது தொலைவிலேயே நாவாந்துறை உள்ளது. நாவாய்கள், கப்பல்கள் வந்து நிற்கும் இடம் என்பதாலேயே இவ்விடம் நாவாந்துறை என்று அழைக்கப்படுகிறது. எனவே, இவ்விடத்தில் வெளிநாடுகளிலிருந்து வரும் நாவாய்கள் தரித்து நிற்றல் வேண்டும். இங்கிருந்து வழுக்கையாற்றின் வழியாகச் சங்கடம் என்னும் சிறு தோணிகள் அல்லது வத்தைகள் மூலம் கந்தரோடை நகருக்குப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டிருத்தல் வேண்டும்.

செ.இராசநாயகம் அவர்களின் கூற்றும் இதனையே உறுதிப்படுத்துகிறது. பிற வரலாற்றறிஞர்களும் கந்தரோடைக் கும் பிற நாடுகளுக்கும் இடையில் கடல்வழி வாணிபத் தொடர்பு இடம்பெற்றிருந்ததை உறுதிப்படுத்தினாலும் அதற் கான மார்க்கம் எது என்பதைத் தெளிவாக எடுத்துக்கூற வில்லை. கந்தரோடை கடலோரங்களிலிருந்து பல மைல்கள் (அல்லது கிலோமீற்றர்கள்) உட்புறமாக இருப்பதாலும், வழுக்கையாறு தோணிகள் அல்லது கப்பல்கள் செல்லத் தக்க அளவிற்குப் பெரிதாக இல்லாதிருப்பதுமே அவர்களின் தயக்கத்திற்குக் காரணமாக இருக்கலாம்.

ஆனால், கந்தரோடையிலுள்ள இடப்பெயர்களும் வழுக்கையாற்றின் அமைப்பும் கந்தரோடையுடனான கடல் வழிப் போக்குவரத்தை உறுதி செய்யும் விதத்தில் அமைந் துள்ளன. “வழுக்கையாறே சிலகாலங்களிற் கந்தரோடை கடலோடு கொண்டிருந்த தொடர்பில் முக்கிய பங்கேற்றிருக் கலாமெனக் கொள்ளப்படுகிறது” என்று பேராசிரியர் சிற்றம் பலம் அவர்கள் கூறியுள்ளமையும் இங்கு கவனத்திற் கொள் ளத்தக்கது. (1993 : 11)

இவ்விடத்தில் இடப்பெயராய்வுகள் பற்றிய பின்வரும் அறிஞர்களின் கருத்துக்கள் கவனத்திற் கொள்ளத்தக்கன.

“பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த இடப்பெயர் களை இன்றும் அப்படியே நாம் அழைக்கும்படி செய்யும் ஓர் அரிய சக்தி இப்பெயர்களில் இருக்கிறது. இப்பெயர்களை யிட்டு ஊர்களையும், நகரங்களையும் அமைத்த மக்களும், சமுதாயங்களும் பல துன்பியல் நிகழ்ச்சிகளால் அழிக்கப் பட்டிருக்கலாம். ஆயினும், இப்பெயர்கள் (இடங்கள்) அத் துன்பங்களிலும் வாழ்ந்திருப்பதோடு, அவற்றுக்குக் காரண மானவர்கள் அழிந்து போனதையும் கண்டுள்ளன. இந்தப் பெயர்கள் இன்று ஆறு, நதிகளின் பெயர்களாகவும், மலை, குன்றுகளின் பெயர்களாகவும் இருந்து அந்தக்கால வரலாற் றுக்கும் மறைந்தொழிந்துபோன அல்லது இன்றும் இருக்கின்ற

மக்களின் குடிப்பெயர்ச்சிக்கும் அவர்களுக்கிடையே உள்ள சம்பந்தங்களுக்கும் அரிய, பெரிய சான்றுகளாக அமைந் துள்ளன" என்பது பிரெஞ்சு அறிஞரான டாக்டர் என். லஹோ வேரியின் கருத்து. ( கதிர் தணிகாசலம் 1992 : 119,120 )

"வரலாறு மௌனமாகும்போது இடப்பெயர்கள் வாய் திறந்து பேசக்கூடும்" என்பது எல்.வி. இராமஸ்வாமி ஐயரின் கருத்தாகும் (கதிர் தணிகாசலம் 1992 : 120)

இக்கருத்துகளை மனதிற் கொண்டு கந்தரோடை இடப் பெயர்க் காரணம், கந்தரோடையிலுள்ள குறிச்சிப் பெயர்கள் என்பவற்றை விளங்கிக் கொள்வது பிரயோசனமானதாக இருக்கும்.

கந்தரோடையுடனான கடல்வழிப் போக்குவரத்து வழுக்கையாற்றினூடகவே இடம்பெற்றுள்ளது என்பதற்குக் குடாக்கரை(குடாரை), சங்கடவத்தை(சங்காவத்தை), திரும்பு துறை, தங்குதுறை போன்ற இடப்பெயர்கள் தக்க சான்று களாக உள்ளன.

மேலும், ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளது போல உடுவில் என்பதில் உடு என்பதற்குரிய அர்த்தங்களில் ஓடக்கோல் என்பதும் ஒன்றாகவுள்ளது. வில் என்பதற்குக் குளம் என்றும் பொருளுண்டு. எனவே, ஓடக்கோல் போட்டுத் தோணிகளைச் செலுத்தும் குளம் என்ற பெயரில் கந்தரோடைக்குக் கிழக்குப் பக்கத்தில் உள்ள குளத்திற்கு 'உடுவில்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

எனவே, கந்தரோடையுடனான பண்டைக்காலக் கடல் வழிப் போக்குவரத்து கந்தரோடைக்குளத்துடன் நின்று விடாமல் உடுவில்குளம்வரை (குடாக்கரைவரை) நடைபெற் றுள்ளது என்பது தெளிவாகிறது. இவ்விரண்டு குளங்களையும் இணைத்துக் காணப்படும் கால்வாய்வழியாகவே இப்போக்கு வரத்து இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

கந்தரோடைக்கு அப்பால் அளவெட்டி, தெல்லிப்பழை, வசாவிளான்வரை தற்போது வழுக்கையாறு நீடித்துக் காணப் பட்டாலும், முற்காலத்தில் கந்தரோடைக்கு அப்பால் வழுக் கையாற்றினூடாகப் போக்குவரத்துகள் நடைபெற்றமைக்கு ஆதாரங்கள் ஏதும் இதுவரை காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி வழுக்கையாற்றின் பாதை யில் மலை என்பதைக் குறிக்கும் ஊராகக் கதிரமலை மட்டுமேயுள்ளது. இது கந்தரோடையின் மறுபெயராக இருக்க லாம் அல்லது அதன் அருகில் சுன்னாகத்தில் உள்ள கதிர மலையாகவும் இருக்கலாம்.

ஆறானது மலையிலிருந்தே உற்பத்தியாகின்றது என்ற கருத்தை ஏற்றுக் கொள்வதாயின் வழுக்கையாறானது கதிர மலையிலிருந்துதான் உற்பத்தியாகியிருத்தல் வேண்டும்.

அவ்விதமின்றி ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் குறிப் பிட்டுள்ளது போல நிலத்திலிருந்து இயற்கை ஊற்றாக ஆறுகள் உருவாகலாம் என்பதற்குக் கயத்தாறு ஓர் உதார ணம் என்று கொண்டாலும் இயற்கை ஊற்றுக்களைக் குறிக் கும் கயம் (கயக்கேணி), அங்கணம் (அங்கணம்மைக்கடவை) ஆகிய இரண்டு இடங்களும் கந்தரோடையின் இரு முக்கிய குளங்களுக்கு அருகிலேயே அமைந்துள்ளன.

ஆறுகள் ஓரிடத்திலிருந்து உற்பத்தியாகிக் குறித்த திசையில் ஓடுவதும், காலப்போக்கில் சில ஆறுகள் திசை மாறி ஓடுவதும், மறைந்து போவதும் வரலாற்றில் காணப்பட்ட விடயங்களாகும். தென்னிந்தியாவிலுள்ள தாமிரபர்ணியாறு ஒரு காலத்தில் இலங்கை வரை பாய்ந்ததாகக் கூறுவாருமுளர்.

வழுக்கையாறானது தற்போதுள்ளது போல மழைக் காலத்தில் மட்டும் நீரோடும் ஆறாக இருந்ததா அல்லது வருடம் முழுவதும் நீரோடும் ஆறாக முற்காலத்தில் இருந்ததா என்பதும் கண்டறியப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

எனவே, வழுக்கையாற்றையும் அதன் வழியில் அமைந்துள்ள குளங்கள், அதன் அருகில் அமைந்துள்ள இடங்கள் என்பவற்றைப் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டால் பண்டைத்தமிழர் வரலாற்றுண்மைகள் பல வெளிவரக் கூடும்.

இலக்கியச் சான்றுகள் பலவற்றை இழந்துவிட்ட நிலையில் இடப்பெயராய்வுகள் மூலம் எமது வரலாற்றுண்மைகளை வெளிக்கொண்டுவர நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

எது எப்படியிருப்பினும் வழுக்கையாற்று வழித்தடத்தில் கந்தரோடையே மத்தியஸ்தானமாக விளங்கியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

# 07. கந்தரோடையிலுள்ள குறிச்சிகள்

கந்தரோடையிலுள்ள குறிச்சிகளின் பெயர்களைச் சில அறிஞர்கள் சிலேடைப் பொருள் வைத்துப் பாடியுள்ளனர். அங்ஙனம் பாடியவர்களில் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்த வித்துவான் இ.திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிடத்தக்கராவார். (தமிழ்க் கந்தம் 1959 : 17) அவரியற்றிய அருளானந்தப் பிள்ளையார் பிள்ளைத்தமிழில் வருகைப்பருவத்துக்குரியதாக அமைந்த பாடல் வருமாறு

வற்றாக்கை யர்வாழ் மடத்தடி விளாங்கனி
வளரிக்கி ரானை யுண்ண
வளர்சங்கா வத்தை செல் திசை மாற்ற
உச்சாப் பனைமருங் கோடி மலிநீர்
முற்றா இயங்கம் புலந்தாண்டி மெய்ந்நூல்
முழுதுணர் கணக்கர் வளவின்
முடுகுநீர் வருட உறு தோப்பாம் பள்ளம் சேர்ந்து
மொழிபாடல் பிழை கண்டதும்
கற்றார்தம் அவையிலே கையிற் குடாரையால்
கழுத்தற்று மறுக வெட்டும்
கவிஒட்டன் கட்டுவளர் இனியா இலந்தைக்
கனிவேண்டி மைந்தர் மகளிர்
முற்றாரும் செந்நெல் நிறையும் கந்தரோடை நகர்
முன் பொருக்கன் புலமுறும்
முற்றிய பருத்தியோலைக் கின்னருளானந்த
மும்மதக் கரி வருகவே

இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள குறிச்சிகளின் பெயர் களாவன:

| | | |
|---|---|---|
| 01. வற்றாக்கை | 02. மடத்தடி | 03. விளாங்கணை |
| 04 இக்கிரானை | 05. சங்கவத்தை | 06. உச்சாப்பனை |
| 07. இயங்கம்புலம் | 08. கணக்கர் வளவு | 09. தோப்பாம் பள்ளம் |
| 10. குடாரை | 11. ஓட்டன் கட்டு | 12. இனியா இலந்தை |
| 13. கந்தரோடை | 14. பொருக்கன் புலம் | 15. பருத்தியோலை |

**குறிப்பு:** இப்பாடலின் சிலேடைப் பொருள் அருளானந்தப் பிள்ளையார் கோவில் பற்றிய குறிப்பில் தரப்பட்டுள்ளது.

வேறொரு அன்பர் கந்தையா உபாத்தியாயரின் பெருமையை எடுத்துக்கூற முற்பட்டவிடத்து கந்தரோடையின் சிறப்பையும், அதிலுள்ள குறிச்சிகளின் பெயர்களையும் பின்வருமாறு பாடியுள்ளார். (தமிழ்க் கந்தம் 1959 : 18)

சங்கம் பெருக்கமாய் இயக்கம் புலாக் குடாரையால்
சகத்தினில் மடந்தை அடிசாய வீழ்த்த வென்றே
பங்கம் மிகுந்த உச்சாப் பனைகள் பருத்தி
யோலையோ டினியா இலந்தை வளர் கந்தரோடை
தங்கம் பொருவும் வட்டாக்கைத் தடத்திடமான
தண் கயற்கண்ணி இக்கிரா ஆனை விளாங்கனியாய்
எங்கள் தம்மளைக் கணக்காரர் வளரும் பவத் தோப்பாம்
பள்ளம் ஒட்டான் கட்ட உகந்தனள் கந்தனையே.

இதன் பொருள் யாதெனில் அபாயம் நிறைந்த, உயர்ந்த பனைகள் ஓலைகள் மிகுந்து, இனிக்கும் இலந்தைகளோடு வளரும் கந்தரோடையில் பொன்னை ஒக்கும் வட்டாக்கை என்னும் இடத்தில் வீற்றிருக்கும் காயல் போலும் குளிர்ந்த கண்களையுடைய, எம்மையாளும் அம்மை, சங்கங்கள் அதி கரிப்பதனால் உண்டாகும் அறிவாம் கோடாரியால் அறியா மையை வேருடன் வீழ்த்தவும் ஆனை என்னும் நோயாற் பீடிக்கப்பட்ட இனிமை ஒட்டா விளாங்கனி போல எங்களைக்

கணக்கில்லாத பாவங்கள் வளரும் தோப்பாகிய பள்ளத்திற் சேரவிடாது, தன்னோடு சேர்ப்பதற்குக் கந்தையா என்னும் வள்ளலை உகந்தனள்.

**குறிப்பு:** இக்கந்தையா உபாத்தியாயரின் முன்னோர்களே வட்டாக்கை அம்பாள் ஆலயத்தை அமைத்தவர்களாம்.

இப்பாடலில் சுட்டப்படும் கந்தரோடைக் குறிச்சி களாவன:

| | | |
|---|---|---|
| 01. இயங்கம் புலம் | 02. சங்கம்புலம் | 03. பெருக்கம் புலம் |
| 04. குடாரை | 05. உச்சாப்பனை | 06. பருத்தியோலை |
| 07. இனியா இலந்தை | 08. வட்டாக்கை | 09. கயற்கண்ணி |
| 10. இக்கிராணை | 11. விளாங்கணை | 12. தம்மளை |
| 13. கணக்கர் வளவு | 14. தோப்பாம் பள்ளம் | 15. ஒட்டன்கட்டு |

இவ்விரு பாடல்களிலும் 15 குறிச்சிப் பெயர்கள் கூறப்பட்டுள்ள போதிலும் முதலாவது பாடலிற் கூறப்பட்டுள்ள மடத்தடி, சங்கவத்தை என்பவற்றுக்குப் பதிலாக கயற் கண்ணி, தம்மளை ஆகிய குறிச்சிப் பெயர்கள் இடம் பெற் றிருத்தல் கவனிக்கத்தக்கது.

வேனிலான் என்னும் புனைப்பெயர் கொண்ட அன்பர் ஒருவரும் கந்தரோடையின் குறிச்சிப் பெயர்களைப் பின்வரும் பாடலில் எடுத்துக் கூறியுள்ளார். (தமிழ்க் கந்தம் 1959 : 19 )

சங்கம் புலம்புமொரு பழனம் நிறைந்த வெழில்
சார்ந்த பெருக்கம் புலம்
சகலமும் தோய்தியக்கம் புலவு பேராளர்
சாதனை பல வியற்ற
துங்கமார் நிறமுற் றினியா விலந்தையொடு
துன்னி வானுச்சாப்பனை
தொகையாய் மலிந்து வளம் மிகையாய் அளிக்கவே
துன்பம் தொலைந்து வளமும்

எங்கும் பெருக்கக் கயற்கண்ணியார் பலர்
இசையோடு தமிழை ஏந்த
இங்கிதக் கணக்கர் தம் வளவொடு ஒட்டன்கட்
டெழில்சேர் பருத்தியோலை
தங்கிடும் புகழ்மல்கு வட்டாக்கை யெங்குமே
தன்மையொடு நன்மையருளும்
தரணிமுழு திறை கொள்ளும் அமரர்களும் அடிகொள்ளும்
தண்டமிழ்க் கந்தவேளே.

இதன் பொருள் என்னவெனில் - "சங்குகள் சப்திக்கின்ற, வயல்கள் மலிந்து, அழகு அளவிடற்கரியதாய் சேர்ந்திருக்கின்ற நாட்டிலே, அறிவு யாவும் மிக்கு இயக்கங்கள் பலவற்றைச் சேர்த்துக் கொள்ளும் பெரியோர்கள், அரிய, பெரிய செயல்களைச் செய்ய, பரிசுத்தம் மிகப் பொருந்திய நிறத்தைப் பெற்று இனிக்கும் இலந்தையோடு ஆகாயத்தை ஏமாற்றி மேற் செல்லும் பனைகள் அளவிடற்கரியதாய்ச் செல்வங்களை அதிகமாகக் கொடுக்க, துன்பங்கள் நீங்கி, செழுமை எங்கும் பெருக, கயல் போலும் கண்களையுடைய பெண்கள் தமிழைப் பண்ணுடன் பாட, கணக்கர் வளவு, ஒட்டன் கட்டு, பருத்தியோலை, வட்டாக்கை எங்குமே நற்பண்புகளுடன் நன்மைகளைக் கொடுக்கும் பூமி முழுவதும் வணங்குபவரும், தேவர்கள் பின்பற்றி நடக்கின்றவரும் குளிர்ச்சி பொருந்திய தமிழை நன்குணர்ந்த கந்தையா வென்னும் பெருமானே"

இப்பாடலில்

1. சங்கம்புலவு 2. பெருக்கம் புலம் 3. இயக்கம் புலவு
4. இனியா இலந்தை 5. உச்சாப்பனை 6. கயற்கண்ணி
7. கணக்கர் வளவு 8. ஒட்டன் கட்டு 9. பருத்தியோலை
10. வட்டாக்கை ஆகிய பத்துக் குறிச்சிப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

கந்தரோடையைப் போலவே இக்குறிச்சிகள் பலவும் வரலாற்று முக்கியமுடையனவாக இருக்கின்றன. இக் குறிச்சிகள் பற்றி இங்கே சுருக்கமாகப் பார்க்கலாம்.

1. **கயற்கண்ணி** - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல தொல்லியற் கருவூலங்களைத் தன்னகத்தே கொண் டுள்ள இக்குறிச்சியானது கந்தரோடையின் இருதய ஸ்தானமாக விளங்குகிறது. இது கயற்கணை, கயற் கேணி, கயக்கேணி என்ற பெயர்களாலும் அழைக்கப் படுகிறது. ஆயினும் பெருவழக்கில் இன்றும் கயக் கேணி என்றே அழைக்கப்படுகிறது. இக்குறிச்சியானது அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்திற்குத் தென் திசையில் குடாரைக்கு மேற்காக அமைந்துள்ளது. கயக்கேணி என்ற பெயரிலிருந்து கந்தரோடை என்ற பெயர் எவ்விதம் ஏற்பட்டிருக்கலாம் என்பது பற்றி ஏற்கெனவே தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

கயக்கேணியையும் அதைச்சூழவுள்ள இடங்களையும் இவ்விடத்தில் வாழும் ஒருசாரார் கந்தரோடை என்றே அழைத்து வருகின்றனர். அது பற்றியே இவ்விடத்தில் கந்தரோடை என்னும் குறிச்சி இருப்பதாகப் பாடி வைத்துள்ளனர்.

கயக்கேணி என்ற பெயர் கயற்கண்ணி அல்லது கயற் கணை என்ற பெயரின் திரிபாக ஏற்பட்டது என்று சிலர் கூறுகின்றனர். அது பற்றிய விபரம் வருமாறு.

கயல் என்றால் மீன். அக்ஷி என்றால் கண். கயற் கண்ணி, மீன்கண்ணி, மீனாக்ஷி என்பன ஒரே பொரு ளுடையன. கயற்கண்ணியான மீனாக்ஷி ஆட்சி புரிந்த இடம் மதுரை: பாண்டியநாடு. எனவேதான் மதுரையில் மீனாக்ஷி அம்மனுக்குக் கோவிலமைத்துத் தமது குலதெய்வமாகப் போற்றி வழிபட்டனர் பாண்டியர்.

அந்த வகையில் கயற்கண்ணி என்ற பெயருக்கும் பாண்டியர்களுக்குமிடையில் தொடர்பு இருத்தல் சாத்தியமானதே. இலங்கையின் முதற் சிங்கள அரசனான விஜயன் காலத்திலிருந்தே சிங்களவருக்கும் பாண்டியர்களுக்குமிடையில் தொடர்பு இருந்து வந்துள்ளது. சில சமயங்களில் பாண்டியர்கள் இலங்கை மீது படையெடுத்தும் வந்துள்ளனர்.

கந்தரோடை வாணிப நகராகவும் விளங்கியதால் நாகர், சிங்களவர், தமிழர் போன்ற எவர் ஆதிக்கத்தில் அது இருந்தபோதிலும் அவர்களுடன் பாண்டியர் தொடர்பு இருந்திருக்க வாய்ப்புள்ளது. அதன் விளைவாக இவ்விடத்திற்குக் கயற்கண்ணி என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

"வடபகுதியில் குறிப்பாகக் கந்தரோடையில் கிடைத்த நாணயங்களிற் பாண்டிய மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் முக்கியம் பெறுகின்றன. அச்சுக் குத்திய நாணய வகையைத் தொடர்ந்து இவை இங்கு கிடைப்பது பண்டு தொட்டு இரு பகுதிகளுக்குமிடையே நிலவிய தொடர்புகள் பற்றிய இலக்கியத் தொல்லியற் சான்றுகள் தருந் தகவல்களை உறுதி செய்வனவாக அமைந்திருக்கின்றன" (சிற்றம்பலம் 1993 : 494, 495)

பாண்டியர்கள் இவ்விடத்திற் செல்வாக்குப் பெற்றிருந்தமைக்கு அடையாளமாகக் கந்தரோடையின் மேற்குத் திசையில் (தற்போது மாசியப்பிட்டி என்று அழைக்கப்படும் இடத்தில்) பாண்டியர் குல தெய்வமான மீனாக்ஷி அம்மன் கோவில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாலயமானது மிகவும் புராதனமான ஓர் ஆலயமாகும். இவ்வாலயத்திற்கு வடபுறமாக

முதலாம் கஜவாகு மன்னனாற் கட்டுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் கண்ணகை அம்மன் ஆலயம் அமைந்துள் ளது. முதலாம் கஜவாகு மன்னன் காலம் கி.பி. 174 - 196 என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

மேற்படி கண்ணகை அம்மன் ஆலயம் அமைக்கப்படு வதற்குப் பல காலத்திற்கு முன்பே மீனாக்ஷி அம்மன் ஆலயம் அமைக்கப்பட்டிருந்ததாகச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. அதுமட்டுமன்றி மீனாக்ஷி அம்மன் ஆலயம் அமைக்கப்பட்டுள்ள இடம் தற் போதும் விஸ்தாரமான நிலப்பரப்பைக் கொண்டதாக இருப்பதுடன் இவ்வாலயத்துக்கான பழமை வாய்ந்த பூவல் அல்லது தெப்பக்குளமானது அதன் வட கிழக்குத் திசையில் பல மீற்றர் தூரத்திற்கு அப்பால் அமைந்துள்ளமையையும் கருத்திற் கொள்ளுமிடத்து முற்காலத்தில் இவ்வாலயமானது மிகப்பெரிய கோவி லாக இருந்துள்ளது தெளிவாகிறது.

இவ்வாலயமும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத் தில் அழித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. இவ்வால யத்தின் புராதன விக்கிரகங்கள் மேற்படி பூவலில் மிக வும் ஆழமாகப் புதைக்கப்பட்டுள்ளன என்று எனது முன்னோர் கூறிவந்துள்ளனர். எனவே, இப்பூவற் பிரதேசம் ஆய்வுக்குட்படுத்தப்பட்டால் இவ்வாலயத் தின் தொன்மை வரலாற்றுக்குச் சான்றுகள் கிடைக்கக் கூடும்.

மேலும் இவ்வாலயத்திற்குப் பூஜை செய்வதற்கெனப் பாண்டியர்கள் பிராமணரை இங்கு(கந்தரோடையில்) குடியிருத்தி, பிராமணக்குடியிருப்புக்களையும் ஏற் படுத்தி, அவர்களுக்கு நிவந்தமாக நிலங்களையும் வழங்கியுள்ளனர். கந்தரோடைக்குளத்திற்குத் தென் புறமாக, இவ்வாலயம் அமைந்துள்ள மாசியப்

பிட்டிக்கும், கயற்கண்ணிக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள பெரும்பாலான காணிகள் அவ்விதம் அந்தணர் களுக்குத் தானமாக அல்லது நிவந்தமாக வழங்கப்பட் டவையாகும் என்று கூறப்படுகிறது. 19 ஆம் நூற் றாண்டின் இறுதிவரை மேற்படி நிலப்பரப்பு இவ்வால யப் பிராமணர்களுக்குரியனவாக இருந்ததை அறியக் கூடியதாகவுள்ளது.

**குறிப்பு:** மாளிகைத்திடர் என்னும் இடம் கந்தரோடை யில் உள்ளது என்றும் அது உக்கிரசிங்கனின் மாளிகை இருந்த இடமாக இருத்தல் கூடும் என்றுங் கூறுவாருமுளர். அவ்விடம் கயக்கேணிக்கு அண்மை யிலுள்ள ஓரிடமாக இருத்தல் கூடும். ( யாழ். கௌமுதி பக். 49)

2. **குடாரை** - முற்காலத்தில் குடாக்கரை என்று அழைக் கப்பட்ட இவ்விடம் தற்காலத்தில் வயல் நிலங்களாக, அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்திற்குத் தென் கிழக்காக, கயக்கேணிக்குக் கிழக்காக அமைந் துள்ளது. குடா என்றால் குடையப்பட்டது: மூன்று பக்கம் தரையுள்ளது என்று பொருள். இவ்விடம் முற்காலத்தில் அவ்விதம் இருந்திருக்க வாய்ப்புள்ளது.

3. **ஒட்டன் கட்டு** - கந்தரோடைக் குளத்திற்குக் கிழக்குத் திசையில், இனியா இலந்தை என்று அழைக்கப்படும் குறிச்சிக்கு மேற்குத்திசையில் மேட்டுப்பாங்கான நிலத் தில் இக்குறிச்சி அமைந்துள்ளது. ஒட்டன் கட்டு என்ற பெயர் ஏற்பட்டதற்குப் பல காரணங்கள் கூறப்படு கின்றன.

அ) **கொற்றவன் கட்டு** - கொற்றவன் என்றால் அரசன். எனவே, இவ்விடத்தில் அரண்மனை அல்லது அரசனுக்குச் சொந்தமான கட்ட டங்கள் அமைந்திருத்தல் கூடும். இப்பிரதேசத் தில் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை பரவலாகப் பழைய கால நாணயங்கள், பாசி மணிகள், மட்பாண்ட ஓடுகள் என்பன அதிகள வில் காணப்பட்டதாகக் கூறுவர். கடந்த வருட மும் (2011) இவ்விடத்தில் தொல்லியல் ஆய் வுகள் நடைபெற்றுள்ளன.

கொற்றவன் கட்டு என்பது கொற்றன் கட்டு என்று மாறிப் பிறகு ஒட்டன் கட்டாகியிருக்க லாம் என்கின்றனர் ஒருசாரார்.

ஆ) **கோட்டன் கட்டு** - ஆதிகாலத்தில் கந்த ரோடைக் குளத்தை வெட்டுவித்தவன் குளக் கோட்டு மகாராசா என்றும், அங்ஙனம் குளம் வெட்டும்போது எடுக்கப்பட்ட மண்ணின் பெரும் பகுதி இவ்விடத்தில் அதாவது குளத்தின் கிழக்குப்பகுதியில் கொட்டப்பட்டதென்றும் அதுவே குளக்கட்டாக அமைந்தது என்றும் சிலர் கூறுகின்றனர். எனவே, குளக்கோட்டனால் அமைக்கப்பட்ட குளத்தின் கட்டு ஆதலால் இதைக் குளக்கோட்டன் கட்டு என்று அழைத் தனர். காலப்போக்கில் கோட்டன் கட்டு என்று குறுகிப் பின் அது ஒட்டன் கட்டு என்று திரி படைந்திருக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர்.

இ) **ஒட்டங்கட்டு** - கந்தரோடை மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். முற்காலத்தில் உண வுக்காக மக்கள் செய்த பயிர்களில் குரக்கனும் ஒன்றாகும். கந்தரோடைக் குளத்தை அடுத்

துள்ள வயல்களிற் குரக்கன் பயிரிட்ட மக்கள் குரக்கன் தானியத்தை அறுவடை செய்த பின்னர் அதன் ஒட்டுக்களை மேட்டுப்பாங்கான இவ்விடத்தில் பரப்பி உலர்த்திக் கால்நடைகளுக்கு உணவாகக் கட்டி எடுத்துச் செல்வர் என்றும், அங்ஙனம் ஒட்டைக் கட்டிச் செல்வது பற்றியே இவ்விடத்திற்கு ஒட்டன் கட்டு என்று பெயர் வந்தது என்றும் சிலர் கூறுகின்றனர்.

ஈ) **ஒட்டம் கட்டு** - ஒட்டம் என்றால் பந்தயப் பொருள். ( க.த.அ.1980 : 229) எனவே. ஓட்டம் கட்டு என்றால் பந்தயம் கட்டுதல். அதாவது பந்தயங் கட்டி விளையாடும் இடம் என்பதால் ஒட்டம் கட்டு என்று ஆகியிருத்தல் வேண்டும். முற்காலத்தில் பந்தயங் கட்டுதல் சாதாரணமான ஒன்றாக இருந்துள்ளது. கந்தரோடை இராசதானியாக இருந்த காரணத்தால் இங்கு நாலாதேசங்களிலிருந்தும் பல்வேறு தேவைகளுக்காகப் பலதரப்பட்ட மக்கள் வந்திருப்பர். அவர்கள் தமது ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்காகவும், பிற காரணங்களுக்காகவும் பந்தய விளையாட்டுகளில் ஈடுபட்டிருப்பர். அதற்கான பந்தயத்திடலாக இவ்விடம் விளங்கியிருத்தல் கூடும். இவ்விடத்தில் அதிகளவில் உரோமாபுரி, சீனா, தென்னிந்திய புராதன நாணயங்கள் பெறப்பட்டமையும் அது காரணமாகவும் இருக்கலாம்.

உ) **ஒட்டன் கட்டு** - ஒட்டன் அல்லது ஒட்டர் என்போர் மண் வேலை செய்வோர். (க.த.அ. 1980 : 229) “இவர்கள் ஒட்டர நாட்டிலிருந்து குடியேறியவர்கள். (ஒட்டரம் என்பது ஒரிஸ்ஸா தேசம்)

ஆண்களும், பெண்களும் வேலை செய்து ஜீவனம் செய்வர். இவர்கள் தொழில் வீடுகட்டு தலில் கடைக்கால் தோண்டுதல், கிணறு வெட்டுதல், குளம் தோண்டுதல் முதலியன. இவர்கள் பாஷை வடுகு" (அ.சி 1996 : 295 ). வடுகு என்பது ஆந்திர நாடு: ஆந்திர மொழி. ( பு.த.அ. 2009 : 294 ) என்று பொருள்.

எனவே, கந்தரோடையில் குளம். வாய்க்கால், கிணறுகள் என்பன அமைத்தற் பொருட்டு ஆந்திரா விலிருந்து ஒட்டர்கள்(வடுகர்) குடியேற்றப்பட்ட இட மாக ஒட்டன் கட்டு இருந்திருக்கலாம். கந்தரோடையில் சில சாதியரை வடுகர் என்று அழைக்கும் வழக்கம் இருந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

கந்தரோடைக்கும் ஆந்திர நாட்டிற்கும் இடையில் நெருக்கமான தொடர்புகள் இருந்துள்ளன என்பதற்குத் தொல்லியற் சான்றுகளுமுள. முக்கியமாக, கந்த ரோடையிற் காணப்படும் பௌத்த தூபிகள் ஆந்திர தேசத்து அமராவதி, நாகார்ஜுன கொண்டா போன்ற இடங்களிற் காணப்படும் அண்டவடிவமான கட்டு மானங்களை ஒத்திருக்கின்றன என்று கூறப்படுகிறது. (பத்மநாதன் 2011 : 55)

கந்தரோடையிற் கிடைத்த சாசனமொன்று கி.பி. 3 - 4 ஆம் நூற்றாண்டுக்குரியதென்றும் அதில் ஆந்திர நாட்டில் வழக்கிலிலுந்த பிராமி லிபியிலே எழுதப்பட்டி ருந்த தென்றும் வி. சிவசாமி அவர்கள் குறிப்பிட்டுள் ளமையும் கவனிக்கத் தக்கது. (ஸ்கந்தா 1976 :38 )

ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணச் சரித்திரத்தில் கூறியுள்ள சில விடயங்களும் கவனத் திற் கொள்ளத்தக்கன. "தெலுங்க பாஷையும் தெலுங்கு

நாடும் வடுகெனப்படும். அதுபற்றியே அந்நாட்டிலிருந்து இங்கு வந்து குடிகொண்ட வடமரை வடுகரெனக் கூறுவர். அவர்களுள்ளே போகியர் ஒரு தொகையினர், இடையராகிய கோபிகர் பெரும்பாலர். கோபிகர் பிற்காலத்தில் கோவியரெனப்பட்டனர்" (1915 : 13,14)

பரராசசேகரம் பால ரோகநிதானத்தில் "வடுகுந் தமிழும் குணமாமே" ( 1928 : ) என்ற வரிகள் இங்கு (யாழ்ப்பாணத்தில் ) தெலுங்கு மொழி பேசுவோர் இருந் ததை உறுதிப்படுத்துகிறது.

**குறிப்பு :** அபிதான சிந்தாமணியில் ஒட்டரர் என்போர் ஒட்டர தேசத்திலிருந்து வந்தவர் என்றும் அவர்கள் மொழி வடுகு என்றுங் கூறப்பட்டுள்ளது.

4. **இனியா இலந்தை** - ஒட்டங்கட்டுக்குக் கிழக்குப்புறமாக அமைந்துள்ள குறிச்சி இதுவாகும். இனிமையான கனிகளைத்தரும் இலந்தை மரங்கள் இருந்தமையால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். இக்குறிச்சியில் மேற்படி மீனாக்ஷி அம்மன் ஆலயத்திற்குப் பூசை செய்யும் அந்தணர் குடியிருப்புக்கள் அமைந்திருந்தன. இனியா இலந்தையின் தென்புறமாக உள்ள குறிச்சிக்கு நாவல் நின்ற ஒல்லை என்று பெயர். ஒல்லை என்றால் சோலை என்று பொருள். (இ.பாலசுந்தரம் பக். 1988 ;26 )

5. **இலந்தை அடைப்பு** - இது இனியா இலந்தைக்கு அருகிலுள்ள ஓரிடமாகும்.

6. **கந்தரோடை** - கந்தரோடை என்ற ஊர்ப்பெயரால் அமைந்த குறிச்சி இதுவாகும். கயக்கேணியும் அதை அடுத்துள்ள பிரதேசமும் பயிர்ச்செய்கைக்கு அதிகம் வாய்ப்பற்ற மேட்டுப்பாங்கான நிலமாக இருந்தமையால்

அவ்விடத்தைக் கலட்டி என்று அழைத்தனர். ஆயினும் அவ்விடத்தையே கந்தரோடை என்றும் அழைக்கின்றனர்.

7. **பருத்தியோலை** - ஒல்லை என்றால் சோலை. ஒல்லை என்பது காலப்போக்கில் 'ஓலை'யாகத் திரிபடைந்துள்ளது. ( பாலசுந்தரம் 1988 : 26) அங்ஙனம் திரிபடைந்த பல இடங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளன. எனவே பருத்திச் செடிகள் மிகுதியாக இருந்த காரணத்தால் பருத்தியொல்லை என்றழைக்கப்பட்ட இக் குறிச்சியும் காலப்போக்கில் பருத்தியோலையாக மாறியுள்ளது. பருத்தியோலையானது ஒட்டங்கட்டுக்குத் தென்மேற்குத்தசையில் அமைந்துள்ளது.

8. **இக்கிரானை** - இக்குறிச்சியானது ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு வடகிழக்குத் திசையில் சுன்னாகம் - மாசியப்பிட்டி வீதியின் (டாக்டர் சுப்பிரமணியம் வீதி) வடக்குத்திசையில் அமைந்துள்ளது. இக்கிரிச் செடிகள் மிகுதியாக இருந்த காரணத்தால் இக்குறிச்சிக்கு இக்கிரானை என்று பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். தற்போது இக்கிரானை ஒரு கிராமமாக, வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் அடக்கப்பட்டுள்ளது. (இக்கிரியணை என்பது இக்கிரணையாகி இருத்தல் கூடும். விளாங்கணை பற்றிய குறிப்பையும் பார்க்க.)

9. **வெளியத்தாழ்வு** - இக்குறிச்சியானது ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குக் கிழக்காக, இக்கிரானைக்குத் தெற்காக அமைந்துள்ளது. இது நீர் தேங்கிநிற்கும் பள்ளக்காணியாக இருந்தமையால் இப்பெயர் பெற்றதென்பர்.

10. **வட்டாக்கை / வற்றாக்கை** - வத்தாக்கை இக்குறிச்சி யானது கந்தரோடையின் கிழக்குத்திசையில் உடுவிற் குளத்திலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் கால்வாய் டாக்டர் சுப்பிரமணியம் வீதியைக் கடக்குமிடத்தில் கால்வாய்க்கு மேற்குத் திசையில் அமைந்துள்ளது. பிரசித்தி பெற்ற வட்டாக்கை அம்மன் ஆலயம் இவ் விடத்தில் அமைந்துள்ளது.

அ) வட்டம் என்பதற்கு ஆலமரம் என்றும் பொரு ளுண்டு. (சா.சி.பி.அ. 1994 ; 987) கை என்பதற்கு இடம் என்றும் பொருளுண்டு. (க.த.அ.1980; 384). எனவே ஆலமரம் நின்ற இடம் என்னும் பொரு ளில் வட்டக்கை என்று ஏற்பட்டு பின்னர் வட்டாக்கை ஆகியிருக்கலாம். இவ்விடத்தில் பழமை வாய்ந்த ஆலமரம் இருந்தமை குறிப் பிடத்தக்கது.

ஆ) **வற்றாக்கை** - வற்றாத நீர் அல்லது நீரூற்று உள்ள இடம் என்னும் பொருளில் வற்றாக்கை என்று அழைக்கப்பட்டிருக்கலாம். இவ்விடத்தில் உள்ள கேணி, மடத்துக் கிணறு என்பன தற் போதும் நன்னீரூற்று மிக்கதாக விளங்குவது குறிப்பிடத்தக்கது. இவ்விடத்தில் வழுக்கை யாற்று வாய்க்கால் நீர் வற்றாத தன்மையுடைய தாக இருந்தமையற்றியும் வற்றாக்கை என்று அழைக்கப்பட்டிருக்கலாம்.

இ) வத்தா என்பதற்குச் சொல்பவர், நூலாசிரியர் என்றும் கை என்பதற்கு ஒழுக்கம் என்றும் பொருள்கள் உள. (க.த.அ.1980 ; 811 ; 384). அதாவது ஒழுக்கமுள்ள நூலாசிரியர் அல்லது

அறிஞர்கள் வாழ்ந்த இடம் என்பது பற்றியும் வத்தாக்கை என்ற பெயர் ஏற்பட்டிருத்தலும் சாத்தியமே. இவ்விடத்தில் கல்விகேள்விகளிற் சிறந்த அந்தணர் நெடுங்காலமாக வசித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. முருகேச பண்டிதர் இயற்றிய அம்பாள் ஊஞ்சலில் வத்தாக்கை என்றே குறிப்பிட்டுள்ளார். (முல்லைத்தீவிலுள்ள வற்றாப்பளை - வத்தாப்பனை என்ற பெயர்களை நோக்குக.)

முல்லைத்தீவில் கண்ணகி ஆலயம் அமைந்த பத்தாம் பளை என்பது வற்றாப்பளை என மருவியது என்பர் (இ.தி.கா.இ. கோ. பக்.192) அவ்விதமாயின் பத்தாக்கை என்பது வற்றாக்கை ஆயிற்றா? பக்தர்களுக்கு அருளை வாரி வழங்கும் வற்றாத கையுடைய அம்பாள் கோவில் கொண்டுள்ள இடம் என்பது பற்றியும் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

11. **கணக்கர் வளவு** - கந்தரோடையின் கிழக்குத்திசையில் ஆலடிப்பிள்ளையார் கோவிலுக்கு மேற்குப் புறமாக இக்குறிச்சி அமைந்துள்ளது.

12. **பிராமண வளவு** - ஆலடிப்பிள்ளையார் கோவிலுக்குக் கிழக்குத்திசையில் அமைந்துள்ள ஓரிடமாகும்.

13. **சித்தியார் வளவு** - கணக்கர் வளவுக்கு மேற்குத்திசையில் அமைந்துள்ளது. சிவஞானசித்தியார் நூலில் மிகவும் தேர்ச்சி பெற்ற பெரியார் ஒருவர் வாழ்ந்த இடம் என்பதாலேயே இப்பெயர் பெற்றது என்பர். ( வித்தகம் கந்தையாபிள்ளை 1977 : 8)

14. **விளாங்கணை** - இக்குறிச்சியானது கந்தரோடையின் மேற்குத்திசையில் பருத்தியோலைக்குத் தென்கிழ காக, கந்தரோடைக்குளத்திற்குத் தென்திசையில் அமைந்துள்ளது. அணை என்பதற்கு இருக்கை என் னும் பொருளும் உள்ளது. (க.த.அ.1980 ; 20) எனவே விளாமரங்கள் மிகுதியாக இருந்தமை காரணமாக இப் பெயர் ஏற்பட்டிக்கலாம்.

15. **அங்கவளை** - விளாங்கணைக்குத் தென்திசையிலுள்ள குறிச்சியாகும். வளை என்றால் வளைதல். இவ்விடத் திற்கு அருகில் வழுக்கையாறு வளைந்து சென்ற காரணத்தால் இப்பெயர் ஏற்பட்டிருத்தல் கூடும்.

16. **தினகரன் பிட்டி** - இதுவும் விளாங்கணைக்குத் தென்திசையிலுள்ள ஓரிடமாகும்.

17. **மடத்தடி** - விளாங்கணைக்கு மேற்குத் திசையில் அமைந்துள்ள குறிச்சிகளில் இதுவும் ஒன்றாகும். மடம் என்பதற்குச் சத்திரம் என்றும் பொருளுண்டு. எனவே, பழைய காலத்தில் வழுக்கையாற்றின் வழியாக அல் லது கந்தரோடை வழியாகத் தரைமார்க்கமாகப் பிரயா ணஞ் செய்வோர் (வணிகர்கள், யாத்திரீகர்கள் முதலா னோர்) தங்கிச் செல்லும் சத்திரம் அல்லது மடம் இவ் விடத்தில் இருந்திருக்கலாம். கந்தரோடை வாணிப நகராக விளங்கியதால் இத்தகைய யாத்திரீகர் விடுதி அமைந்திருத்தல் சாத்தியமான ஒன்றாகும். இக் குறிச் சிக்கு அருகாமையில் பழைய மடம் ஒன்று இருந் தமைக்கான கட்டட இடிபாடுகள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

**குறிப்பு** - வட்டாக்கை அம்மன் ஆலயத்தின் தென் கிழக்குத் திசையிலும் ஒரு மடம் இருந்துள்ளது. அவ் விடம் தற்போதும் மடம் என்றே அழைக்கப்படுகிறது.

எமது பண்பாட்டில் மடங்களின் தோற்றம் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. அனுராதபுரத்தில் உள்ள 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டு ஒன்று தமிழ் வணிகர் அமைத்த மடம் பற்றிக் கூறுகிறது என்ற வீரசிங்கம் சிவரூபியின் கூற்றும் (2012 ; 69) இங்கு நோக்கற்குரியது. அக்காலத்தில் அனுராதபுரம் போலவே கந்தரோடையும் தலைநகராக விளங்கி யுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

18. **சங்கம்புலம்** - இக்குறிச்சியானது கந்தரோடையின் தென் மேற்குத்திசையில் தினகரன் பிட்டிக்குத் தெற்காக அமைந்துள்ளது. சங்கன் என்றால் இயங்கஞ் செடியைக் குறிக்கும். இயங்கஞ் செடி மிகுந்த இயங்கம் புலவு என்னும் குறிச்சியொன்றும் இருப்பதால் அதிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் நோக்குடன் இதற்குச் சங்கம் புலவு என்று பெயரிட்டு அழைக்கிறார்கள் போலும். கந்தரோடை இந்து மயானம் இக்குறிச்சியிலேயே அமைந்துள்ளது.

19. **உச்சாப்பனை** - இக்குறிச்சியானது அருளானந்தப் பிள்ளையார் கோவிலுக்கு வடமேற்குத் திசையில் அமைந்துள்ளது. மிகவும் உயரமான பனைமரங்கள் இருந்த காரணத்தால் இப்பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

20. **இயங்கம் புலம்** - இயங்கஞ் செடிகள் மிகுந்திருந்த காரணத்தால் இக்குறிச்சிக்கு இப்பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

21. **சங்காவத்தை** - வத்தை என்பதற்குத் தமிழில் நீரில் செல்லும் கட்டுமரம் என்றும் பொருளுண்டு. (பால சுந்தரம் 1988 : 28) எனவே,சங்கடம் என்ற தோணிகள்

அல்லது வத்தைகள் தரித்து நின்ற இடம் என்பதால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். இவ்விடம் குடாரைக்குத் தென்பாகத்தில் உள்ளது.

22. பொருக்கம் புலம் / பெருக்கம்புலம் - இக்குறிச்சி தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் வடகிழக்குத் திசையில் அமைந்துள்ளது. தற்போது இவ்விடத்தில் இப் பாடசாலையின் விளையாட்டு மைதானம் அமைந் துள்ளது.

23. தோப்பாம் பள்ளம் - இக்குறிச்சி கயக்கேணிக்குத் தென் திசையில் பனை மரங்கள் மிகுந்த இடமாக உள்ளது. இதில் தோப்பு, பள்ளம் என்ற இரண்டு சொற்கள் இடம்பெறுகின்றன. ஆயினும் இவ்விடம் பள்ளமான இடமன்று.

கந்தரோடை வரலாற்றுக் காலத்தில் 'பள்ளம்' என்ற பெயருடன் தொடர்பாக இரண்டு முக்கிய இடங்கள் கூறப்பட்டுள்ளன. அவை கீரிமலைக்கு அருகில் உள்ள வளவர்கோன் பள்ளம், குமாரத்திப்பள்ளம் என்பன வாகும்.(யா.வை.வி. 1928 : 7) வளவர்கோன் பள்ளம் என்பது சோழ அரசன் ஒருவன் கீரிமலைக்கு வந்த போது தங்கியிருந்த இடமாகும்.குமாரத்திப் பள்ளம் என்பது மாருதப்புரவீகவல்லி தங்கியிருந்த இடமாகும் ( யா.வை.வி.1928 : 7,8)

பள்ளம் என்றால் குழி: தாழ்நிலம் என்று பொருள். (க.த.அ. 1980 : 653 ) எனவே, ஓர் அரசன் அல்லது அரசகுமாரி அவ்விதமான இடத்தில் தங்கியிருத்தல் ஏற்புடையதாகாது. எனவே, பள்ளம் என்பதற்கு வேறொரு மறை பொருள் இருத்தல் வேண்டும்.

ஈழமண்டல சதகத்தில் மாருதப்புரவீகவல்லி தங்கி யிருந்த இடம் பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"மானமதை மன்னுயிரி னோம்பு வாளாகலின்
மாது நிலவறை யிருந்தாள்
மற்றது குமாரத்தி பள்ளமெனவே கொடிம்
மாநில மதித்துரைக்கும் ........"

இதன் பொருள் : "தன் மானத்தை நிலை பெற்ற தன்னுயிர் போலக் குறிக்கொண்டு பாதுகாக்கும் உயர் குடிப்பிறப்பினளாகலின் , அக்கன்னிகை நிலவறையில் இருந்தனள்: அதை இம் மாநிலம் குமாரத்திப் பள்ளம் என மதித்துரைக்கும்'' என்பதாம். (ஈழமண்டல சதகம் : 194)

எனவே, மாருதப்புரவீகவல்லி பாதுகாப்புக்கருதி சுரங்கம் அமைத்து அதில் தங்கியிருந்திருக்க வேண்டும். அதை வெளிப்படையாகக் கூறாமல் குமாரத்திப் பள்ளம் என்று குறிப்பிட்டுள்ளனர் போல் தோன்றுகிறது. கீரிமலையில் கிருஷ்ணன் கோயிலுக்கு அருகாக, கீரிமலை காங்கேசன்துறை வீதிக்கும், கீரிமலை மாவிட்டபுரம் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் சுரங்கப்பாதை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பரமேஸ்வரன் 2006 : 36)அது மாருதப்புரவீகவல்லியுடன் தொடர்புடையதா இல்லையா என்பது தெரியவில்லை.

அடுத்து, குமாரத்திப்பள்ளத்திலிருந்த மாருதப்புரவீகவல்லியைக் கதிரைமலை அரசனான (கந்தரோடை அரசனான) உக்கிரசிங்கன் கவர்ந்து சென்று தனது இருப்பிடமான மலைமுழைஞ்சிக்குக் கொண்டுசென்று, அங்கு அவளை மணமுடித்தான் என்று கூறப்படுகிறது. (இராசநாயகம் 2003 : 233)

மலைமுழைஞ்சு என்றால் மலைக்குகை என்று பொருள். (கை.மா.1983 : 4) கதிரமலையிலுள்ள குகை என்ற பொருளில் கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவ மாலை முதலிய நூல்கள் உக்கிரசிங்கன் இருப் பிடத்தை மலைமுழைஞ்சு என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும். ( உக்கிரசிங்கனைச் சிங்கமுடையவன் என்று கூறியமையால் சிங்கம் குகையில் வசிக்கும் என்ற கருத் திலும் அவ்விதம் கூறியிருத்தல் கூடும்)

ஆனால், கந்தரோடையில் மலை இருந்தமைக்கு எவ் வித சான்றும் இல்லை. ஆயினும், கயக்கேணியிலும் அதற்கு அருகாமையிலும் உயரமான திட்டிகள் இருந் துள்ளன. எனவே, உக்கிரசிங்கன் அரண்மனையிலோ அல்லது அதற்கு அருகாமையிலோ (குகைபோன்ற) நிலவறை அல்லது சுரங்கஅறை இருந்திருத்தல் வேண்டும். அதனையே மலைமுழைஞ்சு என்று பழைய வரலாற்று நூல்கள் குறிப்பிட்டுள்ளன போலும். (மலை யில்லாத கந்தரோடையைக் கதிரமலை என்று கூறிய வர்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்த நிலவறையை மலைக் குகை / மலைமுழைஞ்சு என்று குறிப்பிட்டதில் ஆச்சரியம் இல்லை அல்லவா? )

எனவே, குமாரத்திப்பள்ளத்திலிருந்து கவர்ந்து வந்த சோழ இளவரசியை உக்கிரசிங்கன் தனது அரண் மனைத் தோப்பிலிருந்த நிலவறையில் பாதுகாப்பிற் காக மறைத்து வைத்திருத்தல் சாத்தியமானதொன் றாகும். அவ்விடமே தோப்பாம் பள்ளம் என்று அழைக் கப்பட்டிருத்தல் வேண்டும்.

இன்னொரு முறையிலும் பள்ளம் என்பதற்கு விளக்கம் பெறமுடியும் மாருதப்புரவீகவல்லி தனது குன்மநோய் நீங்குதற்பொருட்டுக் கீரிமலைக்கருகில் தனது சேனையுடன் பாளையமிட்டிருந்தாள் என்று

யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. பாளையம் என் பதற்குக் கூடாரம், மன்னர் வசிக்கும் ஊர் என்ற பொருள்களும் உள.(க.த.அ.1980 : 667) எனவே, மாரு தப்புரவீகவல்லி தன் சேனையுடன் இங்கு வந்து தற் காலிகமாகத் தங்கியமையால், கூடாரமமைத்துத் தங்கியிருத்தல் வேண்டும். சோழன் குமாரத்தியாகிய மாருதப்புரவீகவல்லி கூடாரமமைத்துத் தங்கிய கார ணத்தால் அவ்விடம் 'குமாரத்திப் பாளையம்' என்று அழைக்கப்பட்டு, காலப்போக்கில் குமாரத்திப்பள்ளை யம் - குமாரத்திப்பள்ளம் என்றாகியிருத்தல் வேண் டும். (தமிழ்நாட்டில் பாளையம் என்ற பெயரில் பல ஊர்கள் இருந்தாலும் இலங்கையில் அவ்விதம் ஒரு சில இடங்களே இருப்பது குறிப்பிடத்தக்கது)

அவ்விதமே, உக்கிரசிங்கன் இளவரசியைக் கொண்டு வந்து வைத்திருந்த தோப்பு தோப்பாம் பாளையம் என்று அழைக்கப்பட்டு காலப்போக்கில் தோப்பாம் பள்ளமாகியிருக்கலாம்.

**குறிப்பு :** யாழ்ப்பாண வைபவமாலையை இயற்றிய மயில்வாகனப்புலவரும், கைலாயமாலையை இயற்றிய முத்துராசக்கவிராயரும் தமிழ்ப் பாண்டித்தியம் மிக்க வர்கள் என்பதில் சந்தேகமில்லை. எனவே, அவர் களின் நூல்களில் யாழ்ப்பாண வரலாற்றுக்குறிப்பு களுடன் கர்ணபரம்பரைக்கதைகள், வர்ணனைகள், மறைபொருட் சொற்பிரயோகங்கள் என்பன தாரள மாகவே இடம்பெற்றுள்ளன. அதேவேளை இன்றைய வரலாற்றாய்வாளர்களுக்கு உள்ள வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் அவர்கள் யாழ்ப்பாண வரலாற் றைப் பலரிடமிருந்தும் திரட்டி எழுதியுள்ளமை போற்று தலுக்குரியதாகும்.

24. **கனவெட்டாங்கரை** - கந்தரோடை பழைய விளையாட்டு மைதானம் அமைந்துள்ள இடம் இதுவாகும். ஒட்டங்கட்டிற்கு வடதிசையில் உள்ளது. கனவட்டம் என்றால் குதிரை. (க.த.அ. 1980 : 309) நெடுந்தொகையில் 'வழுதி கனவட்டம்' என்று பாண்டியன் குதிரை குறிப்பிடப்பட்டுள்ளது.
( T.L. : 1982 : 837) கந்தரோடைக்கும் பாண்டியருக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்துள்ளமைக்குத் தொல்லியற் சான்றுகள் உள. அந்த அடிப்படையில் குதிரையைக் குறிக்கும் கனவட்டம் என்ற சொற்பிரயோகம் இங்கு மிகப்பழைய காலந்தொட்டு இருந்து வந்திருக்கலாம்.

கந்தரோடை இராசதானியாகச் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் வழுக்கையாற்றின் வழியாக வெளிநாடுகளிலிருந்து இங்கு குதிரைகள் கொண்டுவரப்பட்டிருக்கலாம். அவை கந்தரோடைக் குளத்திலிருந்து இவ்விடத்தில் இறக்கப்பட்டிருக்கலாம். எனவே, குதிரைகள் (கனவட்டம்) இறக்கப்பட்ட இடமாதலால் இவ்விடம் கனவட்டங்கரை என்று அழைக்கப்பட்டிருக்கலாம். (அல்லது அரசனது குதிரைகள் கட்டுமிடமாகவும் இது இருந்திருக்கலாம்)

"2011 ஆம் ஆண்டில் கந்தரோடையில் நடைபெற்ற ஆய்வின்போது குதிரையின் எலும்பு கிடைத்துள்ளமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.இலங்கையிலே குடிகளாகிவிட்ட பெருங்கற்பண்பாட்டு மக்கள் குதிரை வாணிபத்தில் ஈடுபட்டனர் என்பது இதனால் தெளிவாகிறது" என்ற சி.பத்மநாதன் அவர்களின் கூற்று இதை வலுப்படுத்துகிறது. (2011: 22) தற்காலத்தில் இவ்விடம் கனவெட்டாங்கரை என்று அழைக்கப்படுகிறது.

**குறிப்பு:** கந்தரோடைச் சூழலை நோக்குமிடத்து கந்த ரோடைக்குளம் அமைந்துள்ள இடத்திற்கருகில் வழுக் கையாற்றினூடாக தோணிகளில் வரும் பொருட்கள் ஏற்றியிறக்கும் பெரிய துறைமுகம் இருந்திருத்தல் வேண்டும். அதேவேளை, அரசமாளிகை அல்லது அரண்மனை கயக்கேணிக்கருகில் இருந்ததால் அரச குடும்பத்தினரும், முக்கிய அரசபிரதிநிதிகள், அரச விருந்தாளிகள் பிரயாணஞ் செய்யும் மார்க்கமாக கந்த ரோடைக்குளத்திலிருந்து முக்கிய கால்வாய்வழி உடு விற் குளத்தினூடாகக் குடாக்கரை வரை பயன்படுத் தப்பட்டிருத்தல் வேண்டும்.

25. வேவில் - வட்டாக்கை அம்மன் ஆலயத்திற்குத் தென் கிழக்குத் திசையில் அமைந்துள்ள வயல் நிலங் களைக் குறிக்கும். பாடோடி என்னும் இடமும் இங்குள்ளது.

26. **தம்மளை** - சங்கம் புலத்திற்கருகில் உள்ள குறிச்சி. தம்பலம் என்றால் இலந்தை. எனவே, இலந்தை மரங்கள் மிகுதியாக இருந்த காரணத்தால் இப்பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். இனியா இலந்தை என்று ஒரு குறிச்சி உள்ள காரணத்தால் இலந்தையின் இன் னொரு பெயரில் இக்குறிச்சி தம்மளை என்று அழைக் கப்படுகிறது போலும்.

27. உத்திரிக்கை / உத்திரிகக்கட்டு - கந்தரோடை பெரிய மதவடிக்குளத்திலிருந்து வழுக்கையாறானது கந்த ரோடைக் குளத்துடன் சேரும் இடத்திற்கு அருகி லுள்ள குறிச்சிக்கு இப்பெயர். உத்திரி என்றால் பருத்தி (க.த.அ. :159) எனவே. இவ்விடத்தில் பருத்திச் செய்கை அதிகளவில் நடைபெற்றிருத்தல் வேண்டும்.

இவ்விடம் கந்தரோடைக்குளத்தின் வடக்குப் பக்கத்தில் உள்ளது.( கந்தரோடைக்குளத்தின் தென்கிழக்குப் பக்கத்தில் பருத்தியொல்லை அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது)

28. **சந்திரங்கடவை** - இக்குறிச்சி பெரிய மதவடிக்குளத்திற்கு அருகில் உள்ளது. சத்திரக்கடவை என்பதே சந்திரங்கடவையாகத் திரிபடைந்திருத்தல் கூடும். மடத்தடி போலவே இவ்விடத்திலும் யாத்திரீகர், வணிகர் தங்கும் சத்திரம் இருந்திருத்தல் வேண்டும். பெருந்தொகையான யாத்திரீகர், வணிகர் வருகை தரும் இடமாக இருந்தமையால் கந்தரோடைக் குளத்தையண்டிச் சத்திரங்களும், மடங்களும் இருந்ததில் வியப்பில்லையல்லவா?

# ௦௧. கந்தரோடை மக்கள்

ஆதிகாலத்தில் தலைநகரில் வாழ்ந்த மக்கள் - அதுவும் உலகின் பல பாகங்களிலும் இருந்து வாணிப நிமித்தம் பல்வேறு மக்கள் வந்து செல்லும் தலைநகரில் வாழ்ந்த மக்கள் - அறிவு, செல்வம், செல்வாக்கு, விருந்தோம்பும் பண்பு என்பவற்றில் சிறந்து விளங்கியிருப்பர் என்பதில் சந்தேகமில்லை.

கந்தரோடை தன் பொலிவையும், சிறப்பையும் இழந்திருந்த காலத்திற்கூட இங்கு வாழ்ந்த மக்கள் இங்கு வந்த மற்றோரையும் வாழ வைத்துத் தாமும் வாழ்ந்து வந்துள்ளனர். அதனாற்றான் "வந்தாரை வாழவைக்கும் கந்தரோடை" என்ற சிறப்பிபைப் பெற்றுள்ளது எமது ஊர்.

முற்காலத்தில் பிறநாட்டினர் கந்தரோடையை நோக்கி வந்தனர் எனில் பிற்காலத்தில் கந்தரோடை மக்கள் திரவியந் தேடித் திரைகடல் தாண்டிச் சென்றனர். சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் கந்தரோடையில் வசித்தவர்களில் கணிசமானோர் சிங்கப்பூர், மலாயன் நாடுகளில் பணிபுரிந்து விட்டு வந்த ஓய்வூதியக்காரர் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

கந்தரோடையில் வாழ்கின்ற பெரும்பாலான மக்களின் தொழில் விவசாயமாகும். தற்காலத்தில் நீர்வளம், நிலவளம் என்பன அதிகம் சிறந்ததாக இல்லாவிட்டாலும் இம்மக்கள் தமது கடின உழைப்பினால் தமது ஊரைச் செழிப்புறச் செய்துள்ளனர்.

கந்தரோடையின் பெரும் பாகங்களிலும் வழுக்கையாற்று ஓரங்களிலும் நரைமண் காணப்படுகிறது. கீழ்ப் பட்டைகளில் சுண்ணக்கல் காணப்படுகிறது. புதைபொருள் ஆய்வுப் பகுதியில் செம்மஞ்சள் நிற மண்ணும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

கந்தரோடைக்குளம், உடுவிற்குளம், பெரியமதவடிக் குளம் (வண்ணார் குளம்) என்பவற்றுக்கு அருகிலும், மற்றும் பலவிடங்களிலும் வானுற வளர்ந்து, பரந்து நிற்கும் மருத மரங்களும், வயல்வெளிகளும் கந்தரோடையை மருதநில மாக்கியுள்ளன.

மருதமரங்களைத் தவிர ஆலமரங்கள், அரசமரங்கள், நாவல்மரங்கள், வேப்பமரங்கள், இலுப்பை மரங்கள், புளிய மரங்கள், கடுக்காய்மரங்கள், தென்னை, பனை மரங்கள் என்பனவும் வானுயர வளர்ந்து ஊரை அழகு செய்து நிற்கின்றன.

கந்தரோடையில் உள்ள வயல்களில் மழைக்காலங்களில் மழையை நம்பி நெற்செய்கை மேற்கொள்ளப்படுவது வழக்கமாக உள்ளது.அதே வயல் நிலங்களிற் பெரும்பாலானவற்றில் கோடை காலங்களில் தோட்டங்களாகக் காய்கறிகள், வெங்காயம், மிளகாய், மற்றும் பயறு, உழுந்து, குரக்கன் போன்ற தானியங்கள் பயிரிடப்படும்.

முற்காலத்தில் கோடையில் குரக்கன், பயறு, உழுந்து, தினை, எள், சாமை, வரகு போன்ற தானியங்களையே தமது சொந்தத் தேவையின் பொருட்டு அதிகளவில் பயிர் செய்தனர்.

தற்காலத்தில் பணப்பயிர்களான வெங்காயம், மிளகாய், பீற்றூட் மற்றும் காய்கறிவகைகள் கிணற்று நீரின் உதவியுடன் செய்கை பண்ணப்படுகின்றன.

முற்காலத்தில் கிணற்றிலிருந்து நீரை இறைப்பதற்காகத் துலாவையும், பனையோலையாற் செய்யப்பட்ட பட்டையையும் பயன்படுத்தினார்கள். துலைகள் அமைக்கப்பட்டுக்

குளங்களிலிருந்தும் நீரிறைக்கப்பட்டது. மாடுகளைப் பயன் படுத்தி நீரிறைக்கும் சூத்திரக் கிணறுகள் சிலவும் கந்த ரோடையில் இருந்தன. நீரிறைக்கும் யந்திரம் பாவனைக்கு வந்த பின்னர் இவை படிப்படியாகக் கைவிடப்பட்டுவிட்டன.

கிணறுகள் இல்லாத, அல்லது நீர்ப்பாசனம் செய்ய முடியாத வயல் நிலங்களிற் கோடை காலத்தில் சணல், பயறு, உழுந்து, எள் போன்றவை தற்காலத்திலும் புழுதி விதைப்பாக விதைக்கப்படுகின்றன.

கந்தரோடை மக்களிற் பெரும்பாலோர் விவசாயிகளாக இருப்பதால் அவர்களிற் பலர் மாடு, ஆடு போன்ற கால்நடை விலங்குகளையும் வளர்ப்பது வழக்கமாக உள்ளது. அவற் றின் எரு வயலுக்குப் பசளையாகப் பயன்படுவதுடன், அவற் றின் பாலும் பாற்பொருட்களான மோர், தயிர், வெண்ணெய், நெய் முதலியன மக்களின் உணவாக அமைகின்றன. வயலி லிருந்து பெறப்படும் புற்கள், ஒட்டு, வைக்கோல் முதலியன கால்நடைகளின் உணவாகின்றன.

# ०९. கல்விச் செல்வம்

காஞ்சிமாநகரைப் பற்றிக் கூறும்போது, "கல்வியிற் கரையிலாக் காஞ்சி" என்று கூறுவார்கள். அது போன்று இலங்கையின் வடபுலத்திற் கல்வியில் இணையற்றதாக இருபதாம் நூற்றாண்டில் கந்தரோடை விளங்கியுள்ளது. அதற்குக் காரணம் இங்கு அமைந்துள்ள இரு பிரபல்யமான பாடசாலைகளாகும். கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி என்பனவே அவையாகும். இவற்றைக் கந்தரோடையின் இரண்டு கண்கள் என்பர்.

இப்பாடசாலைகள் காரணமாக இலங்கையின் பல பாகங்களிலுமிருந்தும் கற்பதற்காக மாணவர்களும், கற்பிப்பதற்காக ஆசிரியர்களும் பெருமளவில் கந்தரோடையை நோக்கி வந்தார்கள். இங்கு கற்றவர்கள் எட்டுத்திக்கும் சென்று சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்கள் : வாழ்கிறார்கள்.

## 1. யாழ்./ கந்தரோடை, தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

இப்பாடசாலை இம்மண்ணின் மைந்தர்களுக்கு மட்டுமன்றி, அயற்கிராமத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் ஆரம்பக் கல்வியை அளித்து, இவ்வூர்களில் அடிப்படைக் கல்வியறிவு இல்லாதவர்கள் இல்லை என்ற நிலையை ஏற்படுத்திய பெருமைக்குரியது. வெளிமாவட்டங்களில் இருந்துகூட மாணவர்கள் இங்கு வந்து தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றுள்ளனர்.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட வரலாறு பற்றி அமரர் அ.தற்பரானந்தன் அவர்கள் பின்வருமாறு எடுத்துக் கூறியுள்ளார் (2004).

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்க மிசனரிகள் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் பாடசாலைகளை நிறுவி அதன் மூலம் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப முற்பட்டனர். கந்தரோடையிலும் அவர்களது பார்வை விழுந்தது. அங்ஙனம் கல்வி என்ற போர்வையில் சைவர்களைக் கிறிஸ்தவர்களாக மதம் மாற்றும் முயற்சியில் மிசனரிகள் ஈடுபடுவதை எதிர்த்து முறியடிக்க வேண்டும் என்று கந்தரோடையில் வாழ்ந்த இருபத்து நான்கு வயது நிரம்பிய இளைஞர்களான அம்பலவாணர் கந்தையா (பிரதான வீதிக்கு வடக்கில் இவர் வீடு இருந்தமையால் இவர் வடக்கர் கந்தையா என்றும், தமிழ்ப் பாடசாலையை நிறுவியதால் தமிழ்க் கந்தையா என்றும் அழைக்கப்பட்டவர்), சின்னத்தம்பி கந்தையா (பிரதான வீதிக்குத் தெற்கில் இவர் வீடு இருந்தமையால் இவர் தெற்கர் கந்தையா என்றும், ஆங்கிலப்பாடசாலையை நிறுவியதால் இங்கிலீஸ் கந்தையா என்றும் அழைக்கப்பட்டவர்) ஆகியோர் முடிவு செய்தனர். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் உறவினர்கள் - மைத்துனர் முறையினர்.

அம்பலவாணர் கந்தையா அவர்கள் நந்தன வருடம் தைப்பூச நன்னாளில் அதாவது, 1893 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதியன்று தனது சொந்தக் காணியில் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். அப்பாடசாலையின் பெயர் யாழ். / கந்தரோடை சைவத்தமிழ் வித்தியாசாலை என்பதாகும். கந்தரோடை மக்கள் சைவச்சூழலில் கல்வி கற்க வேண்டும்: தமிழர் பண்பாட்டுடன் சைவாசாரம், விஞ்ஞானம்,

கணிதம், தொழிற்கல்வி என்பவற்றையும் கற்க வேண்டும் என்ற உயரிய நோக்குடனே இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

"யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற மகுட வாசகத்தைக் கொண்ட இப் பாடசாலை பின்னர் யாழ். / கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியா சாலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

பாடசாலை ஆரம்பித்த காலந்தொட்டே "அனைவருக்கும் கல்வி" என்ற உயரிய கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. ஏழை, பணக்காரன், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதமின்றி மாணவர்கள் இங்கு கல்வி கற்க அனுமதிக்கப்பட்டனர்.

வசதி குறைந்த மாணவர்களுக்குப் புத்தாண்டு, தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களில் நிறுவுனரால் புத்தாடைகள் வழங்கப்பட்டதுடன் தினந்தோறும் மதிய உணவும் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் மகாத்மா காந்தி அவர்கள் கிராமோதய திட்டத்துடனான கல்வியை அறிமுகப்படுத்தியபோது, அத்திட்டத்தால் கவரப்பட்ட நிறுவுனர் இப் பாடசாலையிலும் அவற்றை நடைமுறைப்படுத்தினார். சைவநெறி, தமிழ், இலக்கியம், நாட்டுச்சீவன பன்ன வேலை சாஸ்திரம், எண்கணிதம் ஆகிய பாடங்களுடன் தும்புத்தொழில், பேனா மை, வெண்கட்டி, சவர்க்காரம் ஆகியன உற்பத்தி செய்தல் போன்ற தொழில்முறைக் கல்வியும் மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டன.

தும்புத்தொழில் மூலம் முடிச்சுக்கயிறு, தேடா வளையம், சாதாரண கால்மிதி, சங்கிலிப் பின்னற் கால்மிதி, கயிற்றுப்பாய், போத்தல் கழுவும் தூரிகை

வகைகள், சைக்கிள் தூரிகை போன்றன உற்பத்தி செய்யப்பட்டன. சவர்க்காரத் தயாரிப்பில் சலவைச் சவர்காரம், குளியற் சவர்க்காரம் இரண்டும் உற்பத்தி செய்யப்பட்டன. அவை கந்தரோடை ஐக்கிய பண்டக சாலைச் சங்கம் மூலம் விற்பனையும் செய்யப்பட்டன.

1954 ஆம் ஆண்டு இப்பாடசாலை சிரேஷ்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. அதன் பய னாக 1956 ஆம் ஆண்டு முதன்முதலாக சிபா.த(சா.த) பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றினர்.அதில் மூதூர் அல்லைநகர் தோப்பூரைச் சேர்ந்த முஹமது முஸ்தபா காசீம் என்ற முஸ்லிம் மாணவர் உட்படப் பலர் சிறந்த பெறுபேறுகளுடன் சித்தியடைந்தனர். அதன் பிறகும் தொடர்ந்து நடைபெற்ற பரீட்சைகளில் இவ்வூரையும், வெளியூர்களையும் சேர்ந்த பல மாணவர்கள் சித்தி பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

1962 ஆம் ஆண்டு இப்பாடசாலை அரசுடமை யாக்கப்படும் வரை ஸ்தாபகரும், அவர் பரம்பரை யினரும் பரோபகார நோக்குடன் தமது சொத்துக்கள் பலவற்றை விற்று மாணவர் பலருக்குக் கல்வி என்னும் அருஞ்சொத்தை வழங்கி வந்துள்ளனர்.

1968 ஆம் ஆண்டில் நிர்வாகத்திலிருந்த சில ரின் தீர்க்க தரிசனமற்ற செய்கை காரணமாக இப் பாடசாலை கனிஷ்ட பாடசாலையாக எட்டாம் வகுப்பு வரை இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1971 ஆம் ஆண்டு அப்போதைய உதவிக்கல்வி மந்திரியாக இருந்த பி.வை.துடாவை அவர்களின் தலையீட்டினால் இப்பாடசாலை அரு காமையிலிருந்த கந்தரோடை, ஸ்கந்தவரோதயாக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டது. அக்காலத்தில் இங்கு ஆறாம் வகுப்புவரையே இருந்தது.

ஆயினும் இப்பாடசாலை தனது தனித்து வத்தை என்றுமே இழந்துவிடவில்லை.

1974ஆம் ஆண்டு முதல் இப்பாடசாலையைத் தனித்து இயங்கும்படி அரசாங்கம் உத்தரவிட்டது.

1986 ஆம் ஆண்டு இப்பாடசாலையில் மீண்டும் மேல்வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்வாண்டில் 7 ஆம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒவ்வொரு வகுப்பாக அதிகரித்து, 1990 ஆம் ஆண்டு க.பொ.த.(சா.த) வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டதுடன் மீண் டும் இப்பாடசாலை தரமுயர்ந்து, தலைநிமிர்ந்து நிற்கிறது.

1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இப்பாட சாலையின் நூற்றாண்டுவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

கந்தரோடை மக்களினதும், மற்றும் பல ஊர் களிலிருந்தும் இங்கு கல்வி பயில வந்த மாணவர் களினதும் கல்விக் கண்களைத் திறந்து, அறிவொளி யூட்டி, நூறாண்டுகளைக் கடந்து நிற்கும் இப்பாட சாலை தனது அரும் பணிகளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

(இப்பாடசாலையின் பாடசாலை கீதம் பின்னி ணைப்பில் தரப்பட்டுள்ளது)

## 2. யாழ். / கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி

இக்கல்லூரி யாழ்ப்பாண மாணவர்களுக்கு மட்டு மன்றி, இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களுக்குக் கல்வி புகட்டிய பெருமைக்குரியது. 20 ஆம் நூற்றாண்டில் சிறு கிராமமான கந்தரோடையை நோக்கி இலங்கை யின் பல பாகங்களிலுமுள்ள மாணவர்களைப் படை யெடுத்து வரச் செய்தது இக்கல்லூரி.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் ஸ்கந் தாவின் கல்வித்தரத்தைப் பற்றிப் பின்வருமாறு சான்று பகர்ந்துள்ளார்.

"பல்கலைக்கழகத்தில் ஸ்கந்தவரோதயக் கல் லூரி என்றால் எல்லோருக்கும் தெரியும். காரணம் அங்கு ஒவ்வோராண்டும் மருத்துவப் பகுதி, பொறி யியற் பகுதி, விஞ்ஞானப் பகுதி, கலைப்பகுதி என்று எல்லாப் பகுதிகளுக்கும் ஸ்கந்தவரோதய மாண வர்கள் வந்து கொண்டே இருக்கின்றார்கள். இது இக் கல்லூரிக்கு உரிய தனிப் பெருமை. அதாவது, ஆண்டுதோறும் பல்கலைக்கழகத்தின் எல்லாப் பகுதி களுக்கும் மாணவர்களை அனுப்ப இக்கல்லூரி தவறு வதில்லை. இது ஒரு பேருண்மையை விளக்குகிறது. அதாவது, இங்கு அளிக்கப்படும் கல்வி ஒரு துறைக் கல்வியன்று : பலதுறைக் கல்வி. இன்று இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பகுதி மாணவரில் 1/8 பகுதியினரும், கலைப்பகுதி மாணவர்களில் 1/20 பகுதியினரும், இக்கல்லூரி மணவரே. ஏன், இலங்கை அரசாங்கப் பரிபாலன சேவையில் ¼ பகுதியினர் இக்

கல்லூரி மாணவரே. இன்று ஈழத்தில் மேற்றரக் கல்லூரிகள் ஐந்தே இருக்கின்றன. அவற்றுள் ஒன்று என்ற பெருமைக்குரியது ஸ்கந்தவரோதயக் கல்லூரி."

சு.வித்தியானந்தன் அவர்களால் 1965 ஆம் ஆண்டு ஸ்தாபகர் நினைவுப் பேருரையின் போது சூட்டப்பட்ட புகழாரமே இதுவாகும். (ஸ்கந்தா 1969 : 31)

இக்கல்லூரியானது யாழ். / கந்தரோடை, சைவ ஆங்கிலப்பாடசாலை என்னும் பெயரில் 1894 ஆம் ஆண்டு சின்னத்தம்பி கந்தையா (தெற்கர் கந்தையா) உபாத்தியாயர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. சைவச்சூழலில் மாணவர்கள் ஆங்கிலக் கல்வியைக் கற்க வேண்டும் என்ற உயரிய நோக்கமே இப் பாடசாலை ஆரம்பிக்கப்படுவதற்கு ஏதுவாக இருந்தது. ஸ்தாபகரின் இலட்சியத்திற்கு உறுதுணையாக, உதவியாகக் கந்தரோடையைச் சேர்ந்த சீனி உபாத்தியாயர் என்றழைக்கப்பட்ட சீனிவாசகம், செல்லப்பா உபாத்தியாயர் ஆகிய இருவரும் செயற்பட்டனர்.

(தற்போது ஸ்கந்தவரோதயக் கல்லூரி அமைந்துள்ள இடத்தில் ஆரம்பத்தில் வே. முத்துவேற்பிள்ளை என்பவரால் ஒரு பாடசாலை ஆரம்பித்து நடத்தப்பட்டதாகவும், அப்பாடசாலையை அவரால் தொடர்ந்து நடாத்த முடியாது கைவிட்ட நிலையில் இவ்விடத்தில் சின்னத்தம்பி கந்தையா அவர்களால் 1894 ஆம் ஆண்டு ஆங்கிலப் பாடசாலையாக இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது என்றும் சிலர் கூறுவர்) (ஸ்கந்தா 2004)

1902ஆம் ஆண்டில் இவ்வித்தியாசாலை அரசினர் அங்கீகாரத்தைப் பெற்று உதவி நன்கொடைப் பணம் பெறும் வித்தியாசாலைகளின் வரிசையில் வைக்கப்பட்டது.

"உண்மையே உயர் அறம்" என்ற மகுட வாசகத்தைக் கொண்ட இப்பாடசாலை நாளடைவில் யாழ். / கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆரம்பத்திலிருந்தே ஆண், பெண் இருபாலாரும் இங்கு கல்வி பயில அனுமதிக்கப்பட்டதுடன், சிறுபான்மையினரும் எவ்வித பேதமுமின்றி இங்கு அனுமதிக்கப்பட்டனர்.

இப்பாடசாலை மிகத்துரிதமாக வளர்ச்சியடைந்து 1950 ஆம் ஆண்டுகளில் சுமார் பத்து ஏக்கர் நிலப்பரப்பில் பல கட்டடங்களைக் கொண்டதாகவும், 2000 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டதாகவும் விளங்கியது. விஞ்ஞான ஆய்வுகூடங்கள், நூலகம், விஸ்திரணமான விளையாட்டு மைதானம் என்பனவும் அமைக்கப்பட்டன. வெளியிடங்களிலிருந்து மாணவர்கள் வருகை அதிகரித்தமையால் அவர்கள் தங்கிப் படிப்பதற்கென மாணவர் விடுதியும், உணவுச் சாலையும் அமைக்கப்பட்டன. இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து மட்டுமன்றி, இந்தியாவிலிருந்தும் சிறந்த ஆசிரியர்கள் இங்கு கல்வி போதிக்க விருப்புடன் வந்தனர். 1960 களில் இடப்பற்றாக்குறை காரணமாக இப்பாடசாலை இருவேளைகளாக நடாத்தப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இக்கல்லூரியில் இந்தியாவிலிருந்தும் திறமை வாய்ந்த ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் அழைத்துவரப்பட்டுச் சிறந்த கல்வியை வழங்கியுள்ளனர். அவர்களுள் கே.கெங்காதரமேனன், டானியல், மத்தியூஸ், சுந்தரராஜன், ராமமூர்த்தி, கே.ஸ்ரீநிவாசன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

இக்கல்லூரியின் பெருமையை மேலும் பெருமைப்படுத்த இக்கல்லூரிக்கு மகான்களும், அறிஞர்களும் வருகை புரிந்தனர். மகாத்மாகாந்தி, குன்றக்குடி அடிகளார் போன்ற பெரியோரின் வருகையால் கந்தரோடை மண்ணும் பெருமை பெற்றது.

இக்கல்லூரியில் புகழ்பூத்த பல அதிபர்கள், ஆசிரியர்கள் கடமையாற்றியுள்ளனர். இங்கு கல்வி பயின்ற மாணவர்கள் அரசாங்கத்துறையிலும், தனியார் துறைகளிலும், வெளிநாடுகளிலும் பல உயர் பதவிகளில் பணிபுரிந்துள்ளனர், பணிபுரிந்து வருகிறார்கள். 20 ஆம் நூற்றாண்டைக் கந்தரோடையின் கல்விச் சிறப்பின் பொற்காலம் என்று வர்ணிப்பதில் தவறேதும் இல்லை. இந்நூற்றாண்டில் ஸ்கந்தாவின் வரலாற்றுடன் கந்தரோடையின் வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளது.

(இப்பாடசாலையின் கல்லூரி கீதம் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.)

# ௰. கந்தரோடையில் மகாத்மா காந்தி

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியானது மகான்களையும், பெரியோர்களையும் அழைத்து, கௌர வித்ததன் மூலம் தனக்குப் பெருமையைத் தேடிக்கொண்ட துடன், கந்தரோடைக்கும் பெருமையைத் தேடிக்கொடுத்தது. அந்த வகையில் இந்திய சுதந்திரத்தின் தந்தை, அண்ணல் காந்தி மகானின் ஸ்கந்தா விஜயம் ஸ்கந்தா வரலாற்றிலும், கந்தரோடை வரலாற்றிலும் பொன்னெழுத்துக்களால் பொறிக் கப்பட வேண்டிய ஒன்றாகும். இந்தியாவில் ஏழை மக்களின் நல்வாழ்வின் பொருட்டு மகாத்மாகாந்தி அவர்கள் ஆரம்பித் திருந்த கதர் இயக்கத்திற்கு ஸ்கந்தா நிறுவனர், ஆசிரி யர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து சேகரிக் கப்பட்ட காணிக்கையை ஸ்கந்தா கல்லூரி நிர்வாகம் நேரடி யாகவே காந்தி மகானிடம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

மகாத்மா காந்தியடிகள் 27-11-1927 ஞாயிற்றுக் கிழமையன்று ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு விஜயம் செய்து இக் கல்லூரியில் நிகழ்த்திய சொற்பொழிவைச் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களின் மகன் அம்பல வாணபிள்ளை அவர்கள் தமிழாக்கம் செய்து ஸ்கந்தா மலரில் (1969 : 84) வெளியிட்டபடி இங்கு தரப்பட்டுள்ளது.

## தலைமை ஆசிரியர் அவர்களே!
## மாணவர்களே!

இன்று உங்கள் வித்தியாசாலைக்கு நான் சமுகஞ் செய்யுஞ்சந்தர்ப்பங் கிடைத்தமை பற்றி மிக மகிழ்ச்சியடை கின்றேன். மாணவர்களைச் சந்திப்பதென்றால் எப்போதும் எனக்கு அளவு கடந்த சந்தோஷம். கபடமற்ற இளைஞராகும் உங்களுடைய உள்ளங்களில் நல்வார்த்தைகள் நன்கு பதியுந் தன்மையன. உங்கள் தலைமையாசிரியரும், உதவி யாசிரியர்களும் இங்கே என் பக்கத்தில் நிற்கின்றார்கள். அவர்களுடன் உங்கள் வித்தியாசாலையின் தாபகரும் கூட நிற்கின்றார். இக் கல்விக் கழகம் உண்மையான கல்வியை உங்கட்கு அளிக்குமாயின் அதுவே பெரிய பேறாகும். கல்வி கற்பதோடு நில்லாது கற்றபடி ஒழுகவும் பழகிக்கொள்ள வேண்டும். மாணவரென்போர் தந்தை, தாயர், ஆசிரியர் என் போர்க்குக் கீழ்ப்படிந்து அவர்கள் நல்வார்த்தைகளைத் தேவ வாக்காகக் கொண்டு நடக்க வேண்டும்.

இளம்பருவத்தில் நாம் கற்றுப் பழகுவன ஒரு போதும் நம்மை விட்டு நீங்கா. தாய் தந்தையர், ஆசிரியர் நமக் களிக்கும் புத்திமதிகள், கட்டளைகள் சிறுவயதினராக இருக் கும்போது சில போது கசப்பாக இருக்கும். அவைகளை ஏற்காமலும் விடலாம். ஆனால் வாழ்க்கையில் மிக்க அனுப வம் படைத்த அவர்களுடைய வாக்குகள், உபதேசங்கள் எவ்வளவு உண்மையானவை என்பது வயது முதிர்ந்த பின் தான் தெரிய வரும். எல்லாவற்றிற்கும் முதலாவதாக நீங்கள் கடவுள் பக்தியுடையவர்களாக வாழ முயல வேண்டும். அப் போதுதான் உங்கள் மாட்டு நல்லொழுக்கம் பெரிய ஆபரண மாகக் கிடைக்கும். சத்தியத்தை ஓம்பிக் கடைப்பிடிக்க வல்லவராக வேண்டும். சத்தியத்தை மேற்கொள்பவர்களை எவ்வித தீங்குகளும், தீமைகளும் வந்தணுக மாட்டா.

கல்வி கற்பதோடு நில்லாது சமுதாயத்தின் முன் னேற்றத்தை நாடித் தொண்டுகள் செய்யவும் இளம் பருவத் திலேயே பழகிக்கொள்ள வேண்டும்.

இப்போது நான் இலங்கைக்கு வந்தது கதர் இயக் கத்துக்குப் பணம் சேர்ப்பதற்காகவே. இந்தியாவில் கோடிக் கணக்கான ஏழை மக்கள் நேரத்துக்கு உண்ணப் போதிய உணவின்றியும், உடுக்கத் துணியின்றியும் வருந்துகிறார்கள் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. அவர்களுடைய வறுமையை ஒழிப்பதற்கே இந்தக் கதர் இயக்கத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். பஞ்சிலிருந்து நூல் நூற்றுக் கதர்ப் புடவைகள் நெசவு செய்வதால் அவ்வேழை மக்களின் பொருளாதாரம் உயர்வடையுமென்பது எனது பூரணமான நம்பிக்கை. நீங்கள் இன்று அளிக்குங் காணிக்கை இப்புனிதமான தொண்டுக்கே செலவு செய்யப்படும். எல்லா மக்களும் கையினால் நெசவு செய்யப்பட்ட கதராடை களையே அணிவதென்று உறுதி செய்து கொள்வாராயின், இப்பொருளாதார இயக்கம் நாட்டிற்கும் மக்கட்கும் பெரு நன்மையை வருவிக்குமென்பதில் ஐயமில்லை.

மாணவர்களாகிய நீங்கள் இந்தப் பெரிய தொண் டுக்குப் பணவுதவி செய்ததுடன் திருப்தியடையாது கதர்ப் புடவைகளையே உபயோகிக்க உடன்பட வேண்டும். அப் போதுதான் கதர் இயக்கம் வளர்ச்சியடைந்து ஏழை மக்களின் வாழ்வு சிறக்கும். நீங்கள் மாத்திரமல்ல உங்கள் வீடுகளில் வசிக்கும் பெண்மணிகளும் கருணையுடன் கதராடைகளை உபயோகிக்க முன்வர வேண்டும்.

மேலும் நான் கூறுவது என்னவென்றால் நல்லொ ழுக்கமும், கடவுள் பக்தியும், கீழ்ப்படிவுமே உங்களை மேல் நிலைக்குக் கொண்டுவரவல்லன. உயரிய நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் வித்தியாசாலை வளர்ச்சியடைந்து, நாளடைவில் நாட்டுக்குப் பெரு நன்மையைப் பயக்க வேண்டு மென்று நான் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

நீங்கள் மனமுவந்து இந்தியாவிலுள்ள ஏழை மக்களின் பொருட்டு அன்புடன் அளித்த காணிக்கைக்கு மறுபடியும் எனது தாழ்மையான நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**குறிப்பு :** காந்தி மகானின் விஜயத்தை என்றும் நினைவு கூறுமுகமாக ஸ்கந்தாவின் பிரதம மண்டபம் ஒன்றிற்குக் காந்தி மண்டபம் என்று பெயர் சூட்ட ஸ்கந்தா நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இந்நூலாசிரியரின் தாழ்மையான வேண்டுகோளாகும்.

## 11. ஆலயங்கள்

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்கு. கந்தரோடையில் புத்தவிகாரைகள் இருந்ததாகச் சில வரலாற்றாய்வாளர்கள் கூறினாலும் கூட, கடந்த பல நூற்றாண்டுகளுக்கு மேலாகக் கந்தரோடை சைவ சமயம் செழித்து வளரும் பிரதேசமாகவே விளங்கி வந்துள்ளது. மிக அண்மையில் அரசாங்கம் கயக்கேணியில் புத்த விகாரை ஒன்றை அமைத்தது தவிரக் கந்தரோடையிலும் அதன் எல்லைப்புறங்களிலும் சைவத்திருக்கோவில்களே அமைந்துள்ளன. கடந்த காலங்களில் கிறிஸ்தவ மிஷனரிகள் கூட மக்களை மதமாற்றம் செய்யும் முயற்சியிலும், கிறிஷ்தவ ஆலயங்களை அமைக்கும் விடயத்திலும் கந்தரோடையில் தோல்வியையே தழுவினர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு வாழ்ந்த மக்களின் சைவசமயப் பற்றே அதற்கு முக்கிய காரணமாகும்.

கந்தரோடையில் ஆரம்பிக்கப்பட்ட இரு பாடசாலைகளும் மிஷனரிகளின் முயற்சியை முறியடிக்கும் நோக்குடனே அமைக்கப்பட்டன என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அதன் பெயருக்கேற்ப அண்மையில் முருகன் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கந்தரோடை வரலாற்றுடன் தொடர்புடையனவாக மாசியப்பிட்டி அங்கணம்மைக்கடவை ஸ்ரீ மீனாக்ஷி அம்பாள் ஆலயம், கண்ணகை அம்மன் ஆலயம் என்பன அமைந்



ஸ்ரீ அருளானந்தப் பிள்ளையார் கோவில்



அங்கணம்மைக்கடவை ஸ்ரீ மீனாக்ஷி அம்பாள் ஆலயம் (புராதன ஆல மரமும்)



அங்கணம்மைக்கடவை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம்



ஸ்ரீ மீனாக்ஷி அம்பாள் ஆலய தெப்பக்குளம் - கால் நடைகள் இறங்கும் படிக்கட்டு (இருபுறமும் ஆவுரோஞ்சிக்கற்கள் இருப்பதைக் காண்க)



ஸ்ரீ மீனாக்ஷி அம்பாள் ஆலய தெப்பக்குளம் - படிக்கட்டும் சிதைவடைந்த நிலையில் நடுமண்டபமும்

துள்ளன. இவை கந்தரோடையின் மேற்குப்புற எல்லையை அடுத்துள்ளன.

அருளானந்தப் பிள்ளையார் கோவில், வற்றாக்கை அம்மன் கோவில், ஒட்டங்கட்டு பைரவர் கோவில், தம்மளை பைரவர் கோவில், காளிகோவில், நாகதம்பிரான் கோவில், கந்தரோடை மேற்குக் கலட்டி பைரவர் கோவில் என்பன கந்தரோடையிலுள்ள குறிப்பிடத்தக்க ஆலயங்களாகும்.

இவற்றை விட பெரும்பாலோரின் காணி அல்லது நிலங்களில் சூலம் அல்லது 'கல்' ஒன்றை வைத்து பைரவ ராகவும், அம்பாளாகவும் வழிபடும் வழக்கமும் காணப்படு கின்றது. இப்படியான குட்டிக்கோவில்களுக்குக் கணக்கே யில்லை.

மேலும், கந்தரோடையின் தெற்கு எல்லைப்பகுதிகளில் உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில், கற்பொக்குணைப் பிள்ளையார் கோவில், சிதைவடைந்த நிலையில் ஒரு முருகன் ஆலயம் (தற்போது புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது) என்பனவும், கிழக்குத்திசையில் கணக்கர் வளவுக்கு அருகில் ஆலடிப்பிள்ளையார் எனவழங்கும் வீரகத்திப் பிள்ளையார் கோவிலும் அமைந்துள்ளன.

# 1. மாசியப்பிட்டி அங்கணம்மைக் கடவை ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்

கந்தரோடைக்கு மேற்குத்திசையில், கந்தரோடைக் குளத்திற்கும் மேற்குப்புறமாகக் கந்தரோடையை நோக்கி இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் அமைந்துள்ள குறிச்சிக்கு அங்கணம்மைக் கடவை என்றும், ஆலயம் அமைந் துள்ள இடத்துக்குப் பரமாக்கை என்றும் பெயர்.

அங்கணம் என்பதற்கு நீர்த்தாரை என்று பொருளுள் ளதை ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளோம். மேலும், அங் கணம் என்பதற்குக் கடுக்காய் என்றும் பொருளுண்டு. எனவே அதுபற்றியும் இப்பெயர் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. (இலுப் பைக்கடவை, மருதங்கடவை போன்ற மரப்பெயர்களில் அமைந்த இடப்பெயர்கள் முறையே மன்னார், அனுராதபுர மாவட்டங்களில் இருத்தல் காண்க) இவ்வாலயம் குளக்கோட்டு மன்னன், கயபாகு மன்னன் காலத்துடன் தொடர்புடையது என்று கூறப்படுகிறது. (இ.கி.நா.கு.கோ. பக். 73)

மீனாட்சி அம்மன் ஆலயத்தின் முக்கிய உரிமையா ளர்களாகக் கந்தரோடையைச் சேர்ந்த பிராமணர்கள் விளங்கி யுள்ளனர். அதுமட்டுமன்றி, இவ்வாலயத்தின் பூசைகள், திருவிழாக்களில் கந்தரோடை மக்களும் உபயகாரர்களாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாலயமும் அது அமைந் துள்ள இடமும் ஒரு காலத்தில் கந்தரோடையின் பகுதிகளாக இருந்திருக்க வேண்டும்.

இவ்வாலயம் பற்றிய குறிப்புகளிற் பல ஏற்கெனவே கயற்கண்ணி என்ற பகுதியில் எடுத்துக் கூறியுள்ளோம்.

மீனாட்சி அம்மன் ஆலயமானது ஆதியில் மிகப் பெரிய ஆலயமாகக் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். போர்த்துக்கேயர் காலத்தில் அது இடித்தழிக்கப்பட்டிருக்க வேண்டும். எஞ்சி யவை ஒல்லாந்தர் காலத்தில் அடியோடழிக்கப்பட்டிருத்தல்

வேண்டும். ஒல்லாந்தர் காலத்தில் இவ்வாலயத்திற்குச் சொந்தமான பூவலில் இருந்த கற்சிலையொன்று யானையைக் கொண்டு இடறப்பட்டதாகக் கூறப்படும் செய்தி இதனை உறுதிப்படுத்துகிறது. ( இராசநாயகம் 2003 : 17 )

இவ்வாலயத்தின் புராதன விக்கிரகங்கள் இப்பூவலி னுள் வெகு ஆழத்தில் புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படு கிறது.

அழிக்கப்பட்ட இவ்வாலயமானது மீண்டும் 1700 ஆம் ஆண்டளவில் கோபாலையர் சுப்பையர் என்பவரால் மீளக் கட்டப்பட்டது. அவரைத் தொடர்ந்து அவர் சந்ததியினரே 1984 ஆம் ஆண்டுவரை இக்கோவிலைப் பரிபாலித்து வந்துள்ளனர். அவர்களிற் பெரும்பாலோர் கந்தரோடையைப் பாரம்பரிய வசிப்பிடமாகவும் பிறப்பிடமாகவும் கொண்ட அந்தணர்களாவர்.

இவ்வாலயத்தில் வருடாந்த மகோற்சவம் ஆடி அமா வாசை கழிந்த ஆறாம்நாள் ஆரம்பமாகி, 11 நாட்கள் நடை பெறுகின்றது.

கந்தசஷ்டி, நவராத்திரி, திருவெம்பாவை, தைப்பூசம், ஆடிப்பூரம் என்பனவும் இவ்வாலயத்தில் சிறப்பாகக் கொண் டாடப்படுகின்றன.

**இவ்வாலயத்தில் நிகழ்ந்த அற்புதங்கள் பலவாகும் அவற்றுட் சில வருமாறு:**

ஒரு தடவை இவ்வாலயத் திருப்பணிகள் நடை பெற்றுக்கொண்டிருந்த போது அங்கு வேலை செய்து கொண் டிருந்த வேலையாட்களுக்குக் கூலி கொடுப்பதற்குக் கோவில் உரிமையாளரான அந்தணரிடம் பணமில்லாதிருந்ததாம். மானஸ்தரான அந்தணர் கூலி கொடுக்கப் பணமின்றி உயிர்

வாழ விரும்பாது ஆலயத்தின் அருகிலிருந்த பாம்புப் புற்றி னுள் தலையை நுழைத்துக் கொண்டாராம். அவ்வமயம் அம்பாளே ஓர் அடியார் போல வந்து அந்தணரின் பண முடையை நீக்கி, அவரின் உயிரையும் காப்பாற்றினாளாம்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் அப்பாவையர் என்ற ழைக்கப்பட்ட கார்த்திகேச ஐயர் என்பவர் கோவில் நிர்வாகப் பொறுப்பில் இருந்தபோது அவருக்கும் ஆலயத்திற்கும் எதி ராக ஒருவர் பொய்வழக்கொன்றை நீதிமன்றத்தில் தொடர்ந் திருந்தனர் என்றும், அவ்வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது மேற்படி பிராமணர் ஆலயத்திலிருந்த அம்பாள் விக்கிரகத்தை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றார் என்றும் விசாரணையின்போது நீதிமன்றமே நடுங்கியதாகவும் அதன் மூலம் அம்பாள் உணர்த்திய உண்மையை உணர்ந்து கொண்ட நீதிபதி அந்தணருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங் கினார் என்றும் வெகுகாலமாகப் பேசப்பட்டு வந்தது.

(இவ்வாலயத் திருவூஞ்சல் பின்னிணைப்பில் தரப்பட் டுள்ளது.)

## 2. அங்கணம்மைக்கடவை கண்ணகி அம்மன் ஆலயம்

இலங்கையின் வடபகுதியில் கண்ணகி வழிபாடு பண் டைக்காலந்தொட்டு இடம்பெற்று வந்துள்ளது. வடமாகாணத் திலுள்ள முக்கியமான கண்ணகி கோவில்களைப் பின்வரும் பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

“அங்கொணா மைக் கடவை செட்டிபுர மச்செழு
ஆனதோர் வற்றாப்பளை மீதுறைந்தாய்பொங்கு புகழ்
கொம்படி பொறிகடவை சங்குவயல்
புகழ் பெருகு கோலங்கிராய் மீதுறைந்தாய்

எங்குமே உன் புகழை மங்காமல் ஓதற்கு
எந்தன் சிந்தை தனிலுறைந்த காரணியே
பாரினிற் துயரங்கள் அகல அருள் புரிவாய்
தயவு செறி கொல்லங் கிராயில் மாதாவே"

அங்கணம்மைக் கடவையில் அமைந்துள்ள கண்ணகி ஆலயமானது மீனாட்சி அம்மன் ஆலயத்துக்கு வடக்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. இலங்கையில் முதன்முதலாகக் கண்ணகி வழிபாட்டிற்கு என அமைக்கப்பட்ட ஆலயம் இது வாகும். நீண்டகாலமாகச் சிலம்பே மூலஸ்தானத்தில் வைக் கப்பட்டிருந்தது. 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதற்குப் பதிலாக விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இவ்வாலயம் பற்றி யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் யாவற்றிலும் ஏறத்தாள ஒரேவிதமாகவே கூறப்பட்டுள்ளன. செ.இராசநாயகம் அவர்கள் தமது யாழ்ப்பாணச் சரித்திரம் நூலில் பின்வருமாறு எடுத்துக் கூறியுள்ளார்:

"சேரன் செங்குட்டுவன் தன் தலைநகராகிய வஞ்சியில் கண்ணகிக்குக் கோவிலமைத்து விழாச் செய்த காலத்திலே, இலங்கை அரசனான கயவாகு மன்னனையும் அழைத்திருந் தான். (இவனே முதலாவது கயவாகு மன்னன் இவன் காலம் கி.பி.174 - 196) ஆங்கு சென்ற கயவாகு கண்ணகித் தெய்வத் தின் அற்புதங்களைக் கண்டு, இலங்கைக்கு வந்தவுடன், அக் கண்ணகித் தெய்வ வணக்கத்தை உண்டாக்கிப் பெருவிழா எடுத்தான். அவன் கண்ணகிக்கு யாழ்ப்பாணத்தில் முதலாவ தாகக் கோவிலமைத்த இடம் அங்கணாக் கடவை எனப்படும். அங்கணாக்கடவைப் பூவலினருகே பன்னெடுங்காலமாக நின்ற தும், ஒல்லாந்தர் காலத்து யானையால் உடைக்கப்பட்டதும், டாக்டர் பவுல் பீரிஸ் அவர்களினால் சில நாட்களுக்கு முன் கண்டெடுக்கப்பட்ட பாதங்களையும், தலையையுமுடையது மான கற்சிலை அக் கயவாகு மன்னனின் சிலை என ஊகிக் கலாம்" ( 2003 : 17)

கயவாகு மன்னன் சிலையோ அன்றி வேறு சிலையாகவோ அது இருக்கலாம். ஆனால் பூவலினருகில் அச்சிலையானது பெறப்பட்ட தகவலும், ஒல்லாந்தர் காலத்தில் அது யானையால் உடைக்கப்பட்டது என்ற தகவலும் இவ்வாலயங்கள் முற்காலத்தில் சிற்ப சித்திர வேலைப்பாடுகளுடன் பேராலயங்களாக விளங்கியிருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாலயச் சூழல் நன்கு ஆராயப்பட வேண்டிய ஓரிடமாகும்.

**குறிப்பு :** கடவை(கடவு) என்பதற்கு மலையாளத்தில் கடற்கரை, ஆற்றங்கரை, துறைமுகம், ஆறு, குளத்துக்கு இறங்கும் படிக்கட்டு என்று பொருள் உள்ளதாக ச. குமாரசுவாமி கூறியுள்ளார் (1918 : 88)

“ஈழத்தில் கண்ணகி கோவில்கள் பெரும்பாலும் கடற்கரை ஓரங்களிலே அமைந்துள்ளதை நோக்குமிடத்து மலையாளக்கரையிலிருந்து இலங்கைக்குக் குடிபெயர்ந்த மக்கள் தாம் குடியேறிய இடங்களில் கண்ணகி வழிபாட்டுத் தலங்களை அமைத்துக் கொண்டனர் எனக் கொள்வதே பொருத்தமானதாகும்” என்று இ.பாலசுந்தரம் அவர்கள் கூறியுள்ளமையும் நோக்கற்குரியது ( 1986 : 11)

இந்த அடிப்படையில் கண்ணகி கோவில் அமைந்துள்ள அங்கணம்மைக்கடவையில் கடவை என்பது வழுக்கையாற்றங்கரையை அல்லது துறைமுகமாக விளங்கிய கந்தரோடைக் குளத்தை அல்லது அதற்கு அமைக்கப்பட்ட படிக்கட்டுகளைக் குறிப்பதாகக் கருதலும் தகும்.

கண்ணகி ஆலயமானது காலப்போக்கில் கண்ணகை அம்மன் ஆலயம் (கண்ணையம்மன் கோவில்) என்று அழைக்கப்பட்டு வருகிறது.

கோவலன் மரணத்துக்கு நீதி கேட்டு, மதுரையை எரித்து விட்டுச் சேரநாட்டுக்குச் சென்ற கண்ணகியின் சினத்தைத் தணிவித்து, கண்ணகியின் மனத்தைக் குளிரச் செய்யும் நோக்குடன் சேர நாட்டு மக்கள் குளிர்த்தீ ( குளிர் + தீ) எனப்படும் பொங்கல் விழாவை எடுத்துச் சிறப்பித்தனர் என்றும் அதனால் கண்ணகி சாந்தமடைந்து அவர்களுக்கு அருள்புரிந்ததாகவும் கூறப்படுகிறது.

அவ்விதம் குளிர்த்தீ வைக்கும் வழக்கம் பங்குனி மாதத் திங்கட் கிழமைகளில் வருடாவருடம் கொண்டாடப்பட்டு வருகிறது.

கண்ணகி கதைப்படிப்பு இங்கு சிறப்பாக நடைபெறுகிறது. (இ.தி.நா.இ.கோ. பக்.80)

மேலும் இவ்வாலயத்தில் வைகாசி விசாகத்தன்று நடைபெறும் பொங்கல் விழா மிகச்சிறப்புடையது.

இக்காலங்களில் கண்ணகி கதையைப் பூசாரி உடுக்கடித்துப் பாடுவதும் வழக்கமாக இருந்து வந்துள்ளது. அங்கணம்மைக்கடவை கண்ணகி அம்மன் காவியம் என்றொரு நூல் இருந்ததாகவும் அதில் கண்ணகி அம்மன் வரலாறு கூறப்பட்டுள்ளதாகவும் அறியக்கிடக்கிறது. (பாலசுந்தரம் 1986 : 10)

## 3. அருளானந்தப் பிள்ளையார் கோவில்

கந்தரோடைக் கிராமத்தின் மத்தியில், கயக்கேணிக்கு வடதிசையில் அமைந்துள்ளது இக்கோவில். இரண்டரை அடி உயரமான ஐம்பொன் எழுந்தருளி விநாகர் இவ்வாலயத்தின் சிறப்பு. வைகாசி மாதத்தில் வைகாசிப் பௌர்ணமியை இறுதியாகக் கொண்டு 18 நாட்கள் மகோற்சவம் நடைபெற்று வருகிறது. பிள்ளையார் கதை, நவராத்திரி, திருவெம்பாவை, ஆவணிச்சதுர்த்தி முதலான விழாக்கள் இங்கு சிறப்பாக நடைபெறுகின்றன. இவ்வாலயம் முற்காலத்தில் கந்தர்

கோவில் என்றும் அழைக்கப்பட்டு வந்தது (தகவல் - சிற்பி). எனவே, கந்த வழிபாடு இங்கு (கந்தரோடையில்) முனைப்புப் பெற்றிருந்தது தெளிவு.

தென்கோவைக் கந்தையா பண்டிதர் அவர்கள் இவ் வாலயத்துக்கெனத் திருவூஞ்சல் ஒன்றை இயற்றியுள்ளார். அது இந்நூலில் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது. தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்த வித்துவான் இ.திருநாவுக்கரசு அவர்கள் அருளானந்தப் பிள்ளையார் பேரில் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். அதில் வருகைப் பருவம் கந்தரோடைக் குறிச்சிகளின் பெயர்களை யும் சுட்டுவதாக அமைந்துள்ளது.

வற்றாக்கை யர்வாழ் மடத்தடி விளாங்கனி
வளரிக்கி ராணை யுண்ண
வளர்சங்கா வத்தை செல் திசை மாற்ற
உச்சாப் பனைமருங் கோடி மலிநீர்
முற்றா இயங்கம் புலந்தாண்டி மெய்ந்நூல்
முழுதுணர் கணக்கர் வளவின்
முடுகுநீர் வருட உறு தோப்பாம் பள்ளம் சேர்ந்து
மொழிபாடல் பிழை கண்டதும்
கற்றார்தம் அவையிலே கையிற் குடாரையால்
கழுத்தற்று மறுக வெட்டும்
கவிஒட்டன் கட்டுவளர் இனியா இலந்தைக்
கனிவேண்டி மைந்தர் மகளிர்
முற்றாரும் செந்நெல் நிறையும் கந்தரோடை நகர்
முன் பொருக்கன் புலமுறும்
முற்றிய பருத்தியோலைக் கின்னருளானந்த
மும்மதக் கரி வருகவே.

இதன் பொருள் : நோன்பினால் வற்றிய உடலை யுடைய அந்தணர் வாழும் கொடை மடம்படுதலின் வற்றாத கையுடைய வள்ளல்கள் எனச் சொல்லும் மக்கள் வாழும் மடத்தடியில், நீண்ட விளாங்கனியை விளாவையும் வேங்கை மரத்தையும், கரும்பின் காட்டையும் யானை முறித்துண்ண, அஞ்சிய சங்கு குறுக்கே பாய்தலின், பெரிய குளத்தில் ஓடி வரும் வத்தையின் செல்லுந்திசையை மாற்ற, அவ்வத்தை உயர்ந்த பனையோரம் சென்று, நீர் முடுக்கும் இயக்கம்புலம் கடந்து, கற்றுணர் கணக்காயர் வாழும் கணக்கர் வளவு தாண்டி, தோப்பாம் பள்ளம் புகுந்து, இரண்டொன்றாய் முடிந்து தலை இறங்கப் போட்டு, கோடாரியால் வெட்டும் ஒட்டக் கூத்தன் கட்டு நீர்வயல் மருங்கோடி, இன்பம் வேண்டிய மைந்தரும், மகளிரும் இனிக்கின்ற இலந்தைக் கனிக்காக வந்து சூழும் வளம் படைத்ததும் பருத்திவேலியை உடைய தும், கந்தரோடையில் உயர்ந்ததுமாகிய பொருக்கன் புலத் திற் சென்று தங்கும் வளம் மிக்க நகரில் உறையும் அருளா னந்த விநாயகப் பெருமானே வருக. என்பதாம்.

## 4. வட்டாக்கை / வற்றாக்கை அம்பாள் ஆலயம்

இவ்வாலயமானது உடுவிற் குளத்திலிருந்து வடக்கு நோக்கிவரும் வழுக்கையாற்றுக் கால்வாயானது டாக்டர் சுப்பிரமணியம் வீதியைச் சந்திக்கும் இடத்திற்கு அருகாமை யில் மேற்படி வீதிக்குத் தெற்குப்புறமாகவும், வாய்க்காலிற்கு மேற்குப்புறமாகவும் அமைந்துள்ளது.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஸ்தா பகரான அ.கந்தையா அவர்களின் தகப்பனாரான சி.அம்பல வாணர் என்பவரே இவ்விடத்தில் அம்மன் ஆலயத்தை அமைத் தார் என்று அ.தற்பரானந்தன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ( 2004 : 1) மேலும் இவ்வாலயத்தில் பூஜை செய்யும் அந்தணர் களின் முன்னோர்களினால் காசியிலிருந்து கொண்டு வரப் பட்ட சிவலிங்கமே இவ்வாலயத்தின் மூல விக்கிரமாக வுள்ளது.

இவ்வாலய வாசலில் பெரியதொரு ஆலமரம் விழுது விட்டுப் பரந்து வளர்ந்திருந்தது. இவ்வழியே உயர் மின்சாரத்தைக் கடத்தும் மின்கம்பிகள் செல்ல வேண்டியிருந்ததால் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் அவ்வாலமரத்தின் கிளைகள் வெட்டப்பட்டதால் அது பட்டுப்போய்விட்டது.


கந்தரோடையில் உள்ள பெரிய ஆலயம் இதுவாகும். இவ்வாலயம் அம்பாள் ஆலயம் என்று அழைக்கப்பட்டாலும் இங்கு மூலஸ்தானத்தில் சிவலிங்கமே உள்ளது. விஸ்வநாதர் என்பது இறைவன் பெயர்.அம்பாள் திருநாமம் விசாலாட்சி யாகும்.

நடேசர், தட்சணாமூர்த்தி, துர்க்கை, சூரிய, சந்திரர், பிள்ளையார், முருகன், சனீஸ்வரன், பைரவர் முதலியோருக்கும் சுற்றுக் கோவில்களுண்டு.

ஆனி மாதத்தில் ஆனி உத்திரத்தை இறுதியாகக் கொண்டு 10 நாட்கள் மகோற்சவம் நடைபெற்று வருகிறது. நவராத்திரி, வரலட்சுமி விரதம், திருவெம்பாவை, தைப்பூசம், பிள்ளையார் கதை என்பன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

சிறுவர்களின் பக்தியுணர்வை வளர்க்கும் நோக்குடன் வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரத்தில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறுவதும் வழக்கம்.

சிவன், அம்பாள் இருவருக்கும் திருவூஞ்சல்களுண்டு. அம்பாளின் திருவூஞ்சலை இயற்றியவர் சுன்னாகம் முருகேச பண்டிதராவார். சிவனின் திருவூஞ்சல் இணுவில் கி. வீரமணி ஐயர் அவர்களால் இயற்றப்பட்டுள்ளது. இவை பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.



வட்டாக்கை அம்மன் கோவில்



காளி கோவில்



ஒட்டங்கட்டு வைரவர் கோவில்



கலட்டி வைரவர் கோவில்



தம்பளை வைரவர் கோவில்



வட்டாக்கை கேணி

## 5. நாகதம்பிரான் கோவில்

கந்தரோடை வடக்கில் வயல்வெளியில் அமைந் துள்ள சிறு கோவிலாகும்.

## 6. ஓட்டங்கட்டு பைரவர் கோவில்

ஓட்டங்கட்டுக்குறிச்சியில் அமைந்துள்ள சிறு கோவில். கந்தரோடையைச் சேர்ந்த நா.சின்னத்துரையினால் கட்டு விக்கப்பட்டது.

## 7. காளிகோவில்

இக்கோவில் தமிழ்க் கந்தையா வித்தியாசாலைக்கு முன்பாக உள்ளது. இச்சுற்றாடலில் வாழும் தச்சுத் தொழி லாளரின் குலதெய்வமாக உள்ள இக்கோவில் தற்போது அழ காகக் கட்டப்பட்டுள்ளது.

## 8. தம்மளை பைரவர் கோவில்

தம்மளைக்குறிச்சியில் உள்ள சிறு ஆலயமாகும்

## 9. கலட்டி பைரவர் கோவில்

தம்மளை பைரவர் கோவிலுக்கு நேர் கிழக்கே அமைந் துள்ள சிறு ஆலயமாகும்.

ஆறுமுகநாவலரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி கந்த ரோடையிலுள்ள ஆலயங்களில் ஒரு காலத்தில் திருவிளை யாடற்புராணம், கந்தபுராணம், திருவாதவூரடிகள்புராணம், விநாயர்கதை (பெருங்கதை), சிவராத்திரிபுராணம் என்பன படித்துப் பயன் சொல்லப்பட்ட வரலாறும் உள்ளது. தற்காலத் தில் பெருங்கதை படிக்கப்படுகிறது.

# 12. கந்தரோடையில் புதைபொருள் ஆய்வுகள்

கந்தரோடை என்று அழைக்கப்படும் எமது ஊரானது 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அதாவது, கிறிஸ்துவுக்கு முன் 500 ஆண்டு களுக்கும் மேலான வரலாற்றையுடையது என்று வரலாற்று ஆய்வாளர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

அண்மையில் 3000 ஆண்டுகள் பழமை வாய்ந்த கால் களையுடைய கருங்கல் அம்மி ஒன்று இங்கு கண்டுபிடிக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (வீரசேகரி 25.06.2013)

"யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தொல்லியல் தலங்களுள் மிகப்பழையது மட்டுமன்றி மிகப் பிரசித்தியுடைய இடம் கந்தரோடையாகும்" ( இந்திரபாலா 2006: 105)

"அது ஒரு பெருநகரமாக இருந்தது என்பதும் அது வியாபார மத்திய நிலையமென்ற வகையில் சர்வதேச பரிணா மத்தைக் கொண்டிருந்தது" (பத்மநாதன் 2011: 3)

அதுமட்டுமன்றி, பௌத்த சமயம் இங்கு பரவுவதற்கு முன்னர் - ஆரியர் பண்பாடு பரவுவதற்கு முன்னர் - இங்கு திராவிடர் பண்பாடு நிலவியதாகவும் கூறப்படுகிறது. உரோமா புரி, சீனா, சேர, சோழ, பாண்டிய, பல்லவ, சிங்கள அரசுகள் கந்தரோடையுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந் தமைக்கான சான்றுகளையும் தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். அவை பற்றிய பல கட்டுரைகள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் வெளிவந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் இதுவரை கிடைத்துள்ள சாசனங் களுள் காலத்தால் முந்தியவை நான்காகும். அவற்றுள்

மூன்று கந்தரோடையிற் கிடைத்தவையாகும். அவற்றுள், முதலாவது கி.மு. 2 ஆம் நூற்றாண்டு பிராகிருதமொழியில் - பிராமிலிபியில் மட்பாண்ட ஓடு ஒன்றில் பொறிக்கப்பட்ட சிறிய சாசனம்.

இரண்டாவது கி.பி. 3 - 4 ஆம் நூற்றாண்டுக்குரியது. ஆந்திரப் பிராமிய மொழியில் எழுதப்பட்டுள்ளது. வடமொழி - பெரிய சாசனம்.

மூன்றாவது கி.பி. 10 ஆம் நூற்றாண்டிற்குரியது. 4 ஆம் காசி யப்பன் காலத்துக்குரியது.

அத்தகைய புராதன வரலாற்றுப் பெருமைமிக்க ஒரு நகர் - தலைநகர் கைவிடப்பட்டமைக்கான காரணம் தெளி வாகத் தெரியவில்லை. ஒரு தலைநகர் கைவிடப்படுவதற்கு மூன்று காரணங்கள் பொதுவாகக் கூறப்படுவதுண்டு.
1) அந்நகர் எதிரிகளின் படையெடுப்பால் அழிக்கப்படுதல்.
2) இயற்கை அனர்த்தங்களால் அழிக்கப்படுதல்.
3) எதிரிகளின் அச்சுறுத்தலுக்குரிய இடத்தில் அமைந் திருத்தல்

இவற்றில் எது கந்தரோடை கைவிடப்பட்டமைக்குரிய காரணம் என்பது ஆய்வாளர்களால் கண்டறியப்பட வேண்டிய ஒன்றாகும். ஆயினும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்ற அந்நியர் ஆட்சிக்காலத்திலும், அவர்களுக்கு முற்பட்ட பல நூற்றாண்டுகளிலும் கந்தரோடை தனது முக்கியத்துவத்தை இழந்து, இருளில் மூழ்கிக் காணப்பட்டது என்பதே உண்மை யாகும். அக்காலத்தில் இவ்விடத்தில் வாழ்ந்த மக்கள் தமது ஊரின் பாரம்பரிய பெருமையைப் பற்றி எவ்வளவு தூரம் அறிந்திருந்தனர் : அங்குமிங்குமாகக் காணப்பட்ட வரலாற்றுச் சின்னங்கள் பற்றி என்ன தெரிந்து வைத்திருந்தனர் என்பவை வெளிச்சத்துக்கு வராமல் போய்விட்டது.

கந்தரோடை பற்றிய வரலாற்றுத் தகவல்கள் கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவ மாலையிலும் அதைப் பின்பற்றி இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் எழுதப்பட்ட யாழ்ப் பாணச் சரித்திரம் (ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை), யாழ்ப்பாண வைபவ விமர்சனம் (சுவாமி ஞானப்பிரகாசர்), யாழ்ப்பாணச் சரித்திரம் (இராச நாயகம்), யாழ்ப்பாண வைபவ கௌமுதி (கல்லடி வேலுப்பிள்ளை) ஆகிய நூல்களிலேயே ஆரம்பத்தில் இடம்பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

கந்தரோடையின் பழைமையையும், இங்கு தொல் பொருட்சின்னங்கள் காணப்பட்டதையும் தற்செயலாக அறிந்து கொண்ட போல்.இ.பீரிஸ் (P.E.Pieris) என்பவரே அதனை முதன்முதலாக வெளியுலகின் கவனத்திற்குக் கொண்டு வந்த வராவார். அவர் 1917 - 1919 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இங்கு ஆய்வுகளை நடத்தியுள்ளார்.

அதன் பிறகு 1966 ஆம் ஆண்டு கலாநிதி சாள்ஸ் கொடகும்புர (C.Godakumbura) என்பவர் தலைமையில் புதைபொருள் ஆய்வு நடைபெற்றது.

**1970 ஆம் ஆண்டு ( the University of Pennsylvania Museum Team, America) கலாநிதி விமலா பேக்லி (Vimala Begley) தலைமையில் ஆய்வு நடைபெற்றது. இவர்களின் ஆய்வின் பயனாக தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டு மக்களே கந்தரோடையின் ஆதிக்குடியிருப்புக்களை உரு வாக்கினார்கள் என்பது தெளிவாகியது (பத்மநாதன் 2011: 3)**

1980 களுக்குப் பிறகு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர்களினால் சில ஆய்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. அண்மையில் 2011 இலும் இங்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவை விமலா பேக்லியின் ஆய்வு முடிவுகளை மேலும் உறுதி செய்கின்றன (பத்ம நாதன் 2011: 22)

இவை தவிர சில தனிப்பட்டவர்களும் கந்தரோடை வரலாற்றை அறிந்து கொள்வதில் ஆர்வமுடையவர்களாக, கந்தரோடையில் கிடைக்கக் கூடிய தொல்லியற் சின்னங்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் தமிழ்க்கந்தையா வித்தியாசாலை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி என்பவற்றில் ஆசிரியராக இருந்த சி.பொன்னம்பலம் அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார். இவரே 1971 இல் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணத் தொல்லியற்கழகத்தின் முதலாவது தலைவராகவும் இருந்தார்.

கந்தரோடையில் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதி வரையில் பரவலாகத் தொல்லியற் சின்னங்கள் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக மழைக்காலத்தில் நீர் வழிந்தோடிய மேட்டு நிலங்களில் பாசிமணிகள், காசுகள், தகடுகள், மட்பாண்ட ஓடுகள் முதலியன சாதரண மக்கள் கைகளில் கிடைத்தன. அவற்றைச் சிறுவர்கள் பொறுக்கி விளையாடுவதும், பாசிமணிகளை மாலையாகக் கோர்த்து வைப்பதும் பின்னர் எறிந்து விடுவதும் உண்டு. அவற்றில் ஆர்வமுடைய சிலர் சிறிது பணத்தைக் கொடுத்து அவற்றை வாங்கிச் சென்றதும் உண்டு. அதன் காரணமாக மழைக்காலத்தில் இவற்றைப் பொறுக்குவதில் பாடசாலைச் சிறுவர்கள் ஆர்வம் காட்டியதும் குறிப்பிடத்தக்கது.

தொல்லியல் ஆய்வாளர்கள் இங்கு வாழ்ந்த மக்களுக்கு, இங்கு கிடைக்கக் கூடிய தொல்லியற் சின்னங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தால் சில வேளை இன்னும் பல தொல்லியற் சின்னங்களைப் பெற்றிக்கொள்ள வாய்ப்பேற்பட்டிருக்கலாம்.

கந்தரோடையில் பெருமளவில் பௌத்த சின்னங்கள் கிடைத்துள்ளதாகவும், இது ஒரு பௌத்த பூமியாக இருந்திருக்க வேண்டும் என்றுங் கூறுவாருமுளர். 14 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட "நம் பொத்த" என்ற சிங்கள நூலில் கதுறு கொட(கந்தரோடை) என்னும் இடத்தில் பௌத்த விகாரைகள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளதை

(இராசநாயகம் 2003 : 233,234) வைத்துக் கொண்டு சிலர் இவ் விடத்தில் முற்காலத்தில் சிங்களவர் இருந்ததாக நிரூபிக்க முற்படுகின்றனர்.

அதேவேளை வேறு சில ஆய்வாளர்கள் இங்கு பௌத்த விகாரைகள் இருந்ததை ஏற்றுக்கொள்ளும் அதே நேரம் அவர்கள் தமிழ்ப் பௌத்தர்களாக இருக்கவேண்டும் என்றுங் கூறுகின்றனர்.

இன்னும் சில ஆய்வாளர்கள் கந்தரோடையில் பௌத் தம் மட்டும் இருக்கவில்லை : சைவசமயமும் மிகவும் சிறப் பான நிலையில் பண்டைக்காலத்தில் இருந்துள்ளது என்று கூறுகின்றார்கள். கந்தரோடையில் தொல்லியல் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில் ஓரிடத்தில் நிலத்தை அகழ்ந்தபோது, அவ்விடத்தில் சிவலிங்கம் மற்றும் சைவ சமயச் சின்னங்கள் வெளிவந்ததாகவும், அவற்றை (அவை பற்றிய செய்தியை) சம்பந்தப்பட்டவர்கள் வெளியே வராமல் மறைத்து விட்டதாகவும் கூறுவாருமுளர். பௌத்தவழிபாடு மட்டும் இங்கு இருந்ததாகக் காட்டுவதே அவர்களின் நோக்க மாக இருந்தது என்பர்.

ஆயினும், தொடர்ந்து நடைபெற்ற புதைபொருளாய்வு களின் போது இங்கு கிடைத்த திரிசூலம், சிறிய வேல், ஆஞ்ச நேயர், விநாயகர் சிலை, களிமண்ணாலான அம்மன் சிலைகள் முதலியன இங்கு சைவம் நிலவியதற்குச் சான்று களாக உள்ளன. அதுமட்டுமன்றி வரலாற்றுப் புகழ்மிக்க அங்கணம்மைக்கடவை மீனாட்சி அம்மன் ஆலயம், கண் ணகை அம்மன் ஆலயம் என்பனவும் இங்கு சைவசமயம் நிலவிவருவதற்குச் சான்றாக உள்ளன.

கந்தரோடையில் நடைபெற்ற புதைபொருள் ஆய்வுகள் பற்றிய மேலோட்டமான சில தகவல்களையாவது சாதாரண மக்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்குடனேயே இச்சிறு அதிகாரம் எழுதப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

# 13. கந்தரோடை மன்னர்

கி.மு. 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே கந்தரோடை அரசியல் தலைநகரமாக விளங்கியுள்ளது. இங்கு நாகர், தமிழ்வேந்தர்கள் மற்றும் சிங்கள அரசர்கள் சிலரும் ஆட்சி செய்ததாகக் கருதப்படுகிறது. ஆயினும் இங்கு ஆட்சிபுரிந்த அரசர்களின் பெயர் விபரங்கள் அதிகளவில் கண்டறியப்படவில்லை.

"பெருங்கற்பண்பாடு பரவியதன் விளைவாகக் கந்த ரோடையில் நகரமயமாக்கம் ஏற்பட்டமை பற்றியும் அக்காலத் துப் பன்னாட்டு வாணிபம் பற்றியும் தொல்லியற் சான்றுகள் மூலமாக அறிகின்றோம். ஆனால் அக்காலத்து மன்னர்கள் வரலாற்றில் முகங்காட்டவில்லை. அவர்கள் நாணயங்களை வெளியிட்டிருந்த போதும் அவர்களின் பெயர்களை இதுவரை அடையாளங்காணமுடியவில்லை" என்று சி.பத்மநாதன் குறிப் பிட்டுள்ளார். (2011 : 13)

கந்தரோடையிலிருந்து ஆட்சி செய்த மன்னர்களில் உக்கிரசிங்கனின் பெயர் மட்டும் பெரும்பாலான யாழ்ப்பாண வரலாற்று நூல்களில் இடம் பெற்றுள்ளது. இவன் காலம் கி.பி. 8 ஆம் நூற்றாண்டென்பர் ( சிற்றம்பலம் 1993 : 216). இவ் வரசனுடன் தொடர்புபடுத்திச் சோழ இளவரசியான மாரு தப்புரவீகவல்லியின் கதையும் கூறப்பட்டுள்ளது. (சோழ இள வரசியின் பெயர் மாருதப்பிரவல்லி, மாருதப்பிரவாக வல்லி என்று நூலுக்கு நூல் சற்று திரிபுபடுத்திக் கூறப்படுகிறது. இந்நூலில் மாருதப்புரவீகவல்லி என்ற பெயரே பயன்படுத்தப்படுகிறது)

உக்கிரசிங்கனுக்குக் சிங்கமுகம்), மாருதப்புரவீக வல்லிக்குக் குதிரைமுகம் என்று வரலாற்றுப் பெயர்களைத் திரிபுபடுத்தி அல்லது மிகைப்படுத்தி வழங்கப்பட்ட கர்ணபரம் பரைக்கதைகளை வரலாற்றை எழுதியவர்களும் தமது நூல்களில் அப்படியே சேர்த்துக் கொண்டார்கள் போலத் தோன்றுகிறது.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து உலகின் பல்வேறு பாகங்களுடன் வாணிபத் தொடர்புகளை வளர்த்து வந்த மக்கள் நாகரீகத்தில் மேம்பட்டவர்களாக இருந் திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. எனவே, சிங்கமுகம், குதிரைமுகம் போன்ற பாமரத்தனமான கற்பனைகள் பொருத்த மற்ற ஒன்றாகும்.

அதுமட்டுமன்றிக் கந்தரோடையிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வழக்கிலுள்ள பல இடப்பெயர்கள் கூடப் பழந் தமிழ்ப் பெயர்களாக உள்ளன. எனவே, உக்கிரசிங்கன், மாரு தப்புரவீகவல்லி ஆகியோரின் பெயர்க் காரணங்கள் நன்கு ஆராயப்பட வேண்டியவையாகும்.

அரசனின் இருக்கை சிங்காசனம் என்று அழைக்கப்படு கிறது. ஒரு அரசன் சிங்கத்தைப் போன்று வலிமையும் வீரமும் உடையவனாக இருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது. அந்த வகையில் சிங்கத்தைப் போன்று உக்கிரமான குணமுள்ள வன் அல்லது தோற்றமுடையவன் என்ற பொருளில் உக்கிர சிங்கன் என்ற பெயர் ஏற்பட்டிருத்தல் வேண்டும். (உக்கிரப் பெருவழுதி என்றெல்லாம் பாண்டிய மன்னருக்குப் பெயர்கள் உள்ளது. உக்கிர சிங்கன் பாண்டியர் வழிவந்த ஒருவனாகவும் இருக்கலாம்)

அடுத்து, மாருதப்புரவீகவல்லி. இவள் பெயரில் மாரு தம், புரவி, வல்லி என்னும் மூன்று சொற்பதங்கள் இடம் பெற்றுள்ளன. சோழ இளவரசியின் பெயர் வல்லி என்றிருத்தல்

வேண்டும். வல்லி என்றால் வல்லவள், கொடிபோன்றவள் என்று பொருள். மாருதம் என்றால் காற்று. அதாவது, காற்றில் அசைந்தாடும் கொடி போன்றவள் என்று கருதலாம். புரவி என்றால் குதிரை. சோழ இளவரசி கீரிமலைக்கு வந்த காரணம் தனது முகத்தில் விகாரத்தை ஏற்படுத்தி, வருத்திய குன்மநோயை நீக்குதற் பொருட்டேயாம் என்று யாழ்ப்பாண வைபவமாலை தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது. (2001 : 13,16)

குன்மம் என்பது ஒருவகைக் கட்டி. எனவே, வல்லி என்றழைக்கப்பட்ட சோழ இளவரசியின் முகத்தில் குன்மக் கட்டிகள் ஏற்பட்டு அவளுடைய முகத்தோற்றத்தில் விகா ரத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அங்ஙனம் முகத்தில் வளர்ந்த கட்டிகள் காரணமாக அவளின் முகம் குதிரையின் முகத்தைப் போன்று தோற்றமளித்திருக்க வேண்டும். அதன் காரணமாகவே அவளின் முகத்தைக் குதிரை முகம் என்று கூறியிருக்கிறார்கள். எனவே, மாருதம், புரவி, வல்லி என்ற மூன்று சொற்பதங்களையும் இணைத்து மாருதப்புரவீகவல்லி என்ற காரணப் பெயர் அவளுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

இங்ஙனம் மிருகங்களின் பெயர்களை உவமான உவ மேயங்களாக மருத்துவத்தில் பயன்படுத்தப்படுவது வியப்பிற் குரிய ஒரு விடயமல்ல. தொன்று தொட்டு நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தற்காலத் தில் விஞ்ஞானத்தின் உயர்நிலையில் வளர்ச்சியடைந்துள்ள நவீன மேலைத்தேச மருத்துவத்தில் கூட இதற்குப் பல உதா ரணங்கள் உள.

உதாரணமாக, தொழுநோயின் ஒரு நிலையில் தொழு நோயாளியின் முகமானது மிகவும் விகாரமுற்றுச் சிங்கத்தின் முகம்போலத் தோற்றமளிக்கும் என்னும் பொருள்பட Leonine facies என்று கூறப்படுகிறது. Leon lion ; lion like appearance of the face seen in certain diseases, especially lepromatous leprosy. (T.C.M.D.1998 : 1093)

அவ்விதமே, புறாக்கூடு போன்ற மார்பு ( pigeon chest T.C.M.D. 1998 : 364 ) என்றும், அன்னத்தின் கழுத்துப் போன்று ஏற்படும் விகாரம் ( swan neck deformity T.C.M.D. 1998 : 1879), யானையின் கால் போன்று ஏற்படும் விகாரம் ( elephantiasis T.C.M.D. 1998 : 617) என்று மேலும் பல உதாரணங்களுண்டு.

எனவே, சோழ இளவரசிக்குக் குன்மக்கட்டிகளினால் ஏற்பட்ட முகவிகாரத்தைக் குதிரைமுகம் என்று அழைக்கப் பட்டதில் தவறில்லை. குன்மநோய் பற்றித் தமிழ் மருத்துவ நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

கீரிமலையிலிருந்த நீரூற்றுக்களும், வைத்தியர்களும், தெய்வ அருளும் சேர்ந்து இளவரசியின் குன்மநோயைக் குணப்படுத்திய காரணத்தால் அவளின் முகம் மீண்டும் அழ குள்ளதாக மாறியிருக்கவேண்டும். அதன் பிறகு அவள் வல்லி என்றே அழைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அப்படியான ஒரு நிலையிலேயே உக்கிரசிங்கன் அவளைக்கண்டு, விரும்பி, தூக்கிவந்து மணஞ் செய்திருத்தல் வேண்டும்.

குமாரத்திப் பள்ளம் என்ற இடத்தருகே வல்லிக் கிணற்றடி என்னும் ஓரிடம் இருப்பதும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மாவிட்டபுரம் மாவல்லிபுரம் என்று அழைக்கப் பட்டமையும் ( பாலசுந்தரம் 1988 : 58,59) சோழ இளவரசியின் உண்மைப் பெயரைச் சுட்டுவன போல் தோற்றுகிறது.

எனவே, கந்தரோடையில் உக்கிரசிங்கனுக்கும் அவன் ராணியான வல்லிக்கும் சிலைகள் அமைப்பதற்கு நட வடிக்கை எடுத்தால் அது எதிர்காலச் சந்ததியினருக்குக் கந்த ரோடை வரலாற்றின் சிறு பகுதியையாவது நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் அல்லவா?

**குறிப்பு:** 1 உக்கிரசேனன் - மாருதப்புரவீகவல்லி, ஆடக சவுந்தரி குளக்கோட்டன், விஜயன் - குவேனி, கதைகள் ஒன்றி லிருந்து இன்னொன்றாக எழுதப்பட்ட கதைகள் என்று சில

வரலாற்றாசிரியர்கள் கூறினாலும், மாருதப்புரவீகவல்லியுடன் தொடர்பாக உள்ள சில இடப்பெயர்கள் நம்பகரமான சான் றாக இருத்தல் காண்க.

**குறிப்பு :** 2 மாருதப்புரவீகவல்லியின் கதை போன்ற ஒரு கதை திருச்செந்தூர் புராணத்திலும் பின்வருமாறு இடம் பெற்றுள்ளது. "கலிங்க நாட்டு மன்னன் மகள் கனகசுந்தரி என்பவள் பொதிகைமலைச் சாரலிலுள்ள தாமிரபர்ணியில் நீராட வந்த வழியில் குதிரைமுகம் கொண்ட அயக்ரீவரைக் கண்டு நகைத்தமையால், அம்முனிவரின் சாபத்திற்குள்ளாகி மறு பிறப்பில் குதிரைமுகத்துடன் உக்கிரபாண்டியன் மக ளாகப் பிறந்தாள். அங்கமெல்லாம் அழகாக இருக்க, முகம் மட்டும் குதிரைமுகமாக இருந்தது. அதனால் தீர்த்தயாத்திரை செய்து வருகையில் திருச்செந்தூர்க் கடலில் நீராடிச் செந்திலாண்டவனை வழிபட்டதும் அவளின் குதிரைமுகம் மாறியது" (திருச்செந்தூர்ப்புராணம் 1998: 577,578)

# 14. கந்தரோடையும் பௌத்தமதச் சின்னங்களும்

எமது ஊரான கந்தரோடையைப்பற்றி எழுதும் போது இங்கு காணப்படும் பௌத்த மதம் சார்ந்த சின்னங்கள் பற்றிக் குறிப்பிடாவிட்டால் அது முழுமை பெற்றதாக அமையாது போய்விடும். கந்தரோடையில் கயக்கேணி என்று அழைக்கப் படும் இடத்தில் கணிசமான அளவில் சிறியதும் பெரியதுமான பௌத்த தூபிகள் காணப்படுகின்றன. இங்கு முற்காலத்தில் பௌத்தம் பரவியிருந்தமைக்குச் சான்றாக அவற்றை வர லாற்றாசிரியர் சிலர் எடுத்துக்காட்டுகின்றனர்.

கி.பி.14 ஆம் நூற்றாண்டளவில் இயற்றப்பட்ட நம் பொத்த என்ற பௌத்த பாளி நூலில் பௌத்தரின் மத வழிபாட்டுத்தலங்கள் உள்ள இடங்களில் ஒன்றாகக் 'கதுறு கொட'வும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இராசநாயகம் 2003 : 233,234)

ஆயினும் இங்கு பௌத்தத்தைப் பின்பற்றியவர்கள் சிங்களவரா அல்லது தமிழரா என்பதில் வரலாற்றாசிரியர்கள் முரண்பட்டு நிற்கின்றனர்.

"கந்தரோடையில் பௌத்த சமய சின்னங்கள் பெருங் கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் அடங்கிய படைகளுக்கு மேலாக உள்ளன" என்று கூறும் சி.பத்மநாதன் அவர்கள் தொடர்ந்து, "கந்தரோடையிலுள்ள பௌத்த சின்னங்கள் தனியான பண்புகளைக் கொண்டவை: அவை அனுராதபுரம், மிகுந்தலை, மாகமை முதலான இடங்களில் உள்ளவற்றைக் காட்டிலும் வேறுபட்டவை. அங்கு சிறிய அளவிலான தூபிகள்



சனசமூக நிலையமும்
தபால்கந்தோரும்



பெரிய மதவடிக் குளம்



மாருதப்புரவீகவல்லி
(குதிரை முகத்துடன்)



மாருதப்புரவீகவல்லி
(குதிரை முகம் நீங்கிய பின்)



கயக்கேணி புத்ததூபி



கயக்கேணி
பாண்டி விளையாடும் கல்

பல நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ளன. அவை உயிர் நீத்த சங்கத்தாரின் (பௌத்த துறவிகள்) பள்ளிப்படைகளாக அமைக்கப்பட்டவை. இவை போன்ற அண்டவடிவமான கட்டு மானங்கள் ஆந்திர தேசத்து அமராவதி, நாகர்ஜூன்கொண்ட போன்ற இடங்களிற் காணப்படுகின்றன. அங்குள்ளவை உயிர் நீத்த சங்கத்தாரின் சடலங்களைப் புதைத்த குழிகள் மேல் அமைந்தவை" என்றுங் குறிப்பிட்டுள்ளார். (2011 : 55)

"இச்சின்னங்கள் ஒரு வகையில் ஒருவித ஈமைச் சின்னங்களேயாகும். இத்தூபிகளில் இறந்த பௌத்த பிக்கு மாரின் சாம்பல் முருகைக்கற்களிலமைந்த பேழைகளில் அடக்கஞ் செய்யப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது" என்று சி.க.சிற்றம்பலம் எடுத்துக்கூறியுள்ளதும் குறிப்பிடத் தக்கது ( 1993 : 15)

கந்தரோடையில் பௌத்த விகாரைகள் அல்லது பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்குரிய அமைப்புகள் காணப் படவில்லை என்பது பல வரலாற்றாய்வாளர்களின் கருத்தாக வுள்ளது. ஆயினும், கயக்கேணியில் நடைபெற்ற ஆய்வின் போது புத்தர் சிலைகள் சிலவும் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அது தொடர்பாகச் சிலர் பின்வருமாறு கூறுகின்றனர்.

முற்காலத்தில் இந்தியாவிற்கும் தென்னிலங்கை அர சாங்கத்துக்கும் (அனுராதபுர அரசு) இடையிலான போக்கு வரத்து பெருமளவில் ஜம்புகோளத்துறை (மாதகல்) ஊடா கவே நடைபெற்றது. ஜம்பு கோளத்திலிருந்து அனுராதபுரத் திற்குச் செல்லும் மார்க்கத்தில் கந்தரோடை ஒரு முக்கிய கேந்திர நிலையமாக விளங்கியது. (யா.வை.வி. 27)

கந்தரோடையில் யாத்திரீகர்கள் தங்குவதற்கான மடம் (யாத்திரீகர் விடுதி) அமைந்திருந்தது. அவ்விடம் தற்போதும் மடத்தடி என்று அழைக்கப்படுகிறது. கயவாகு மன்னனும் சேர

நாட்டுக்குச் சென்று திரும்பும் வழியில் ஜம்புகோளத்துறையில் இறங்கி கந்தரோடையில் தங்கியிருந்தபோதே அங்கணம் மைக்கடவையில் கண்ணகிக்குக் கோவில் அமைத்திருக் கிறான்.

எனவே, அனுராதபுரம் செல்லும் நோக்குடனோ அல் லது பௌத்த மதத்தைப் பரப்பும் நோக்குடனோ இந்தியா விலிருந்து அறுபது பௌத்த சன்னியாசிகள் ஜம்புகோளத் துறைமுகத்திலிறங்கி கந்தரோடைக்கு வந்து தங்கியிருந்தி ருக்கிறார்கள். அவர்கள் தம்முடன் சில புத்தர் சிலைகளை யும் எடுத்து வந்திருக்கலாம். அங்ஙனம் அவர்கள் கந்த ரோடையில் தங்கியிருந்தபோது வேலணைக்கு மதபோதனை யின் பொருட்டோ அல்லது வேறு காரணத்திற்காகவோ சென் றிருக்கிறார்கள். அங்கு அவர்கள் உண்ட உணவு நஞ்சான காரணத்தினால் (food poisoning) அவர்கள் அனைவரும் உயிர் துறக்க நேர்ந்தது. அவர்கள் மீது மதிப்பு வைத்திருந்த கந்தரோடை மக்கள் அவர்களின் உடல்களை எடுத்து வந்து கந்தரோடையில் தகனம் செய்து தூபிகளை எழுப்பியிருக்க வேண்டும்.

ஏற்கெனவே கூறியது போல கந்தரோடையில் ஆந்திர மொழி பேசுபவர்கள் (வடுகர்) ஒட்டங்கட்டுப் போன்ற இடங் களில் தொழில் நிமித்தம் குடியேறியிருந்ததால் அவர்களே (அவர்களும் பௌத்தராக இருந்திருக்கலாம்) இங்கு காணப்படும் தூபிகளை அமைத்திருக்க வேண்டும். அதனாற்றான் ஆந்திர தேசத்துக் கட்டுமானத்தை ஒத்ததாக இத்தூபிகள் அமைந் துள்ளன.

"ஆனால் இங்கு எல்லாமாக இருபத்திரண்டு தூபிகள் இனங்காணப்பட்டுள்ளன என்று கூறும் சி.க. சிற்றம்பலம் அவர்கள் அவை வெவ்வேறு காலத்திற்குரியன என்றும் கூறியுள்ளமை மேற்படி கதையின் நம்பகத் தன்மையைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. (1993 : 15, 582)

இன்னொரு விடயத்தையும் இங்கு கருதல் பொருத்த முடையது. பொதுவாக ஒரு பிரதேசத்தை வேற்று மதத்தினர் அல்லது வேற்று மொழியினர் ஆக்கிரமித்து, அதிகாரம் செலுத்தும்போது அவ்விடங்களில் தமது மதம் சம்பந்தமான ஆலயங்கள், நினைவுச்சின்னங்களை அமைப்பதும் சகஜம். அனுராதபுரம், பொலனறுவை போன்ற இடங்களில் சைவால யங்கள் அமைக்கப்பட்டுள்ளமை போன்று கந்தரோடையிலும் தென்னிலங்கை அரசரின் அதிகாரம் மேலோங்கியிருந்த காலத்தில் பௌத்த மதச்சின்னங்கள் இங்கு அமைக்கப் பட்டிருத்தல் சாத்தியமே.

கந்தரோடையில் வடபிராமியுடன் தமிழ்ப்பிராமியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை பண்டைக்காலத்தில் தமிழருக் கும், பௌத்த மதத்திற்கும் இடையேயுள்ள தொடர்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது" என்ற புஷ்பரட்ணம் அவர்களின் கருத்தும் கவனிக்கற்பாலது( 29)

அதற்காக இங்கு பௌத்தம் வேரூன்றியிருந்தது என்று கொள்வதும் பொருத்தமாக இராது. வரலாற்று ஆய்வாளர்கள் நடுநிலையில் நின்று கந்தரோடையிலும் அதன் சுற்றுப் புறங்களான அங்கணம்மைக்கடவை, கதிரமலை(சுன்னாகம்) போன்ற இடங்களிலும் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு, முடிவுகளை வெளிப்படுத்தும் போதுதான் உண்மை வெளிச் சத்துக்கு வரும். அதுவரை பொறுத்திருப்போம்.

# 15. பொதுவான விடயங்கள் சில

## 01. ஆவுரோஞ்சிக்கல் :

முற்காலத்தில் கேணிகள் அமைக்கும்போது கால் நடைகளும் அவற்றில் இறங்கித் தண்ணீர் பருகத்தக்கதாக ஒருபுறம் சாய்வான தளமாக அமைத்துவிடுவர். அதுமட்டு மன்றி, கால்நடைகள் நீர் பருகிய பின்னர் தமது உடலைத் தேய்த்து அதிலுள்ள சிறு புழு, பூச்சிகளை அகற்றிக் கொள்வ தற்கு வசதியாக 'ஆவுரோஞ்சிக்கல்' ஒன்றையும் நாட்டி வைப் பது வழக்கம். வட்டாக்கை அம்மன் ஆலயத்தின் வடகிழக்குத் திசையில் அமைந்துள்ள கேணியானது அவ்வித அமைப் பைக் கொண்டு விளங்குகிறது. அங்கணம்மைக்கடவை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயம் தெப்பக் குளத்திற்கு அருகிலும் பழைய ஆவுவோஞ்சிக்கல் காணப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் 2500 ஆண்டுகளுக்கு முன்னரே விவசாய உற்பத்திக்காக மாடுகள் வளர்க்கப்பட்டதற்கான ஆதாரங்கள் கந்தரோடை, ஆனைக்கோட்டை ஆகிய இடங் களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது கிடைத்துள்ளன. எனவே அக் காலத்திலிருந்தே அவுரோஞ்சிக் கற்களை அமைக்கும் மரபும் இருந்திருக்கலாம். (வீரசிங்கம் சிவரூபி 2012 ; 68)

## O2. மாட்டு வண்டிற்சவாரி

கந்தரோடைக்குளம் மாட்டுவண்டில் சவாரிக்கும் பெயர் போன ஓரிடமாக விளங்கியுள்ளது. நீர்வற்றி வரண்டிருக்கும் கோடை காலத்தில் இக்குளத்தில் மாட்டுவண்டில் சவாரி நடைபெறுவது வழக்கம். அதற்காக யாழ்ப்பாண மாவட்டத் தின் பல பாகங்களிலிருந்தும் மாட்டுவண்டிகளும், பார்வை யாளர்களும் இங்கு வருவார்கள். 1980 களில் இங்கு கடைசி யாக வண்டில் சவாரி நடைபெற்றதாக ஞாபகம் உள்ளது.

## O3. சுமைதாங்கி

கந்தரோடையில் அமைந்துள்ள இரு சுமைதாங்கி களைப் பற்றியும் இவ்விடத்தில் குறிப்பிடலாம் என நினைக் கிறேன். அவற்றுள் ஒன்று மேற்படி கேணிக்கு அருகில் வீதி யோரமாக உள்ளது. மற்றது ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ளது. முற்காலத்தில் சாதாரண மக்கள் தமது பொருட்கள், விறகுகள், வாணிபப் பொருட்கள் முதலியவற்றைப் பெரும்பாலும் தலைச்சுமையாக தலையில் வைத்துச் சுமந்து செல்வது வழக்கம். அவ்விதம் செல்லும் போது இடையிடையே அச்சுமையை இறக்கி வைத்து ஓய் வெடுத்துச் செல்வர். அங்ஙனம் கொண்டு செல்லும் சுமையை மற்றவர்களின் உதவியுடனோ அல்லது உதவியின்றியோ இறக்கி வைப்பதற்காகக் கட்டப்படுபவையே சுமை தாங்கி களாகும். இவை வீதியோரங்களில் கட்டப்பட்டிருக்கும்.

சுமை தாங்கி முற்காலத்தில் ஒரு நினைவுச்சின்ன மாகவே கட்டப்பட்டது. பிரசவத்தின்போது கர்ப்பிணித்தாய் குழந்தையைப் பெறமுடியாமல், அதாவது தனது வயிற்றி லுள்ள பத்துமாதம் சுமந்த சுமையை இறக்கி வைக்க முடி யாமல் இறக்க நேரிடும்போது அந்தத் தாயின் நினைவாக எழுப்பப்படுவதே சுமை தாங்கியாகும். அந்தத் தாய் (வயிற்றில்)

சுமையுடன் கஷ்டப்பட்டது போன்று மற்றவர்கள் (தலைச்) சுமையுடன் கஷ்டப்படாமல் தமது சுமையை இறக்கி வைத்து ஆறுதல் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் கட்டப்படுவதே சுமைதாங்கியாகும்.

நீண்டகாலமாகக் கந்தரோடையில் அமைந்திருந்த இவ்விரு சுமைதாங்கிகளும் சமீபத்திய யுத்த அனர்த்தங்களினால் சிதைவடைந்து போயுள்ளன.

## 04. சனசமூக நிலையம், ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை

கந்தரோடை மக்கள் ஓய்வு நேரத்தில் ஒன்றுகூடிக் கதைப்பதற்கும், உலகநடப்புகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கும், பத்திரிகைகள், நூல்கள் வாசிப்பதற்கும் உதவுமுகமாகச் சனசமூகநிலையம், வாசிகசாலை என்பன 1960ஆம் ஆண்டு நிறுவப்பட்டன. இவற்றுக்கான நிதியுதவியை வழங்கிய வைத்தியகலாநிதி சி.சுப்பிரமணியம் அவர்களின் பெயரே வாசிகசாலைக்குச் சூட்டப்பட்டது.

ஆரம்பத்தில் இவை ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு அருகில் செயற்பட்டாலும் பின்னர் தற்போதுள்ள உபதபாற் கந்தோருடன் இணைந்த கட்டடத்தில் நிரந்தரமாகச் செயற்பட்டு வருகின்றன. இதற்கு வழிகோலிய பெருமை சி.மு. அப்புத்துரை அவர்களையேயே சாரும்.

இதன் ஒரு புறத்தில் பால் சேகரிப்பு நிலையம் ஒன்றும் சிறிது காலம் செயற்பட்டது. தற்போது சிறுவர் பாடசாலை இயங்கிவருகிறது.

## 05. கந்தரோடை கிராம முன்னேற்றச் சங்கம்

இதன் முதல் தலைவர் சி.மு.அப்புத்துரை

## 06. கந்தரோடை இந்து வாலிபர் சங்கம்

## 07. கந்தரோடை ஐக்கிய நாணயச் சங்கம்

## 08. இளங்கலை மன்றம்

இம்மன்றத்தின செயற்பாட்டால் 'சிற்பி' அவர்களின் மணப்பரிசு, கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் நச்சுக் கோப்பை, மற்றும் சங்கிலியன் போன்ற நாடகங்கள் அரங் கேறின.

## 09. சங்கக்கடை

ஸ்கந்தவரோதயாக்கல்லூரியின் கிழக்குப்புற வாச லுக்கு எதிர்க உள்ள கட்டடத்தில் வரையறுக்கப்பட்ட கந்த ரோடைக் கூட்டுறவுச்சங்கம் சங்கக்கடை என்ற பெயரில் ஆரம் பிக்கப்பட்டது. இது வலிகாமம் வடக்கு கூட்டுறவுச் சங்கங் களின் சமாஜத்தின் கீழ் இயங்கியது. இது 1942 ஆம் ஆண்டு திரு. வி.தர்மலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அக்காலத்தில் சங்கக்கடை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்கியது. சங்கக்கடையில் வேலை செய்பவ ருக்கும் மதிப்பிருந்தது. கந்தரோடை மக்களில் பெரும்பாலோர் விவசாயிகளாக இருந்தார்கள். எனவே அக்காலத்தில் கூப்ப னுக்கு வழங்கப்பட்ட இலவச அரிசி, சீனி, மா என்பனவும், மண்ணெண்ணெய் போன்றவையும் பெரும்பாலோருக்கு அவ சிய தேவையாக இருந்தன.

1959 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் உருவாக்கப்பட்டபோது கந்த ரோடைச் சங்கமானது அதன் 4 வது கிளையாக இன்றுவரை இயங்கி வருகிறது. 1977 இல் பங்கீட்டு முறை ஒழிக்கப்பட்ட

போதிலும் இச்சங்கம் தொடர்ந்தும் பல்வேறு வழிகளில் கந்த ரோடை மக்களுக்கு உதவி வருகிறது.

இச்சங்கம் தற்போது ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் மேற்கு வாசலுக்கு எதிராக உள்ள கட்டடத்தில் செயற்பட்டு வருகிறது.

## 10. உபதபால் நிலையம்

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதிவரை தொலை பேசிகள், மின்னஞ்சல் போன்றன பெரிய அளவில் இங்கு அறிமுகமாகியிருக்கவில்லை. போக்குவரத்து வசதிகளும் மிகக் குறைவாக இருந்த காலம். எனவே, பெரும்பாலான மக்கள் குடாநாட்டுக்குள்ளாக இருந்தாலும் சரி, வெளியிடங் களாக இருந்தாலும் சரி தமது உறவினர், நண்பர்களுடன் தகவல் தொடர்புகளை மேற்கொள்வதற்குக் கடிதங்கள், தந்தி, காசுக்கட்டளை போன்றவை மிகவும் தவிர்க்க முடியாத அம்சங்களாக இருந்தன. அந்த வகையில் உபதபால்கந் தோர் ஒன்றின் தேவை மிகவும் அவசியமானதாக இருந்தது.

இதனை உணர்ந்த கந்தரோடை மக்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக அப்போதைய தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சர் சு.நடேசபிள்ளை அவர்களினால் கந்தரோடையில் உபதபால் நிலையம் 1954 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கு முன்னின்று செயற் பட்டவர்களில் சிமு.அப்புத்துரை அவர்களும் ஒருவராவார்.

திரு வி.வைத்தியநாதன் இதன் முதல் உபதபால் அதிபராகப் பொறுப்பேற்றுக் குறுகிய காலத்துள் A தர உப தபால் நிலையமாகத் தரமுயர்த்தக் காரணமாக இருந்தார். அவரைத் தொடர்ந்து சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஆனந்த கிருஷ்ணன் சிறிது காலம் பணியாற்றிய பின்னர் கந்தரோடை யைச் சேர்ந்த சி.கணேசவேல் 37 ஆண்டுகள் சிறப்பாகப் பணி யாற்றிச் சேவைபுரிந்துள்ளார்.

## 11. சங்கம் புலவு மயானம்

இம்மயானம் கந்தரோடைக் கிராமத்தின் தென்மேற்குத் திசையில் உள்ளது. இதன் ஆரம்பகாலக் கொட்டகை வைத்தியகலாநிதி சி.சுப்பிரமணியம் அவர்களால் அமைக்கப்பட்டது.


இம்மயானத்தின் கிழக்குப்பகுதி கந்தரோடை மக்களுக்குரியது. மேற்குப்பகுதி உடுவில், மாசியப்பிட்டி, சங்குவேலி, சண்டிலிப்பாய் கிராமத்தவர்களுக்குரியது. அதாவது, தகனம் செய்யும் இடங்கள் இவ்விதம் பிரிக்கப்பட்டுள்ளது.

# 16. கந்தரோடை மண்ணின் புகழ் பூத்த மாந்தர்கள்


கந்தரோடையில் பிறந்த ஒவ்வொருவருமே ஏதாவது ஒருவகையில் சிறப்புப் பெற்றவர்களே. ஆயினும், சிலர் தமது செயற்கருஞ் செயல்களால் இன்றும் மக்கள் மனத்தில் நிலைத்து நிற்கின்றார்கள். 20 ஆம் நூற்றாண்டில் இங்கு தாமும் வாழ்ந்து, மக்களையும் வாழவைத்து, கந்தரோடைக் குப் பெருமை தேடித்தந்த சில பெரியார்களைப் பற்றிய சில விடயங்கள் இங்கு நினைவு கூரப்படுகின்றன.

01. அ. கந்தையா உபாத்தியாயர் ( 1870 1951) - வடக்கர் கந்தையா என்று அழைக்கப்பட்ட இவர் கந்தரோடை மக்களின் கல்விக் கண்களைத் திறக்கும் நோக்குடன் தமிழ்க் கந்தையா வித்தியாசாலை என்னும் பாட சாலையை ஸ்தாபித்து, தனது உடல் பொருள், ஆவி அனைத்தையும் அப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அர்ப் பணித்த பெருந்தகை.


02. சி. கந்தையா உபாத்தியாயர் ( 1869 - 1952) - தெற்கர் கந்தையா என்று அழைக்கப்பட்ட இவர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியை ஸ்தாபித்து, இலங் கையின் பல பாகங்களிலுமிருந்தும் மாணவர்களைக் கல்வி கற்பதற்காகக் கந்தரோடையை நோக்கி வரச் செய்தவர். இவர் ஞாபகார்த்தமாகக் கந்தையா உபாத்தியாயர் வீதி உள்ளது.




கந்தையா உபாத்தியாயர்



அம்பலவாணர் கந்தையா




சனசமூக நிலைய அடிக்கல்




தபால் நிலைய அடிக்கல்

03. வே.முத்துவேற்பிள்ளை - ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அவ்விடத்தில் தமிழ்ப் பாடசாலை ஒன்றை நடாத்தியவர்.

04. க. கார்த்திகேச ஐயர் - அப்பாவையர் என்று அழைக் கப்பட்ட இவர் கந்தரோடையில் ஓர் அதிகார புருடராக விளங்கியவர். இவர் அந்நியரால் இடித்தழிக்கப்பட்ட மாசியப்பிட்டி அங்கணம்மைக் கோவிலின் பல கட்டடங்களைக் கட்டுவித்து, அதன் மீள் பெருமைக்கு வித்திட்டவர்.

05. கா. சுப்பிரமணிய ஐயர் (1880-1937) - சாமி ஐயா என்று அழைக்கப்பட்ட இவர் மேற்படி அப்பாவையரின் புதல் வர். சிறந்த சுதேச வைத்தியரும் சோதிடருமான இவ ரின் வைத்திய முறைகள் க.கா.சுப்பிரமணிய ஐயர் வாகடம் என்ற பெயரில் அண்மையில் எம்மால் வெளி யிடப்பட்டது.

06. சீனிவாசகம் - சீனி வாத்தியார் என்று அழைக்கப்பட்ட இவர் தெற்கர் கந்தையாவுடன் இணைந்து ஸ்கந்த வரோதயக் கல்லூரியின் ஆரம்ப கால வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர்.

07. செல்லப்பா வாத்தியார் - இவரும் தெற்கர் கந்தையா வுடன் இணைந்து ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆரம்ப கால வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர்.

08. சி.சுப்பிரமணியம் ( P.S) ( 1873 - 1964) - கந்தரோடையிற் பிறந்து ஆங்கிலக் கல்வி பயின்று இலங்கையின் பல பாகங்களிலும் வைத்திய சேவை செய்த பெரியார். கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை, ஸ்கந்த வரோதயக் கல்லூரி ஆகியவற்றின் ஸ்தாபகர்களின் நெருங்கிய உறவினரான இவர் அவர்களின் இறுதிக் காலத்தில் அவ்விரு பாடசாலைகளின் முகாமை யாளராகப் பொறுப்பேற்று இரண்டு பாடசாலைகளின்

வளர்ச்சிக்கும் பெரிதும் பாடுபட்டவர். சிறந்த கொடை வள்ளல். யாழ்ப்பாணம் நூலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள சுப்பிரமணியம் பூங்கா, கந்தரோடையில் அமைந்துள்ள சுப்பிரமணிய வாசகசாலை, டாக்டர் சுப்பிரமணியம் வீதி என்று அழைக்கப்படும் சுன்னாகம் - மாசியப்பிட்டி வீதி என்பன இவரை என்றும் நினைவு கூரவைக்கும் ஞாபகச் சின்னங்களாகும். ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி கீதத்திலும் இவரின் சேவை நினைவு கூரப்படுகிறது.

09. முத்துப்பரிகாரி - கந்தரோடையிலிருந்த பிரபல தமிழ் வைத்தியர். இவரின் மூத்தமகனின் மகளையே டாக்டர் சி.சுப்பிரமணியம் திருமணஞ் செய்தார். பன்னாலை யார் வளவு என்னும் இடத்தில் வாழ்ந்தவர்.

10. வைத்திய நாத சாஸ்திரிகள் - கந்தரோடையில் வாழ்ந்த இப்பெரியார் 1919 ஆம் ஆண்டில் திருக்கே தீச்சரத் தேவாரத் திருப்பதிகங்களும், அவற்றின் பொழிப்புரையும், வடமொழியிலுள்ள ஸ்ரீ கேதீச்சுவ ரக்ஷேத்திர வைபவமும் தமிழ்மொழி பெயர்ப்பும் என்ற நூலை வெளியிட்டுள்ளார். இந்நூல் 2009 ஆம் ஆண்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது.

11. சி.மு.அப்புத்துரை (1908 -1986) - தமிழ்கந்தையா வித்தி யாசாலை ஸ்தாபகரான கந்தையா உபாத்தியாயரின் மருமகரான இவர் கந்தையா உபாத்தியாயரின் காலத் துக்குப் பிறகு அதன் முகாமையாளராகப் பொறுப்பேற்று அதன்வளர்ச்சிக்காகப் பாடுபட்டதுடன், இந்துபோட் இரா சரத்தினம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சைவ வித்தி யாவிருத்திச் சங்கத்தின் முக்கிய உறுப்பினராக இருந்து அதன் வளர்ச்சிக்கும் பாடுபட்டவர். கந்தரோடைக் கிரா மாபிவிருத்திச் சங்கம், கந்தரோடை ஐக்கிய நாணயச் சங்கம் என்பவற்றின் தவைராகவும் பணியாற்றியவர்.

12. க.ஆறுமுகம் ( - 1968) - குமாரு வாத்தியார் என்று அழைக்கப்பட்ட, கணக்கர் வளவைச் சேர்ந்த இவர் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கனிஷ்டபிரிவு அதிபராகவும், தமிழ் கந்தையா வித்தியாசாலை அதிபராகவும் கடமையாற்றியவர். இவர் பெயரை நினைவு கூரும் வகையில் கணக்கர் வளவை அண்டிச் செல்லும் வீதிக்கு ஆசிரியமணி ஆறுமுகம் வீதி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

13. க. வை. ஆத்மநாத சர்மா ( 1907 - 1975) - வட்டாக்கை அம்பாள் ஆலய ஆதீனகர்த்தாக்களுள் ஒருவரான இவர் தமிழ்மொழி, வடமொழியில் பாண்டித்தியம் பெற்றிருந்ததுடன் வண்ணார்பண்ணை நாவலர் சைவவித்தியாசாலையில் முதன்மையாசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். சமஸ்கிருதத்திலுள்ள விக்கினேஸ்வர மகோற்சவ பத்ததி, ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் (அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம்), ஆதிசங்கரரின் சுப்பிரமணிய புஜங்கம் என்பவற்றைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். பிராமண சமாஜம் என்ற அமைப்பை உருவாக்கி அதன்மூலம் வடமொழிக் கல்வியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தவர்.

14. சு. சிவசுப்பிரமணியக் குருக்கள் (1906 - 1984) - வட்டாக்கை அம்பாள் ஆலய ஆதீனகர்த்தாக்களுள் ஒருவரான இவர் தமிழ், வடமொழி இரண்டிலும் தேர்ச்சி பெற்றிருந்ததுடன், தமிழ்க் கந்தையா வித்தியாசாலை அதிபராகக் கடமையாற்றி, அப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியவர். ஆலயக்கிரியைகளை ஆகம முறைப்படி செய்வதில் வல்லவர்.

15. க. ச. அருள்நந்தி - கந்தரோடையிற் பிறந்து தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, ஸ்கந்தா என்பவற்றில் கல்வி பயின்ற இவர் இலங்கை முழுவதற்கும் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர்.

16. வி.தர்மலிங்கம் ( 1919 - 1984) - வைத்திய கலாநிதி சி.சுப்பிரமணியம் அவர்களின் சகோதரர் மகனான இவர் கந்தரோடை வட்டார உறுப்பினராகவும், உடுவில் கிராம சபைத் தலைவராகவும், உடுவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராகவும், பின்னர் (அது மானிப் பாய்த் தொகுதியாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட பிறகு) மானிப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பின ராகவும் கடமையாற்றியவர். கந்தரோடையில் பல நலத்திட்டங்களை ஏற்படுத்தியவர். அதில் நன்னீர் விநி யோகத்திட்டமும் ஒன்றாகும்.

17. க. தியாகராசபிள்ளை - இவர் சிவஞான சித்தியார் என்ற நூலை ஆழ்ந்து கற்று அதில் புலமைமிக்க வராய் விளங்கினார். அதனால் இவர் சித்தியார் என்று அழைக்கப்பட்டார். இவர் வாழ்ந்த இடம் தற் போதும் சித்தியார் வளவு என்று அழைக்கப்படுகிறது.

18. மாணிக்கத் தியாகராசா நடராசா மேற்படி சித்தி யாரின் மகனான இவர் சுன்னாகம் பட்டணசபை உறுப்பினராகப் பணிபுரிந்துள்ளார்.

19. சி.பொன்னம்பலம் - சிதம்பரப்பிள்ளை உபாத்தியா யரின் மகனான இவர் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சித்திர ஆசிரியராகப் பணிபுரிந்ததுடன், கந்தரோடை வரலாற்றுச் சின்னங்களைச் சேகரித்துப் பாதுகாப் பதிலும் ஆர்வங்கொண்டவராக விளங்கினார். யாழ்ப்பாணத் தொல்லியல் கழகத்தின் முதல் தலை வராகவும் பணிபுரிந்துள்ளார்.

20. அ.தற்பரானந்தன் ( 1943 - 2012) - அண்மையில் கால மான இவர் தமிழ்க் கந்தையா உபாத்தியாயரின் பேர னாவார். இவர் ஆசிரியராக, உபஅதிபராக ஸ்கந்தவ ரோதயக் கல்லூரியிலும், அதிபராகத் தமிழ்க் கந்தையா வித்தியாசாலையிலும் கடமையாற்றிய துடன், உடுவிற் கோட்டக் கல்வி அதிகாரியாகவும்,

வட இலங்கைச் சங்கீதச்சபை, திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச்சபை என்பவற்றின் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார்.

21. த.வல்லிபுரம் - தமிழ்க்கந்தையா வித்தியாசாலையின் ஆசிரியராக, உப அதிபராகக் கடமையாற்றிய இவர் கந்தரோடை வரலாற்று ஆய்விலும் ஈடுபாடுடையவராக விளங்கினார்.

22. கி.கந்தசாமி - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, தமிழ்க் கந்தையா வித்தியாசாலை என்பவற்றில் ஆசிரியரா கவும் இருந்தவர். கந்தரோடை உடுவில் வீதியில் திரும்பு துறைக்கு அருகில் குடாரை, சங்கவத்தை என்பவற்றை ஊடறுத்துக் கயக்கேணிக்குச் செல்லும் வீதிக்கு ஆசி ரியர் கந்தசாமி வீதி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

23. ந.சி. கந்தையாபிள்ளை (1893 - 1967) - கந்தரோடை நன்னியர் சின்னத்தம்பி என்பவர் இவரின் தந்தையார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் வல்லவ ரான இவர் மலேசியாவில் புகையிரதப் பகுதியில் உயர் பதவி வகித்தவர். பின்னர் தமிழ்நாட்டில் தமது இறுதிக் காலத்தைக் கழித்து 1967 இல் மறைந்தார். நவாலியில் இவர் திருமணம் செய்தமையால் சிலர் இவர் நவாலியிற் பிறந்தவர் என்று தவறாகக் குறிப் பிட்டுள்ளனர். 66 நூல்கள் வரை இவர் எழுதியுள்ளார். அவற்றுள் தமிழகம் (1934), தமிழ்ச் சரித்திரம் (1940), வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட பழந்தமிழர் (1943), தமிழர் யார் (1946), செந்தமிழ் அகராதி (1950), தமிழ்ப் புலவர் அகராதி (1953). காலக் குறிப்பு அகராதி (1960) என்பன குறிப்பிடத்தக்கவையாகும்

24. ஞானி கந்தையா - இவர் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலைக்கு அருகில் வாழ்ந்தவர். தச்சு வேலை செய்யும் ஆசாரியார் பரம்பரையைச் சேர்ந்தவர். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குரிய தேர் கந்தரோடையிலேயே செய்யப்பட்டது என்றும். அத்தேரை உருவாக்கிய பெருமை இவரையே சாரும் என்றும் கூறுவர்.

**குறிப்பு:** இந்த வரிசையில் இடம்பெற வேண்டிய பெரியார்கள் இன்னும் பலருள்ளனர். எனினும் அவர்கள் பற்றிய விபரங்கள் நூலாசிரியருக்கு இதுவரை கிடைக்காமையால் இப்பதிப்பில் அவர்களைப் பற்றிக் குறிப்பிட முடியவில்லை.

## 17. முடிவுரை

தொல்லியல் நிபுணர்களும், வரலாற்று ஆய்வாளர் களும் எமது ஊரான கந்தரோடையில் கணிசமான அளவுக்கு ஆய்வுகள் நடாத்தியுள்ளனர். தமது ஆய்வுகள் பற்றிப் பல கட்டுரைகளும் எழுதியுள்ளனர். சில ஆய்வுகள் பற்றிய அறிக் கைகள் என்ன காரணத்தாலோ வெளிவராமல் இருக்கின்றன. முக்கியமாக 1970 ஆம் ஆண்டு பென்சில்வேனியாப் பல் கலைக்கழக நூதனசாலையைச் சேர்ந்த குழுவினரால் நடாத் தப்பட்ட ஆய்வறிக்கை வெளியிடப்படாமல் உள்ளதாகச் சுட் டிக்காட்டப்படுகிறது (சிவசாமி 1976 :.36, பத்மநாதன் 2011 :.37 )

பேராசிரியர் வி.சிவசாமி அவர்கள் “கந்தரோடையில் இதுவரை அறியப்பட்டவற்றை விட அறியப்படாதன பல உள்ளன. அவை எங்கெங்கு உள்ளனவோ என்பது தெரி யாது” என்று குறிப்பிட்டுள்ளமையும் நோக்கற்குரியது.

கந்தரோடை கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலி ருந்தே சிறப்புடன் விளங்கியுள்ளது என்பதை ஆய்வாளர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளனர். கந்தரோடைச் சூழலை யும், அதன் இடப்பெயர்களையும், தொல்லியற் தகவல் களையும் ஒருமித்து நோக்குமிடத்து கந்தரோடை நகரானது ஆதிகாலத்தில் நன்கு திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்ட ஒரு துறைமுகநகர் அல்லது கடலுடன் தொடர்பாக வாணிபம் செய்யும் வண்ணம் அமைக்கப்பட்ட நகர் என்பது தெளி வாகிறது.

கந்தரோடையின் கிழக்கிலும், மேற்கிலும் அமைந்த அல்லது அமைக்கப்பட்ட குளங்களும் இவ்விரு குளங்களையும் இணைத்து நகரின் கிழக்கு, வடக்கு, மேற்குப்புறமாக உள்ள கால்வாயும் இதன் எல்லைகளாகவும், அரண்களாகவும் உள்ளன.

கயம் அல்லது கயக்கேணியும், அதன் அருகில் உள்ள குடாக்கரை(குடாரை), சங்காவத்தை, உடுவிற்குளத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள திரும்புதுறை என்பனவும், கடலுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் அமைந்துள்ள வழுக்கையாறும் கடல்வழி வாணிபத்தை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.

அரச மாளிகை அமைந்திருந்ததாகக் கருதப்படும் தோப்பாம் பள்ளம், மாளிகைத்திடர், யாத்திரீகர், வணிகர்கள் தங்குமிடமான மடம் (மடத்தடி), பந்தயம் கட்டி விளையாடும் அல்லது ஓட்டர்கள் வசித்த ஓட்டங்கட்டு, குதிரைகள் இறக்கப்படும் அல்லது நிறுத்தப்படும் இடமான கனவட்டங்கரை (கனவெட்டாங்கரை), அங்கணம்மைக்கடவை மீனாக்ஷி அம்மன் ஆலயம், கண்ணகை அம்மன் ஆலயம் முதலானவை இந் நகரின் புராதன வரலாற்றை நினைவுபடுத்தி நிற்கின்றன.

முற்காலத்தில் இலங்கையின் தென்பாகத்தை இடையிடையே தமிழர்கள் கைப்பற்றி ஆட்சிபுரிந்திருக்கிறார்கள். அவ்விதமே வடபாகத்தைச் சிங்களவர்கள் கைப்பற்றி ஆட்சிபுரிந்திருக்கிறார்கள். ஆயினும் இலங்கையின் வடபகுதியில் தமிழரசர்கள் வலிமையுடன் ஆட்சிபுரிந்திருக்கிறார்கள் என்பதையும் அவர்களிற் சிலரே தென்பகுதயைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்தனர் என்ற கசப்பான உண்மையைச் சிலர் ஜீரணிக்கக் கஷடப்படுகின்றனர். எல்லாளன் போன்ற தமிழ் மன்னர்கள் வடபகுதியிலிருந்து சென்றே தென்பகுதியைக் கைப்பற்றி ஆட்சி செய்ததாகத் தமிழ் வரலாற்று ஆய்வாளர்கள் சிலர் கூறுகின்றனர். இலங்கையின் வடபாகத்திலும் பலம் வாய்ந்த அரசு இருந்துள்ளது என்பதே அவர்கள் கருத்தாகும்.

இவ்விடத்தில் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணச் சரித்திரத்தில் குறிப்பிட்டுள்ள ஒரு விடயத்தைக் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது, 'பண்டைத் தமிழகமானது சேர, சோழ, பாண்டிய மண்டலங்களுடன் ஈழமண்டலத்தையும் கொண்டிருந்தது' என்பதே அது. அவர் குறிப்பிட்ட ஈழமண்டலம் என்பது இலங்கையின் வடபாகத் தையே என்பதில் சந்தேகமில்லை. ( 1915 : 3)

புவியியற்படி இலங்கை இந்தியாவின் ஒரு தொடர்ச்சி யாகவே உள்ளது என்று அறிஞர் கூறுவதும் நோக்கற் குரியது. ( பசாம் 2005 : 2 )

பண்டைத்தமிழகத்தில் நானிலங்கள் இருந்ததாகப் பழந் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. ஆயினும், இலங்கை அல்லது ஈழமண்டலம் கடற்கோள்களினால் இந்தியாவி லிருந்து பிரிந்துவிட்ட காரணத்தால் தமிழ்நாட்டில் சேர, சோழ, பாண்டிய மண்டலங்கள் மூன்றுமே இருந்தன. எனவே. நானி லங்கள் என்பதை முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் (பாலைநிலம் அங்கு இல்லாமையால் அதை விலக்கி) என் பவையாக விளக்கங் கொடுத்துள்ளனர் (சேதுப்பிள்ளை 1987:1,2) போல் எண்ணத்தோன்றுகிறது.

சேரர் (சேர நாட்டுத் தமிழர்), சோழர் (சோழ நாட்டுத் தமிழர்), பாண்டியர் (பாண்டிய நாட்டுத் தமிழர்) என்பது போல ஈழர் ( ஈழர் நாட்டுத் தமிழர்) என்பவர்களும் இருந்திருக் கிறார்கள். (2011 ; 0, 7) பண்டைக் காலத்தில் நான்காவது தமிழ் நிலத்தை ஆட்சி செய்திருத்தல் வேண்டும். (நாகம் பூசித்த ஸ்ரீ நாகபூசணி அம்மன்)

“முதலாம் இராசராசன் சேர, பாண்டிய நாடுகளைக் கைப்பற்றியதைப் போன்று கி.பி.993 ஆம் ஆண்டளவில் இலங்கையின் வடபகுதியையும் கைப்பற்றினான். ஈழம் சோழப் பேரரசின் மண்டலங்களில் ஒன்றாகி ஈழமான மும்முடிச் சோழ

மண்டலம் என அழைக்கப்பட்டது" என்று சிபத்மநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது.(2011: .10)

எனவே, சேர, சோழ, பாண்டிய மண்டலங்களைப்போல ஈழமண்டலம் என்று ஒன்றும் இருந்ததா? என்பதும் ஆராயப்பட வேண்டியது. அவ்விதம் ஈழமண்டலம் என்று ஒன்று இருந் திருந்தால் அதன் தலைநகராகவோ அன்றி முக்கிய நகரா கவோ கந்தரோடை விளங்கியிருத்தல் சாத்தியமாகும்.

கயம் அல்லது கயற்கண்ணி, அங்கணம்மைக்கடவை மீனாக்ஷி அம்மன் ஆலயம், கனவட்டம்கரை (வழுதி கன வட்டம் - பாண்டியன் குதிரை) போன்ற பெயர்கள் மற்றும் பாண்டிய நாணயங்கள் கந்தரோடையில் பாண்டியருக்கிருந்த செல்வாக்கை எடுத்துக்காட்டுகின்றன.

அங்கணம்மைக்கடவை என்பதன் மலையாளக்கருத்து, கண்ணகை அம்மன் ஆலயம் என்பன சேரர்களுடனான தொடர்பையும், சிங்கள அரசனான முதலாம் கயவாகு மன்ன னின் செல்வாக்கையும் எடுத்துக்காட்டுகின்றன.

சோழ இளவரசியான மாருதப்புரவீகவல்லியை உக் கிரசிங்கன் மணந்து கொண்ட செயல் சோழர்களுடன் கந்த ரோடைக்கிருந்த தொடர்பை எடுத்துக்காட்டுகிறது.

கந்தரோடையிற் கிடைத்த காசியப்ப மன்னனின் சாச னம் சிங்கள மன்னரின் ஆதிக்கத்தை எடுத்துக்காட்டுகிறது.

கயக்கேணியில் காணப்படும் பௌத்த தூபிகள் இங்கு பௌத்த மதச் செல்வாக்கை எடுத்துக்காட்டும் அதேவேளை அகழ்வாய்வில் கிடைத்த திரிசூலம், முதலியன சைவசமயச் செல்வாக்கை எடுத்துக் காட்டுகின்றன.

'நம்பொத்த' நூலில் கதுறுகொட என்று கூறப்பட்டிருப் பது தவிர கந்தரோடையிலுள்ள இடப்பெயர்கள் அனைத்துமே தூய தமிழ்ப்பெயர்களாகவும் அவற்றுட் சில பண்டைத்தமிழ்ப்

பெயர்களாகவும் இருப்பதையும் பார்க்குமிடத்து பண்டைக் காலமுதல் இங்கு தமிழர் வசித்து வந்துள்ளமை தெளிவா கிறது. அவர்களில் தமிழ்ப் பௌத்தர்களும் இருந்திருக்கலாம்.

இவை பற்றிய விரிவான ஆய்வுகள் அவசியமாகின்றன.

யாழ்ப்பாண வரலாற்றை அல்லது இலங்கைத்தமிழரின் வரலாற்றை எழுத முற்படும் எந்த ஆய்வாளரும் எமது ஊரான கந்தரோடைப் பற்றிச் சில வரிகளாவது எழுதியே ஆக வேண்டும். இல்லாவிட்டால் அவரின் ஆய்வு பூரணமானதாக அமையமாட்டாது. அத்துணை பெருமை பெற்றது நாம் பிறந்த கந்தரோடை.

இலங்கைத்தீவின் தலைபோன்று அமைந்துள்ள யாழ்ப் பாணத்தில் அதன் உச்சித் திலகம் போன்று அமைந்துள்ள கந்தரோடை புராதன நகரமாகவும், அரசியல் தலைநகரமாக வும் பண்டைக்காலத்தில் விளங்கி, பல தொல்லியற் சின்னங் களைத் தன்னகத்தே சுமந்து கொண்டு, தனது தொன்மையை யும், பெருமையையும், தனித்துவத்தையும் இழந்துவிடாமல், காலநீரோட்டங்களுக்கு முகங்கொடுத்து, காலத்தை வென்று நிலைத்து நிற்கின்றது. அதையிட்டுக் கந்தரோடை மண்ணில் பிறந்தவர்கள் மட்டுமன்றி, தமிழ் மக்கள் மட்டுமன்றி, இலங் கையர் அனைவருமே பெருமைப்படலாம்.

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அ.சி | - | அபிதான சிந்தாமணி |
| இ.தி.நா.இ.கோ | - | இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள் |
| க.த.அ. | - | கழகத்தமிழ் அகராதி |
| கை.மா | - | கைலாய மாலை |
| பு.த.அ. | - | புதிய தமிழ் அகராதி |
| யா.வை.வி. | - | யாழ்ப்பாண வைபவ விமர்சனம் |
| வை.ம.அ. | - | வைத்தியமலை அகராதி |
| T.C.M.D. | - | Taber's Cyclopedic Medical Dictionary |
| T.L. | - | Tamil Lexicon |

# உசாத்துணை நூல்கள்


1. ஆத்மநாதசர்மா க.வை. **அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரம்,** நாதன் வெளியீடு, 1964

2. இந்திரபாலா. கா. **இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு.** குமரன் புத்தக இல்லம், சென்னை கொழும்பு. 2006

3. இராசநாயகம் செ. **யாழ்ப்பாணச்சரித்திரம்,** Assign Educational Services, New Delhi Chennai, 2003

4. **இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோவில்கள்** - இந்து சமயத் திணைக்களம், பிரதேச அபிவிருத்தி அமைச்சு, 244, காலி வீதி, கொழும்பு - 4, இலங்கை - 1984

5. கணபதிப்பிள்ளை சி. **விமரிசனக்கட்டுரை தமிழ்மலர் ஒன்பதாம் வகுப்பு,** கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1971. பக். 61

6. கதிர் தணிகாசலம் - **தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயராய்வும் -** சரவணா பதிப்பகம், 127, மேற்குத்தெரு, இராகவரெட்டி காலனி, சென்னை 600095. முதல்பதிப்பு சூன். 1992

7. **கழகத் தமிழ் அகராதி** திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 79, பிரகாசம் சாலை, சென்னை 600 001 , 1980

8. குணராசா க. **மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப் பாண வைபவமாலை ஒரு மீள் வாசிப்பு**, கமலா பதிப்பகம், 83, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.2001

9. குமாரசுவாமி. எஸ். டபிள்யூ. **வடமாகாணத்துச் சில ஊர்ப்பெயர்கள் - யாழ்ப்பாணம்,** 1918(யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற நூலின் பின்னிணைப்பாக இது உள்ளது)

10. சண்முகசுந்தரம் த. **நாட்டார் இலக்கியத்தில் மழை இரங்கிப் பாடல்கள்,** தெல்லிப்பளை, 1984

11. சாம்பசிவபிள்ளை T.V. **தமிழ் - ஆங்கில அகராதி** Vol. V. Government of Tamil Nadu, 1994

12. சிங்காரவேலு முதலியார் . ஆ. **அபிதான சிந்தாமணி,** Assian Educational Services, New Delhi Chennai, 1996.

13. சிவசண்முகராஜா சே. **தமிழர் வாழ்வில் குழந்தைகள் நலம்** 2005

14. சிவசாமி வி. **கந்தரோடை 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு கொண்டுள்ள தலம்**, ஸ்கந்தா 1976.

15. சிவபாதசுந்தரனார் நா. வித்தகம் ச.கந்தையாபிள்ளை, தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி தமிழ் மன்றம், 1977

16. சிற்றம்பலம் சி.க. **யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு,** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல் வேலி. 1993. முதல் பதிப்பு

17. சேதுப்பிள்ளை ரா.பி. **தமிழகம் ஊரும் பேரும் -** பழனியப்பா பிரதர்ஸ். சென்னை 600014. ஆறாம்பதிப்பு 1987

18. **சேந்தன்றிவாகரம் - மரப்பெயர்த்தொகுதி**

19. ஞானப்பிரகாசர் **யாழ்ப்பாண வைபவ விமர்சனம்,** அச்சு வேலி ஞானப்பிரகாச யந்திரசாலை, 1928

20. **தமிழ்க்கந்தம்** - கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை வெளியீடு, 1959.

21. தற்பரானந்தன் அ. **கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை சுருக்கவரலாறு நிறுவனர்** அம்பல வாணர் கந்தையா நினைவுப் பேருரை, 2004

22. திலகநாயகம் ப. - **ஊரும் பேரும் வலிகாமம் வடக்கில் ஓர் ஆய்வு,** வலிகாமம் வடக்கு பிரதேச சபை மலர்

23. பசாம் A.L. வியத்தகு இந்தியா தமிழாக்கம் செ.வேலாயுதபிள்ளை, மகேசுவரி பாலகிருட்டினன், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை. 2ஆம் பதிப்பு 2005

24. பத்மநாதன் சி. **யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுருக்க வரலாறு** - குமரன் புத்தக இல்லம். கொழும்பு சென்னை. 2011

25. பரமேஸ்வரன் ந. **அப்பு ஆச்சி ஆண்ட மண்ணில்.....,** கீரிமலை நவரத்தின ஐயர் இராசேஸ்வரி ஞாபகார்த்த வெளியீடு, 2006

26.. பாலசுந்தரம்.இ. **இடப்பெயராய்வு காங்கேசன் கல்வி வட்டாரம்-** பண்டிதர் சி. அப்புத்துரைர மணிவிழா வெளியீடு, 1988

27. பாலசுந்தரம். இ - **ஈழத்து இடப்பெயர் ஆய்வு** ரொறன்ரோ , கனடா. 2002

28. பாலசுந்தரம் இ. **ஈழத்தில் கண்ணகி வழிபாடு பற்றிய ஆய்வில் வன்னிப் பிரதேச நாட்டார் பாடல்கள் பெறும் முக்கியத்துவம்** - தமிழோசை, தமிழ் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம், 1986

29. பிள்ளைப்புலவர் ம.க.வே. சந்திர மௌலீசர் **சதகம் என்னும் ஈழமண்டலச்சதகமும் நா.சபாபதிப்பிள்ளை இயற்றிய உரையும்,** சென்னைப்பட்டணம் வித்தியாநு பாலன யந்திரசாலை, ருதிரோற்காரி வருடம்.

30. **புதிய தமிழ் அகராதி,** உமா பதிப்பகம், கோலாலம்பூர், 2009

31. புஷ்பரட்ணம் ப. **தொல்லியல் நோக்கில் கந்தரோடையும் கதிரமலையும்,** யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை நிறுவனர் அம்பலவாணர் நினைவுப் பேருரை

32. பொன்னையா ஐ. (பதிப்பாசிரியர்) பரராச சேகரம் **பாலரோக நிதானம்**

33. மணி பி.எஸ். **வளம் தரும் மரங்கள்** (இரண்டாம் பாகம்), நியூ செஞ்சுரி புக் கவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை 98, 1998

34. முத்துத்தம்பிப்பிள்ளை ஆ. **யாழ்ப்பாணச்சரித்திரம்,** நாவலர் அச்சகம், யாழ்ப்பாணம், 1915

35. முத்துராச கவிராசரின் **கைலாய மாலை**, சுழிபுரம் திருமதி வள்ளியம்மை முத்துவேலு நினைவு வெளியீடு, 1983

36. முருகேசமுதலியார் க.ச - **குணபாடம் மூலிகைவகுப்பு** தமிழ்நாடு சித்தமருத்துவ வாரியம், சென்னை. 1988

37. வித்தியானந்தன் சு. **ஸ்தாபகர் நினைவு உரை** 1965, ஸ்கந்தா 1969

38. வீரசிங்கம் சிவரூபி - **தமிழர் பண்பாட்டு வாழ்வியலிலே ஆவுரஞ்சிக் கற்கள். மற்றும் சுமைதாங்கிக் கற்கள் (கட்டுரை)** - யாழ்ப்பாண வாழ்வியல் 2012 - பக். 68

39. வென்றிமலைக் கவிராயர் - **திருச்செந்தூர்த் தல புராணம்,** குகஸ்ரீ ரஸபதி உரையுடன், திருச்செந்தூர்த் தேவஸ்தான வெளியீடு, 1998

40. **வைத்திய மலையகராதி -** பூமகள் அச்சுக்கூடம், சென்னை. 1903

41. வைத்தியநாத சாஸ்திரிகள் க.ச. **திருக்கேதீச்சுவர தேவாரமும் தலபுராணமும் உரையுடன்,** 1919. மறு பதிப்பு அகில இலங்கை இந்து மாமன்றம், 2009

42. **அஞ்சலி மலர்** - சி.மு. அப்புத்துரை அவர்கள், 1986

43. பிரம்மஸ்ரீ ச.இராமசாமிக் குருக்கள் நினைவுமலர் 1968

44. வைத்திய கலாநிதி சி.சுப்பிரமணியம் நினைவுமலர், 1964

45. விசுவநாதன் வைத்தியநாதன் நினைவுமலர் 2002

46. ஜெகந்நாதன் பொ. **யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்,** யாழ்.இலக்கிய வட்டம். 1987

47. Tamil Lexicon Vol.11 Part 1, University of Madras 1982

48. The Skanda 110th Anniversary Souvenir, 2004

49. Taber's Cyclopedic Medical Dictionary Vol 1 & 11, Jaypee Brothers Medical Publishers (p) LTD, New Delhi 110 002,1998

50. **நாகம் பூசித்த ஸ்ரீ நாகபூஷணி அம்மன்** - அறங்காவலர் சபை, ஸ்ரீ நாக பூஷணி, அம்மன் கோயில், நயினாதீவு, 5 ஆம் பதிப்பு 2011 பக். 07

# பின்னிணைப்பு

## மாசியப்பிட்டி அங்கணம்மைக்கடவை
## ஸ்ரீ மீனாட்சியம்மை பொன்னூஞ்சல்
### (பண்டிதர் வ.மு.இரத்தினேஸ்வர ஐயர் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

### விநாயகர் காப்பு

சீராரும் மாகையெனும் நகரினோர் பாற்றிகழ்
தேம்பொழில் சூழ் பரமாக்கைப் பதியின் மேவும்
போராரும் மீனாட்சி யம்மை பேரிற்
பிறங்கு திருவூஞ்சலிசைப் பதிகம் பாட
ஏராரு மேகதந்த மிரு செவி முக்கண்
ஏற்ற நால்வாய் இசைந்த வைங்கை யேய்ந்த
பாராரு போற்று தந்தி முகத் தெங்குருவே
பரவரிய நின் கமல பாதமலர் காப்பதாமே

திகடரு நால்வேத மவை கால்களாகச்
செப்பு சிவாகம மதுவே விட்டமாகப்
புகலு மிருங்கலை நெடிய வடமதாகப்
போற்றரிய பிரணவமே பீடமாக
தகைமை செறியூஞ்சல் மிசைத்தங்கி நீடுஞ்
சகத்தி லுயிருய்ந்திட நற்கருணை கூர்ந்து
மிகுபுகழ் சேர் பரமாக்கைப் பதியில் வாழும்
மீனாட்சி யம்மையே யாடீரூஞ்சல்

சிரமருவும் பணிகளொளி செறிந்து மன்னத்
தேசுறு நன்னுதற் பணி காதணிகள் மின்ன
மருமருவு மலர்மாலை முத்துமாலை
வயங்கொளிசேர் பதக்கம் மருமத்தே துன்னக்
கரமருவு தொடிகிலுங்கிக் கவினுடனே யிலங்கப்
பாதகமலமதிற் றண்டை சிலம்பலம்பத்
தருமருவு பரமாக்கைப் பதியின் மேவும்
தற்பரை மீனாட்சியே யாடீரூஞ்சல்

அந்தணர்கள் அன்பினொடு வேதமோத
அலரவனேமுத லிமையோர் வணங்கி வாழ்த்தக்
கந்தருவர் கின்னரர் யாழ்கொண்டு பாடக்
கணிகையர்களிரு மருங்கும் நடனமாட
வந்தனைசெய் யடியார்கள் வழுத்திச் சூழ
மாசில்குல மங்கையர்கள் மலர்க்கை தாங்க
செந்திருவாழ் பரமாக்கைப் பதியில் வைகுந்
தேவி மீனாட்சி யம்மே யாடீரூஞ்சல்

சங்கினங்கள் மிக முழங்க முரச மார்ப்பத்
தாரை தவில் சல்லாரி தண்ணுமையே தாளம்
எங்கணும் பேரொலி யெழுப்ப விண்ணோர் மாதர்
ஏழிசைக் கீதம் பாடி இறைஞ்சி ஏத்தக்
கங் கைகள் சாமரைவீசக் கன்னி காப்பக்
கமல மின்னார் கைக் கொண்டு காளாஞ்சி ஏந்தப்
பொங்கு பரமாக்கை வளம் பதியின் மேவும்
பொற்புடை மீனாட்சி யம்மே யாடீரூஞ்சல்

சகமுழுது மீன்றருளுங் கருணைத் தாயே
சந்ததமு மெமைக் காக்குந் தலைவி நீயே
மகிழ்வுடனே எண்ணான்கு தருமந்தன்னை
வளர்த்திடு மங்கயற் கண்ணாய் வானோர் போற்றுந்

தகைமை செறி பரமனிடப் பாக மேவுந்
தயாநிதியே யறு சமயந் தந்த சக்தி
புகழ் பரவு பரமாக்கைப் பதியில் வாழும்
பொற்கொடி மீனாட்சி யம்மே யாடீரூஞ்சல்

பாருலகும் விண்ணுலகும் பரவிப் போற்றப்
பாவலர் நாவலர் கவிதைபாடி வாழ்த்தச்
சூரரமங்கையர் தருவின் மலர்கள் தூர்ப்பத்
துடியிடை மேனகை யரம்பை தொண்டைச் செவ்வாய்
ஊர்வசியே முதன் மடவார் வடம் தொட்டாட்ட
ஓங்கிவளர் செந்நெல் விளை கழனி சூழும்
நீர்வளஞ் சேர் பரமாக்கைப் பதியில் மேவும்
நேரிழை மீனாட்சி யம்மே யாடீரூஞ்சல்

மதியணி செஞ்சடை முடியோனாலவாயின் மன்னு
சொக்கநாதர் மனை மங்கை நீயே
நிதி சிறிது மில்லாத வடியார் துன்ப நீக்கு வதுன் கடனே
நேச நெஞ்சாற் பலநாளும் பண்பாகத்
துதி புரிவார் அகவிருளை நீக்கி ஞானச்
சுடர் கொழுத்தி மிக பரமுஞ் சுகந்தந்தாள் வாய்
திதிபெறு நற் பரமாக்கைப் பதியில் வாழும்
தேவி மீனாட்சி யம்மே யாடீரூஞ்சல்

மலையரசன் திருமகளே யாடீரூஞ்சல்
மங்கையர் நாயகமே யாடீரூஞ்சல்
பலகலைக்கும் பதியான குமரன் றன்னைப்
பயந்தருளும் பராபரையே யாடீரூஞ்சல்
புலவர் புகழ் தலைவியரே யாடீரூஞ்சல்
புராரி திருத் தேவியரே யாடீரூஞ்சல்
தலம் பரவு பரமாக்கைப் பதியின் மேவு
தற்பரை மீனாட்சி யம்மே யாடீரூஞ்சல்

பார்வாழி பன்னு பரமாக்கை வாழி!
பதியுறு மாலயமுடனந்தணரும் வாழி!
சீராருங் கலைமறை யாகமங்கள் வாழி!
திருந்திய நல்விழா வணிசெய் யடியார் வாழி!
பேராரு மாதங்கடோறு மும்மாரி பெய்து
பெருங்கழனி விளைவு பெருகி வாழி!
வாராருங் கொங்கை மீனாட்சியம்மை வாழி!
வான்கருணை நித்தமும் வாழி! வாழி!!

## எச்சரீக்கை

பரமாக்கைப் பதி மேவிய பரையே எச்சரீக்கை
பரமன் திருவருளாகிய பண்பே எச்சரீக்கை
மகிடாசுரன் முதலாகிய மாபாவிகள் மடித்தோய்
மகிபாலர்கள் வாழத் திருவளித்தோய் எச்சரீக்கை
வானாடார் பணிபுரியத் திருவருளும் மகபதியே
தேனாடுயர் வனமல்கிய பதியாய் எச்சரீக்கை
பூதேவர்கள் புகழ் ஞானக் கொழுந்தே எச்சரீக்கை
மூதாவென வாழ்த்தடியர்ப்புரப்போய் எச்சரீக்கை

## பராக்கு

மன்னு பரமாக்கை வளர்வோய் பராக்கு
உன்னரிய வளமருளும் உரவோய் பராக்கு
அங்கணம்மைக் கடவையமர்வோய் பராக்கு
மங்காத கருணை பொழி தற்பரையே பராக்கு
சந்ததமும் பணிவோர் வினை தவிர்ப்போய் பராக்கு
சிந்தாகுல நீத்தே திகழ் சக்தி பராக்கு
குன்றா வருட் சோதிக் குமரன்றாயே
முன்றாடி மகிழ்மானே பராபரையே பராக்கு

## லாலி

படைப்பாகிய நடைபெற்றிடப் பணித்தோய் லாலி லாலி
விடைப்பாகர்க் கிடமேவிய சத்தி லாலி லாலி
மகிடாசுரன் மகுடம் பொடி செய்தோய் லாலி லாலி
மகிமானவர் மயல் மாற்றிடு மாதா லாலி லாலி
நவரத்தின மீதுற்றிடு நவசத்திகள் நனி போற்றிட
நவரத்தின மகுடத்துடன் நலமருளினோய் லாலி லாலி
பரமாக்கைப் பதி மேவிய பரையே லாலி லாலி
பரந்தாமன் தங்கையாகிய பாவாய் லாலி லாலி

## மங்களம்

மங்களம் ஜெய சுபமங்களம் - என்றும்
மங்கா வருட் பரைக்கும் மா கணேசனுக்கும் - மங்களம்
துன்னு வடிவேலற்குந் தூய சத்தியர் - தமக்கும்
பன்னும் பராபரைக்கும் - மங்களம்
தொண்டர் வினை நீக்குந் துய்ய பராபரைக்கும்
அண்ட வாணர் கண்டு தினந் துதிதாய்க்கும் - மங்களம்
பரமாக்கைப் பதி மன்னு பராசத்திக்கும்
திரமான திருத்தளிக்கும் - மங்களம்
நித்திய சுப மங்களம்

திருச்சிற்றம்பலம்

# கந்தரோடை - அருளானந்தப் பிள்ளையார் திருவூஞ்சல்

## (இயற்றியவர் தென்கோவை ச.கந்தையாபிள்ளை அவர்கள்)

திருச்சிற்றம்பலம்

## காப்பு

சீரேறும் யாழ்ப்பாண தேசந் தன்னிற்
செய்ய கந்த ரோடையெனும் பதியின் மேவும்
ஆரேறுஞ் சடைமுடியோன் புதல்வாரன
ஆரருளா னந்தவிநா யகர்தம் மீது
பாரேறு மூஞ்சலெனும் பதிகம் பாடப்
பத்தியொடு பரவடியார்க் கருள் பாலிக்குங்
காரேறும் யானைமுக முடைய வன்னோன்
கமலமல ரடியிணைகள் காப்ப தாமே

மன்னிய நால் வேதங்கள் தூண்களாக
வழுத்து முபநிடதங்கள் விட்டமாகப்
பன்னுசிவா கமநூல்கள் கயிறதாகப்
பரவுசிவ ஞானமதே பலகையாக
உன்னரிய வகையமைந்த வூஞ்சற் பீடத்
துவகையுட னமர்ந்தடியார் வினைகணீக்கி
அன்னமலி வயற்கந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாடீரூஞ்சல்

சந்திரனுஞ் சூரியனுங் கவிகை தாங்கச்
சாருமருத் துயரால் வட்டம் வாங்க
மந்திரமா மறைமுனிவர் கீதந் தேங்க
மன்னுபல வாச்சியங்க ளொலியின் வீங்க
இந்திரைகேள் வனுமயனு மறைகளோதி
யிருமருங்குந் தொழுது நின்று வடந்தொட்டாட்ட
அந்தணர்க ளுறைகந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாடீரூஞ்சல்

தொல்லுலக முழுதீனறுங் கன்னி யாகித்
துவாதசாந் தத்தலத்தி னொளியா யோங்கி
அல்லமர்கண் டத்தீசன் றேவி யாகி
யடியனுளக் கன்மலைவா ழுன்னை யீன்ற
வல்லபைதன் றிருக்கணவா மயூர வாசி
வாகனற்கு முன்னவரே மணமார் செங்கேழ்
அல்லிமலர் வயற்கந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாடீரூஞ்சல்

முந்துபரா பரையாதி யிச்சை ஞானம்
முதன்மைபெறு கிரியையென மருவி யென்றும்
ஐந்துதொழி னடாத்துசிவ சத்திமான
வைந்துகரத் தோடமரு மாதிமூர்த்தி
தந்தமத வேழமுக வடிவு கொண்டு
சகலசரா சரபுவனந் தாமே யாகி
அந்தமில்சீ ரமர்கந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாடீ ரூஞ்சல்

செம்பொன்வரை யானசுழி முனையி னோடு
திகழுமிடை பிங்கலையாச் செப்ப நின்ற
நம்புபிர ணவவடிவாம் வாசியேறி
நல்லடியார்க் கருள்புரியு ஞானமூர்த்தி
வம்பியல்குண் டலிவல்லி ரவியை நோக்க
மன்னியமூ லாதார மருவுந் தேவே
அம்பயமார் வயற்கந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாடீ ரூஞ்சல்

மலரயனுந் திருமாலுந் தேடிக் காணா
மறைப்பொருளாந் தம்பிரான் றோழர் முன்னே
உலகுபுகழ் மூதாட்டி வழிபா டேற்றே
யுயர்கயிலை மலையடையச் செய்த செம்மல்
கலகமிடு மதவாதப் பிணியோர் தங்கள்
கனவகத்துங் காணரிய துரிய மூர்த்தி
அலர்மலிபூம் பொழிற்கந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாடீ ரூஞ்சல்

மணியியல்கிம் புரிக்கோட்டு வதன மாட
மன்னுயிர்க்கே வலசகல மருவி யாடப்
பணியியல்பூ ணணியுதரங் கரங்களாடப்
பரவுபல புவனசரா சரங்களாடத்
தணிவிலருண் மதுமலர்பூங் கழல்க ளாடச்
சலமிலடி யவர்சிவமா நிலையிலாட
அணியலர்பூம் பொழிற்கந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாட லூஞ்சல்

பேறுதரு சைவநெறி பெரிது வீறப்
பித்துறுமா யாவாத நெறிகள் பாறத்
தேறுபதி பசுபாசத் தெளிவு நாறத்
தெய்வசிவா னந்தமதுச் சிறந்தே யூற
மாறுபடு பசுபாச ஞான மாற
மன்னுடரு வருண்ஞான மலிந்தே யேற
ஆறணிபூம் பொழிற்கந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாட லூஞ்சல்

கருதுபர வீட்டினரே யாடீமூஞ்சல்
கயமுகனை வீட்டினரே யாடீரூஞ்சல்
உருவமுறு கோட்டினரே யாடீரூஞ்சல்
உம்பர்திருக் கோட்டினரே யாடீரூஞ்சல்
மருவுமராக் கச்சரே யாடீரூஞ்சல்
மன்னுயிருக் கச்சரே யாடீரூஞ்சல்
அருமறையோ ருறைகந்த ரோடை வாழும்
ஆனந்த விநாயகரே யாட லூஞ்சல்

தேடருநான் மறையுணரந் தணர்கள் வாழி
தேவர்குல மானினங்கள் முகில்கள் வாழி
நீடுசெங்கோன் மன்னரொடு பின்னோர் வாழி
நிலவுதமிழ் மறைவாழி சைவர் வாழி
தோடுடைய செவியனடி யடியார்கள் வாழி
துங்கமணி யைந்தெழுத்து நீறு வாழி
ஆடுகொடி மதிற்கந்த ரோடை வாழி
ஆனந்த விநாயகனா ரருளும் வாழி

திருச்சிற்றம்பலம்

# கந்தரோடை - வத்தாக்கை விசாலாட்சியம்மை திருப்பொன்னூஞ்சல்

## (சுன்னாகம் முருகேச பண்டிதர் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

சீர்பூத்த முடிமீது நிலவு பூத்த
நிமலனார் திருவருளின் நிறைவு பூத்த
ஏர்பூத்த யானைமுகத் தெழிலே பூத்த
இறைவனடித் தாமரைகள் இறைஞ்சி ஏத்திக்
கார்பூத்த மலர்ச்சோலை கவினப்பூத்த
கந்தநகர் செறிவத்தாக் கையில் வாழும்
பேர்பூத்த விசாலாட்சிஅ ம்மை மீது
பெயர்பூத்த ஊஞ்சலிசை பேச லாமே

துதிமேவு ஞானநடந் தூண்களாக
துணையாகு மூனநடங் கயிறதாக
விதிமேவு மவற்றிடைதான் விட்டமாக
விளங்கியஓங் காரமது பீடமாக
கதிமேவும் ஐந்தெழுத்தின் தோற்றமாக
கண்டமணி ஊஞ்சலிடைக் கவன ஏறி
மதிமேவு முகத்தணங்கே! ஆடீர் ஊஞ்சல்
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல்

பூவகையா மீசருமுச் சீவர் தாமும்
முத்தேகந் தொறுமொருமை பன்மையாக
மேவியவா பாசஅபி மானம் எல்லாம்
விளிந்ததுநீ நீயதுவே யானாய் என்னும்
பாவகமாய் அகண்டிதபூ ரணமே யாகிப்
பாவியேன் வாழஅருட் பார்வை நல்கி
மாவிலிளங் குயிலனையீர்! ஆடீர் ஊஞ்சல்
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல்

தடமருவுங் குவளையென விழிகள் மின்ன
சலதியெனக் கருணையவைக் கிடையே துன்ன
நடமருவு மீசர் வலப் பாகமன்ன
நாயகியே என்றடியார் துதிகள் பன்ன

கடமருவு கரியுரியே காயஞ் சொன்னக்
கடமருவி மார்பினிடைக் கவின வன்ன
மடமருவு மலைமகளே! ஆடீர் ஊஞ்சல்
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல்

மேருவென விளங்குமிகு தூண்கணாட்டி
விரவுமண்ட கோளகையின் விட்ட மோட்டி
சீரியவன் பினரன்பிற் கயிறு பூட்டி
செப்பியவிப் புவியைநிகர் பலகை மாட்டி
தேரியநல் லறிஞர்கள்கைத் திறமை காட்டி
செய்தமணிப் பீடமிசை திகழ வைகி
வாரியரங் கணையானாய்! ஆடீர் ஊஞ்சல்
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல்

கொண்டபர னார்புடையின் முருவல் கொள்ள
கும்பிமுக னோடிளைய குமரன் மெல்ல
மண்டியபே ரன்பினொடு மடியின் வைக
மறைகளெலாம் வேதமுனி வோர்கள் விள்ள
தொண்டர்கட முளத்திலா னந்த மெள்ளத்
தோன்றாம னுழைந்திருளின் துயரைத் தள்ள
வண்டுறுகை மலரணங்கே! ஆடீர் ஊஞ்சல்
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல்

கங்கைகளங் கிருபாலும் கவரி வீசக்
காளிகள்கைக் குடைமதிகள் கொண்டு கூடப்
பங்கையமென் பாவையர்கள் துதிகள் பேசப்
பலபணிகள் குலவுமொழி யிருளை மூச
மங்கைஅயி ராணிச்சி மடவி லாச
மாதரொடும் வெள்ளடப்பை கொண்டுலாவ
மங்கலபூ ரணவாழ்வே! ஆடீர் ஊஞ்சல்
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல்

இந்துமுக விடைஅசைய அயில்மே னாட்டத்(து)
அரமகளிர் சதிமுறையில் நடனங் காட்டத்
தொந்தமென முரசுகண நாதர் மாட்ட
தும்புருநா ரதர்யாழின் சுருதி கூட்ட

கந்தருவ மகளிரிசை நாவால் மூட்ட
கமலினியும் அனுந்திதையும் வடந் தொட்டாட்ட
வந்தனைசெய் வார்மருந்தே! ஆடீர் ஊஞ்சல்
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல்

மாயோனுக்(கு) இளையாளே! ஆடீர் ஊஞ்சல்
மகிடமுகற்(கு) இளையாளே! ஆடீர் ஊஞ்சல்
தீயவருக்(கு) அளையாளே ஆடீர் ஊஞ்சல்
செய்தவருக்(கு) இளையாளே! ஆடீர் ஊஞ்சல்
தூயமறை முடியாளே! ஆடீர் ஊஞ்சல்
சுடருமதி உடையாளே! ஆடீர் ஊஞ்சல்
வாயமுத மொழியாளே! ஆடீர் ஊஞ்சல்
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல்

தன்னனைய கோபுரமும் மதிலு மேரு
தானென்ன விளங்கவொரு தளியுந் தந்து
நின்னை அதில் தாபனஞ்செய் தேத்து மாறு
நினைதருமிக் கந்தநகர்ப் பதியின் ஓங்கி
பொன்னுலக மெனவாழ்வு பொருந்து மாறு
பாற்புறு மற்றவை விரைவிற் பொலியுமாறு
மன்னுயிருக் கொருதாயே! ஆடீர் ஊஞ்சல்
வத்தாக்கை மாதுமையே! ஆடீர் ஊஞ்சல்

## வாழி

வாழிபுவி அதிலுறுநான் மரபு வாழி
மறையினொடா கமங்களுமவ் வழியே வாழி
வாழிமுகில் மகளிர்பதி விரதம் வாழி
வாழிபசு நிரையொடுநல் வாய்மை வாழி
வாழிமுக மதிகருணை வாழி வாழி
வாழிமல ரடியுநாற் கரமும் வாழி
வாழியவத் தாக்கைவிசா லாட்சி யம்மை
மனத்தருளால் அன்னகரம் வாழி வாழி

திருச்சிற்றம்பலம்

**குறிப்பு :** முருகேச பண்டிதர் வத்தாக்கை என்றும் வீரமணிஐயர் வற்றாக்கை என்றும் குறிப்பிட்டுள்ளமை காண்க.

# மாகியம்பதி அங்கணம்மைக்கடவை
# ஸ்ரீ மீனாட்சியம்மை
# தோத்திரம்

(இயற்றியவர் : அருட்கவி சீ.வினாசித்தம்பி 1957)

## காப்பு

ஞான கரப்பொருளே யானை முகத்தவனே
மீனாட்சி யம்பிகையின் மெய்ப்பதத்தில் - தேனான
தோத்திரப்பா பாடுதற்குத் தூயகலை சுரந்து
காத்தருள்வாய் இன்பம் கனிந்து.

வண்ணமிகு மதுரை நகர்த் தாயே போற்றி
மன்னுமலை யத்துவசன் மகளே போற்றி
பண்ணமையும் தமிழ்வளர்த்த குயிலே போற்றி
பாங்கான அறம்வளர்த்த மணியே போற்றி
புண்ணியரின் நெஞ்சமரும் பொருளே போற்றி
புவனமெல்லாம் காத்தவளே போற்றி போற்றி
விண்ணவர்சூழ் அங்கணம்மை கடவை மேவும்
மீனாட்சி யம்பிகையே போற்றி போற்றி.

நாதவிந்து கலையான வடிவே போற்றி
நாரணனின் சோதரியாய் வந்தாய் போற்றி
ஆதரவாய்ச் சொக்கனிடம் அமர்ந்தாய் போற்றி
ஆனைமுக னொடுகுகனைத் தந்தாய் போற்றி
பாதமெடுத் தம்பலத்தே நடித்தாய் போற்றி
பார்வதியாய் இமாசலத்தில் பிறந்தாய் போற்றி
வேதமிகும் அங்கணம்மைக் கடவை மேவும்
மீனாட்சி யம்பிகையே போற்றி போற்றி.

வளங்குபுகழ்க் கண்ணகியோ டமர்ந்தாய் போற்றி
மாமாரி யோடு வலம் வருவாய் போற்றி
குளங்கரையில் கணபதியை வைத்தாய் போற்றி
கோலேந்தித் தடாதகையாய் ஆண்டாய் போற்றி
இளங்குரும்பை கேட்டிங்கே இருந்தாய் போற்றி
ஏழைகளுக் கிரங்குமகேஸ் வரியே போற்றி
விளங்குயர்சீர் அங்கணம்மைக் கடவை மேவும்
மீனாட்சி யம்பிகையே போற்றி போற்றி.

காலனுல கெய்தாமற் காப்பாய் போற்றி
கரும்புடனே பொற்கலசம் கொண்டாய் போற்றி
ஞானமெலாம் படியளந்த மாதா போற்றி
நமசிவாயப் பொருளான நலமே போற்றி
கோலமிகு மறைபூத்த கொடியே போற்றி
கொடுமசுரர் குலமழித்த அன்னே போற்றி
மேல்வர்வாழ் அங்கணம்மைக் கடவை மேவும்
மீனாட்சி யம்பிகையே போற்றி போற்றி.

## கந்தரோடை - வற்றாக்கைப்பதி
## ஸ்ரீ விசாலாக்ஷி அம்பாள் ஸமேத விஸ்வநாதஸ்வாமி
## திருவூஞ்சல்
## ("இயலிசைவாரிதி" "கவிமாமணி" இணுவை
## பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

நாற்சுருதி வேதங்கள் தூண்க ளாக
நளினமிகு சிவாகமமே விட்ட மாகச்
சாற்றிடுநற் கலைஞானம் கயிற தாகச்
சக்திபொலி ஓங்காரம் பீட மாக
நாற்றிசையும் தோத்தரித்து வணங்கும் அன்னை
நாரிவிசா லாக்ஷியம்மை ஸமேத ராகிப்
போற்றுகந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
பதிவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல்.

உளத்துந்து பக்திநாற் றூண்நி றுத்தி
ஓரைந்து புலன்விட்டம் ஒருங்கே கூட்டி
களத்துந்து நாற்கரண வடங்கள் மாட்டி
கனிந்ததிரு வருளென்ற பலகை தேக்கி
வளத்துந்து சீவாத்மா முத்தி யூஞ்சல்
வந்தமர்ந்தே ஆடவருள் புரியும் தேவா!
குளக்கந்த ரோடைவற்றாக கையில் மேவும்
குருவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல்.

அம்புலியும் அரவணியும் நதியும் ஆட
அழகுவிரிக் கதிர்மணியின் சடையும் ஆட
கொம்புநுதல் விழியாடத் திலக மாடக்
குழையாடத் தோடாட நகையு மாட
வெம்புகரித் தோலாடச் சூல மாட
விசாலாக்ஷி அம்மையவள் சேர்ந்தே ஆடச்
சம்புகந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
சாம்பவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல்.

புகலரிய வேதங்கள் போற்றி ஆடப்
புனிதமழு மான்படையும் பூணூல் ஆட
சகலபுவ னங்களொடு அண்டம் ஆடச்
சக்திவிசா லாக்ஷியம்மை மருவி ஆட

இகமாட இறையாட அரியு மாட
இனியவயன் வாணியொடு இனித்தே ஆட
நகர்கந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
நளினவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல்.

சுரங்கொண்ட டமருகமும் அனலு மாடக்
கழுத்தரவு படம்விரித்து அசைந்தே ஆட
உரங்கொண்ட புலித்தோலும் இசைந்தே ஆட
உரசுவட மாடத்தலை மாலை ஆட
அரன்கொண்ட அக்குமணி ஆர மாட
அம்மைவிசா லாக்ஷிபதச் சிலம்பு மாடப்
புரக்கந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
பதிவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல்.

அலர்கதிர்சேர் திரிசூலப் படையும் ஆட
அடிமலரில் செஞ்சிலம்பு தண்டை ஆட
வலப்பதமும் முயலகனை மிதித்தே ஆட
வரதமொடு அருள் அபய கரமு மாடக்
கலைச்சந்தரன் சடைமுடியில் ஒளிர்ந்தே ஆட
காசிவிசா லாக்ஷியம்மை களித்தே ஆட
மலர்க்கந்த தோடை வற்றாக் கையில் மேவும்
மஹாவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல்.

ஞாயிறுவும் திங்கள்வெண் கவிகை தாங்க
ஞாலச்செவ் வாய்மகளிர் கவரி வீச
வாயிதழில் வாத்தியமாம் கொம்பு தன்னை
வானவரும் இசைத்திடவே வியாழன் பூண்டு
தூயவெள்ளி திருவூஞ்சல் பீடம் மீதே
தேவிவிசா லாக்ஷியொடு ஆச னித்தே
தோயுகந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
தேவவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல்.

பித்தனென ஒருவனுனை இகழ்ந்தா லென்ன
பிச்சாண்டி எனஒருத்தி புகன்றா லென்ன?
வித்தகநின் கவிதைபிழை என்றா லென்ன?
வில்லேந்தி வீரனுனை அடித்தா லென்ன?
சுத்தசிவா நந்தமுதத் தேனாய் நின்றே
சொரிந்தருளை அடியவருக் கீயும் தேவா!
சித்த கந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
ஸ்ரீ விஸ்வநாதரே ஆடீர் ஊஞ்சல்.

மாணிக்க வாசகத்தேன் மதுவை மாந்தி
மண்சுமந் தடிபட்டாய் சொக்க நாதா!
காணிக்கை யாகக்கண் தானம் செய்த
கண்ணப்பன் காலுதையும் பொறுத்தாய் தேவர்
கோணிக்கு ழைந்தழுத கவுணி யர்க்கே
கௌரியொடு ஞானப்பால் கொடுத்தாய் ஈசா
கேணிக்கந் தரோடைவற் றாக்கை மேவும்
கோன்விஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல்.

ஆனந்தத் தாண்டவனே ஆடீர் ஊஞ்சல்
அம்பலப் பொற்பாதா ஆடீர் ஊஞ்சல்
ஞானந்த வழ்குருவே ஆடீர் ஊஞ்சல்
ஞாயிறு கோடி ரூபா ஆடீர் ஊஞ்சல்
மோனந்த வழ்நாதா ஆடீர் ஊஞ்சல்
முத்திக்கு வித்தானாய் ஆடீர் ஊஞ்சல்
தேன்கந்த ரோடைவற்றாக் கையில் மேவும்
திருவிஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல்.

•

மங்கள நாயகனே ஆடீர் ஊஞ்சல்
மாமறையின் பொருளோனே ஆடீர் ஊஞ்சல்
திங்கள்சு மப்பவனே ஆடீர் ஊஞ்சல்
திருக்காசி வாசனே ஆடீர் ஊஞ்சல்
அங்கயற் கண்ணிபதி ஆடீர் ஊஞ்சல்
அருளுருவ மானவனே ஆடீர் ஊஞ்சல்
செங்கந்த ரோடை வற்றாக் கையில் மேவும்
செழும்விஸ்வ நாதரே ஆடீர் ஊஞ்சல்.

## வாழி

நூலோரும் தேவர்களும் கோவும் வாழி!
நுண்ணமுகத் தண்மாரி நீடு வாழி!
கோலோச்சும் நீதிபுரி மன்னன் வாழி!
கோனடியார் பக்திவளம் பெருகி வாழி!
மேலோர்கள் போற்றுசைவ நீதி வாழி!
மெல்லியலார் கற்புநெறி ஞானம் வாழி!
சீலகந்தத ரோடைவற்றாக் கையும் வாழி!
தேவிவிசா லாக்ஷிவிஸ்வ நாதர் வாழி!

சுபம்

## யாழ். கந்தரோடை - கொற்றன் கட்டுப்பதி மேவும் ஸ்ரீ அம்பலவாண சுவாமி வைரவ சுவாமி திருப்பொன்னூஞ்சல்

(அளவையூர் அருட்கவி வினாசித்தம்பி இயற்றியது)

### காப்பு

அகிலாண்ட கோடியெல்லாம் அடக்கிக் கொள்ளும்
அற்புதமாம் வயிற்றோனே ஐந்து கையா
பகவதியாள் அணைகடகவரும் பாலா வெற்பில்
பாரதத்தைக் கொம்பொன்றால் வரைந்த செல்வா
குகபதிக்கு மூத்தவனே கந்தரோடைக்
கொற்றன் கடடம்பலமாம் கோயில் கொண்டு
சுகமுதவும் வைரவனார் ஊஞ்சல் பாடச்
சுந்தரனே நின்பதமே காப்பதாம்.

### நூல்

வேதமுடனாகமங்கள் விளங்கக்காக்கும்
மெஞ்ஞான சிவமகனாய்த் தோன்றி நின்று
நாதமிகு தில்லையிலே நடன மாடி
நண்ணிமகிழ் அடியனுக்குக் காட்சி காட்டி
ஆதரவாய் ஆல வேம்பின் நிழல் மலிந்த
ஆலயத்தில் இனிதமர்ந்து கருணை பொங்கி
ஆதி கந்தரோடைக் கொற்றன் கட்டின் மேவும்
அம்பல வைரவ சுவாமி ஆடீரூஞ்சல்.

பணியேறு திரிசூலம் பரசு பாசம்
பயிலுடுக்குத் திரக்கரத்தில் தாங்கி நின்று
பிணியேறு மடியாரின் துன்பம் நீங்கிப்
பேணுவார்க் கினியவரமெல்லாம் நல்கி
துணி வேற சுவானத்திற் கொலவமர்ந்து
சோதிக்குட் சுடராகி யாடும் தேவா
அணி கந்த ரோடைக் கொற்றவன் கட்டின் மேவும்
அம்பல வைரவ சுவாமி ஆடீரூஞ்சல்.

தூய திரு மறை நான்கும் தூண்களாக
துலங்கு சிவாகமங்களெலாம் நாண்களாக
ஏய உபநிடதங்கள் விதானமாக
இதிகாச புராணங்கள் ஆரமாக
நாயகமாம் பிரணவமே பீடமாக
நயந்த கலையாவும் மணி மாடமாக
ஆய கந்த ரோடைக் கொற்றன் கட்டின் மேவும்
அம்பல வைரவ சுவாமி ஆடீரூஞ்சல்.

பழமறையின் தலைவனெனப் படைக்கும் நாதன்
பரமனைப் பார்த் தெள்ளிநகை புரிதல் கண்டு
மொழி நகத்தால் நடுச் சிரத்தைக் கொய்த நாதா
முண்ட கத்தான் நினைவாரின் காவற்காரா
கழனி பயில் தொண்டருக்குத் துணையாய் வந்து
கரு நாகம் தீண்டாமற் பாதுகாத்தாய்
அழகா கந்தரோடைக் கொற்றன் கட்டின் மேவும்
அம்பல வைரவ சுவாமி ஆடீரூஞ்சல்.

கர பதியும் தனபதியும் மாலை சூட்ட
சுக்கிரனும் குருமணியும் தீபம் காட்ட
அரியயனும் விடையவனும் அணிகள் பூட்ட
அம்பிகையும் தோழிகளும் அழகு தீட்ட
வருமிமையோர் முறை கொண்டு வடந்தொட்டாட்ட
மாகதளி யணிகுழாம் விருது நாட்ட
அருண கந்தரோடைக் கொற்றன் கட்டின் மேவும்
அம்பல வைரவ சுவாமி ஆடீரூஞ்சல்.

முன்பு தொழு மடியவரின் முறைப்பாடேற்று
முட்டாத பூசையொடு துதிப்பாடேற்று
துன்பவினை தொடாமற் சூல மேந்தி
தொண்டு கண்டு சாம்பரெனப்பு நயந்து பூசி
இன்பமுடன் மயானத்தில் நின்று சொர்க்க
இனிய மனைக் கலைத்தருளும் விருநாதா
அன்பர் கந்தரோடைக் கொற்றன் கட்டின் மேவும்
அம்பல வைரவ சுவாமி ஆடீரூஞ்சல்.

திருக்கோண மனைநத்தினுக்கும் அதிபனாகி
செப்புமறை அட்சரங்கள் செயல் சிறக்க
பெருக்கான பலியேற்கும் பெருமானாகிப்
பேச வரும் தேவாதி தேவ ரெல்லாம்

உருக்கோல மெடுப்பதற்கு வித்துமாகி
உணர்ந்தெழுதி அழைக்கவொணா ஒருவனாகி
அருட் கந்தரோடைக் கொற்றன் கட்டின் மேவும்
அம்பல வைரவ சுவாமி ஆடீரூஞ்சல்.

மன்னுதிசை குலுங்க வரும் பாத மாட
வனைந்த மணிச்சிலம்பாடப் பஞ்சவர்ணப்
பொக்கிழைத்த உடை யாட மாலை யாட
புரி நூலும் தலைமாலைத் தொகையு மாட
சென்னிமிசை முடியாடக் குழைகளாட
செங் கண்களாடிடப் புன்னகை வாயாட
அன்னக் கந்தரோடைக் கொற்றன் கட்டின் மேவும்
அம்பல வைரவ சுவாமி ஆடீரூஞ்சல்.

நெறி தந்த சிவனாட உமையாளாட
நெடு வேலனாட இபமுகவனாட
செறிவுற்ற சடைவீர பத்திரனாட
திருமாலும் அரிகர புத்திரனுமாட
நறைக் குழலிமீனாட்சி மாரியாட
நன் மருங்கில் மாகாணி யம்மையாட
அறிஞர் கந்தரோடைக் கொற்றன் கட்டின் மேவும்
அம்பல வைரவ சுவாமி ஆடீரூஞ்சல்.

சமயமுதற் பொருட்கருவே யாடீரூஞ்சல்
தருமனந்த கலைக்குருவே யாடீரூஞ்சல்
நமனிடரைத் தீர்ப்பவரே யாடீரூஞ்சல்
ஞமலிமிசை வருபவரே யாடீரூஞ்சல்
நமசிவாயப் பெருமானே யாடீரூஞ்சல்
நாட சுகந் தருவானே யாடீரூஞ்சல்
அமுத கந்தரோடைக் கட்டின் மேவும்
அம்பல வைரவ சுவாமி ஆடீரூஞ்சல்.

## வாழி

ஒப்பரிய சைவநெறி வாழி அன்பில்
ஊறிவரு மடியார்கள் கூட்டம் வாழி
செப்பமுயர் அறம்வாழி நீதி வாழி
திருநீறு மைந்தெழுத்தும் பொங்கி வாழி
முப்பொழுதும் பூசிக்கும் முனிவர் வாழி
முத்தி தரு திருமுறைகள் வாழி ஆனை
அப்பன் கந்தரோடைக் கொற்றன் பதியும் வாழி
அம்பல வைரவர் பாதம் வாழி வாழி
சுபம்

# கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை பாடசாலைக் கீதம்
## (வித்துவான் இ.திருநாவுக்கரசு அவர்கள் இயற்றியது)

செந்தமிழ் நாவலர் பைந்தமிழ்ப் பாவலர்
தோன்றி வளரும் பதி மிகு
அந்தமில் ஆரியம் ஆங்கிலம் ஆதி
அருங்கலை பேணும்பதி

பைந்தளிர்ச் சோலைசூழ்ந் தெங்கும் சிவஒளி
பாலிக்கும் தெய்வபதி உயர்
கந்தரோடை எங்கள் சிந்தைக்கினிய
உறைபதி வாழியவே

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியா
சாலை நீ வாழியவே புகழ்
சந்ததம் ஓங்கி உயிர்க்குயிராகி எம்
தாயென வாழியவே

பைந்தமி ழின்சுவை பாவின் கவிநயம்
பல்கலை விஞ்ஞானம் - தெய்வச்
செந்தமிழ் ஆங்கிலம் எண்கலை தேர்ந்து நாம்
சீர்பெற வாழியவே

சங்கம் வளர்தரும் சால்பின் உயர் தமிழ்க்
கந்தையா வள்ளல் தரும் - இன்பம்
அந்தமில் பல்கலைக் கோயிலென எங்கள்
அன்னை நீ வாழியவே.

ஈழத்தமிழால் வண்மையுயர் டாக்டர்
சுப்பிரமணிய வள்ளல் அன்பன்
ஆழத்தினால் வளர்ந் தோங்கினை பல்லாண்டு
அருள் மிக வாழியவே.

மன்னும் புகழ்வளர் கந்தையா வள்ளல்
மருகர் கருணை மிகும் - தூய
பொன்னின் பொறைதரும் அப்புத்துரை துணை
ஆக நீ வாழியவே.

(தமிழ்க் கந்தம் 2013)

# ஸ்கந்தவரோதயக் கல்லூரி
# கல்லூரிக் கீதம்
## (வித்துவான் சி.ஆறுமுகம் அவர்கள் இயற்றியது)

போற்றிசெய் வோம்எங்கள் கல்லூரித் தாயைப்
பொலிவுடன் மாணவர் கூடி (போற்றி)

ஸ்கந்த வரோதய எங்கள் கல்லூரி
சந்தத மும்புகழ் கொண்டே
இந்த வுலகினில் நன்கு வளர்ந்திட
ஸ்கந்த அருள்புரி நன்றே (போற்றி)

ஆங்கில ஞானமும் அருந்தமிழ் ஆரியம்
அவைதரு ஞானமும் நன்றே
ஓங்குவிஞ் ஞானமும் உயர்தரு கலைகளும்
உண்மையில் வளர்தரும் இங்கே (போற்றி)

பிறவிகள் தோறுமே தொடருநற் கல்விப்
பேற்றினை ஈந்தனை அன்னாய்!
உறவென்றும் நீயே உண்மையோ டுனக்கா(க)
உழைத்திடு வோமென்றும் நாமே (போற்றி)

எந்தை யெனத்தகு கந்தைய வள்ளலின்
சிந்தையி லெழுந்தகல் லூரி
செந்தண்மை மருத்துவன் சுப்பிர மணியனின்
சேவையில் உயர்ந்த கல்லூரி

சேவையில் உயர்ந்த கல்லூரி
சேவையில் உயர்ந்த கல்லூரி
சேவையில் உயர்ந்த கல்லூரி (போற்றி)

வாழிய வாழிய எங்கள் கல்லூரி
வளமலிந் தோங்கியே என்றும்
வாழ்க! வாழ்க!! வாழ்க!!!
வளரிள மதியெனவே
வாழிய எங்கள்கல் லூரி (போற்றி)

(ஸ்கந்தா 1976)

# ஆசிரியரின் நூல்கள்

01. ஈழத்துச் சித்தமருத்துவ நூல்கள் - ஓர் அறிமுகம்.
(அரச சாகித்திய மண்டலப்பரிசு, கொழும்பு தமிழ்ச் சங்கப் பரிசு பெற்ற நூல்.)

02. சுதேச மருத்துவ மூலிகைக் கையகராதி
(அரச கரும மொழித திணைக்களப் பரிசு பெற்ற நூல்)

03. உளநெருக்கீடுகளும் மனநலனும்

04. இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்த மருத்துவம்

05. பிள்ளைப்பிணி மருத்துவம் - கைநூல்

06. சித்த மருந்தியலும் மருந்தாக்கவியலும்.

07. சித்தமருத்துவ மூலதத்துவம்
(வடகிழக்கு மாகாணசபையின் உயர்கல்விக்கான விருது பெற்ற நூல்)

08. யாழ்ப்பாண மக்களின் சைவ உணவுப் பழக்கவழக்கங்கள்

09. மூலிகைகள் ஓர் அறிமுகம்

10. மூலிகை உணவு மருத்துவம்

11. யோகாசனமும் உடல்நலமும்

12. Common Drugs in Siddha Pediatrics

13. இந்து ஆலயங்களில மருத்துவ சுகாதாரம்
(இலங்கை இலக்கியப் பேரவையின பரிசு பெற்ற நூல்)

14. மருத்துவமும் சோதிடமும்

15. இந்து விரதங்களும் உடல்நலமும்

16. சித்தமருத்துவ மகப்பேற்றியலும் மகளிர் மருத்துவமும்

17. மூலிகைத் திறவுகோல் (Dictionary of Medicinal Plants)

18. மருத்துவ நோக்கில் மரணக்கிரியைகள்

19. தமிழர் வாழ்வில் குழந்தைகள் நலம்.

20. குழந்தை உணவு

21. இலக்கியத்தில் உளநெருக்கீடுகளும் மனநலனும்
- மருத் துவக் கண்ணோட்டம்

22. குழந்தை மருத்துவம்

## ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து பதிப்பித்தவை

01. கட்டு வைத்தியம்

02. சித்தமருத்துவ வாகடம்

03. சித்தமருத்துவ வாகடம் - 2

04. பரராசசேகரம் நயனவிதி
(மூலமும் உரையும்)

05. கண்டிராசா பேரில் நயனவிதி என்னும் இலங்கைச் சிங்க மன்னன் நயனவிதி
(மூலமும் உரையும்)

06. செகராசசேகரம் சர்ப்பசாஸ்திரம்
(மூலமும் உரையும்)

07. தமிழ் மருத்துவ அகராதி



# நூலாசிரியர் பற்றி....

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | Dr.சே.சிவசண்முகராஜா |
| **தந்தையார்** | : | சு.சேதுமாதவ ஐயர் |
| **தாயார்** | : | சே. மீனாட்சியம்மா |
| **பிறந்த ஆண்டு** | : | 1959 |
| **ஆரம்பக்கல்வி** | : | யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை (1964 - 1970) |
| | : | யா/கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி (1971 - 1979) |
| **சமஸ்கிருதக் கல்வி** | : | சுன்னாகம் சதாசிவ பிராசீன பாடசாலை |
| **பட்டப்படிப்பு** | : | யாழ். பல்கலைக்கழகம் (1985 - 1989) |
| **பட்ட மேற்படிப்பு** | : | தமிழ்நாடு டாக்டர் M.G.R. மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை, இந்தியா (1997 - 2000) |
| **பதவிகள்** | : | உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம் (1990 - 1992)<br>மருத்துவ உத்தியோகத்தர் - சித்த போதனை வைத்தியசாலை (1992 - 2000)<br>சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம் (2000 இலிருந்து) தற்போது சித்த மருத்துவப்பிரிவின் தலைவர் |
| **எழுதிய நூல்கள்** | : | 31 |
| **கட்டுரைகள்** | : | பல |
| **விருதுகள்** | : | சாகித்திய மண்டல விருது, கொழும்பு தமிழ்ச்சங்க விருது, அரச கரும மொழித் திணைக்கள விருது, வடகிழக்கு மாகாண சபையின் உயர்கல்விக்கான விருது, இலங்கை இலக்கியப் பேரவைப் விருது என்பன இவர் எழுதிய நூல்களுக்கு கிடைத்த விருதுகளாகும். |



உடுவிற்குளம்




வழுக்கையாறு



கந்தரோடைக் குளம்
(தென்மேற்கு)



கந்தரோடைக் குளம்
(தென்கிழக்கு)



ஆவுரோஞ்சிக்கல்



சுமைதாங்கியும்
ஆவுரோஞ்சிக்கல்லும்

ISBN 978-955-44239-3-0

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில். 077 3068982